பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஏப்ரல் 2024



## பவானி ஆற்றங்கரையில் ஒரு பைந்தமிழ்ச்செம்மல்

பக்கம் 32


வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – ஏப்ரல் 2024

628


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!


ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறுக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு உதவி :

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச்
சாலை வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களுக்கு நெஞ்சார்ந்த வணக்கம்!

'நெஞ்சோடு நெஞ்சம்' மூலம் உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி! ஒரு திங்களாகத் தொடரும் உபவாசத்தில், ஐம்புலன்களையும் அடக்கி நன்மைகளைத் தேடி இறையோடு நெருக்கமாகி இருப்பீர்கள். இந்த பண்பு எப்போதும் தொடர பிரார்த்திப்போம். மலரப் போகும் ஈத்பெருநாள் கொண்டாடும் அனைவருக்கும் நலமாக அமையட்டும். அதனோடு தொடர்ந்து வரும் சித்திரை வருடப்பிறப்பும், கொண்டாடும் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களையும் நல்கட்டும்!

வசந்தகாலத்தின் எழிலை ரசித்தபடியே இம்மாதம் வரிசைகட்டி வரவிருக்கும் விசேட தினங்களையும் மனதில் உள்வாங்கி, மனதிலும் பசுமையைப் படரவிடுவோம். உலக சுகாதார தினம் நம்மை நலம் விசாரிக்க, உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினத்தையும் நாம் வரவேற்று, நம் ஆக்கபூர்வமான படைப்புக்களோடு, புத்தாக்க முயற்சியிலும் ஈடுபட முனைவோம்.

வரும் 17 ஆம் திகதி ஜப்பான் பிரசவித்த ஹைக்கூ கவிதைகளுக்கான நாள் சர்வதேச ரீதியாக கொண்டாடப்படவுள்ளதையும் நினைவு கூர்வோம். ஹைக்கூவானது மொழிகள் கடந்து உலகையே வியாபித்து நிற்குமளவிற்கு பாரிய வளர்ச்சி கண்டுள்ளதைப் போற்றுவோம். அத்தோடு நாம் நேசிக்கும் உலக பாரம்பரிய தினமும், உலக புவி தினமும், உலக புத்தக தினமும் நம் கரம் கோர்க்கக் காத்திருக்க, நம் எதிர்கால சந்ததிக்காக சிதைவடையாமல் இவைகளைக் கொண்டு சேர்ப்பது நமக்குள்ள தார்மீகக் கடமை என்பதை உணர்ந்து நேசத்துடன் செயல்படுவோம். அப்போது எல்லோர் மனங்களிலும் வசந்தம் பூக்கும். அனைவருக்கும் ஈத் பெருநாள் நல்வாழ்த்துகளோடு, சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

என்ற வள்ளுவனின் சொல்லுக்கேற்ப ஒவ்வொரு தாய்க்கும் தந்தைக்கும் தன் மகனை இந்த உலகம் சான்றோன் எனக் கூறக் கேட்பதை விட பெருமிதம் தரக் கூடியது வேறு எதுவாக இருக்க முடியும்?!

இதுவே ஒவ்வொரு பிள்ளைக்கும் பெருமிதம் தரக் கூடியதாக இருப்பது எது தெரியுமா? தன்னுடைய உலகமான தன் பெற்றோர் தன்னைப் புகழ்வதைக் கேட்பதே.

ஆனால் இந்த உலகமே தன் பிள்ளையைப் புகழ வேண்டும் என விரும்பும் பெற்றோர்கள் அவர்களை தட்டிக் கொடுத்து வளர்த்து அதை சாதிப்பதில்லை. கொட்டிக் கொட்டியே வளர்க்கிறார்கள் என்கிறது மன இயல் ஆய்வுகள்.

இந்த ஆய்வுகள்... ஒவ்வொரு வீட்டிலும் தவிர்க்க முடியாத பிரச்னையாக இருப்பது பெற்றோருக்கும் பிள்ளைக்குமான கருத்து வேறுபாடும், பெற்றோரின் கண்டிப்பும் தான் எனக் கூறுவதோடு அதீத குறை கூறி வளர்க்கப் படும் பிள்ளைகள் தன்னம்பிக்கை குறைவானவர்களாகவும், தைரியமற்றவர்களாகவும் வளர்வதோடு, மனஅழுத்ததிற்கும் ஆளாகிறார்கள், குறைகளையே கேட்டு கேட்டு வளரும் அவர்கள் பாஸிட்டிவான சிந்தனைகள் இல்லாமல் நெகட்டிவான சிந்தனை மிக்கவர்களாகவும், தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் குறை காணக் கூடியவர்களாகவும் வளர்கிறார்கள் என்று அதிர்ச்சி தகவல் தருகிறது.

ஃப்ரென்ச் நாட்டின் புகழ் பெற்ற கட்டுரையாளரான “ஜோசப் யுபர்ட்” (Joseph Joubert), “குழந்தைகளுக்கு குறை சொல்லிக் கொண்டே இருக்கும் விமர்சகர்கள் தேவையில்லை, அவர்களுக்கு நல்ல முன் மாதிரியே தேவை” என நச்சென்று முன் வைக்கிறார்.

# வளரும் நிறை


Dr.ஃபஜிலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்




நம் பிள்ளைகளை நாம் குறை சொல்லா விட்டால் பின் எப்படி திருந்துவார்கள் இது ஒவ்வொரு பெற்றோரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

உண்மையில் ஒரு மாற்றுக் குறை யில்லா பிள்ளையை நான் உருவாக்கி இருக்கிறேன் என்று இந்த உலகிற்கு மார் தட்டிச் சொல்ல வேண்டும் என்று நாம் நினைப்பது தவறில்லை தான். ஆனால் அதனால் நம்மையுமறியாமல் என்ன செய்கிறோம் அவர்களிடம் இருக் கும் நிறைகளையெல்லாம் நாம் மிக இயல் பாக எடுத்துக் கொள்கிறோம். அதைப் பற்றி சிறிதளவு கூட அவர்களிடம் சிலாகித்துப் பேசுவதில்லை. ஆனால் இதுவே குறைகளைக் கண்களில் விளக் கெண்ணையை விட்டுக் கொண்டு துருவித் துருவி பார்த்து சரி செய்ய வேண்டும் என்று முனைகிறோம். இதில் அந்தக் குழந்தைக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறோம் உன்னி டம் குறையே இருக்கக் கூடாது என்று மட்டுமா சொல்லித் தருகிறோம் நீயும் இப்படித் தான் மற்றவரிடம் என்ன குறை இருக்கிறது என்று உற்றுப் பார்த்து சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதைத் தானே அந்த பிஞ்சு மனதில் விதைக்கிறோம். ஏனென்றால் ஒரு குழந்தை பிறந்து ஏழு வயது வரை தன்னைச் சுற்றி நடப்பவற்றிலிருந்தே எல்லாவற்றையும் அப்படியே கற்றுக் கொள்கிறது. நல்லதும் அல்லதும் நம்மிடம் இருந்து தான் அவர்களுக்கு தொடர்கிறது.

வாழ்வியல் பட்டறை ஒன்றில், எப்போது பார்த்தாலும் என் கணவர் என்னிடம் குறை கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறார் என்று அங்கலாய்த்த பெண்ணிடம் அந்த பயிற்சியாளர் கேட்டார், ‘உங்கள் பையன் எப்படி இருக்கிறான் நன்றாகப் படிக்கிறானா?’

நாம் கணவரைப் பற்றி பேசினால் இவர் அதற்கு பதில் சொல்லாமல் நம் பையனைப் பற்றி கேட்கிறாரே என்று சம்பந்தமில்லாத அவர் கேள்வியால் கொஞ்சம் எரிச்சலடைந்த அந்தப் பெண், “படிப்பு பரவாயில்லை நல்ல மார்க் தான் வாங்குகிறான். ஆனால் பொறுப்பு என்பது கொஞ்சம் கூட இல்லை. எதையும் எடுத்த இடத்தில் வைப்பதில்லை. அவன் தம்பியிடம் எதற்கெடுத்தாலும் சண்டை, அப்படி, இப்படி என குறை களை ஒரு ஆதங்கத்தோடு அடுக்கிக் கொண்டே போகத் தொடங்கினார். அவர் முடிப்பதற்காகக் காத்திருந்த பயிற்சி யாளரும், அது முடிவதாகத் தெரியவில்லை என்பதால் வேறு வழியில்லாமல் அவர் குறைகளினூடே இடை மறிக்கிறார்.

இதையெல்லாம் நீங்கள் என்னிடம் தான் சொல்கிறீர்களா இல்லை உங்கள் பிள்ளையிடமும் சொல்லி இருக்கிறீர்களா?

என்ன கேட்கிறீர்கள் அவனிடம் சொல் லாமலா ஒவ்வொரு முறையும் அவன் குறைகளை சுட்டிக் காட்டுவதிலே தான் என் பொழுதே போகிறது”

“ஏன்?” இது பயிற்சியாளர்.

சொன்னால் தானே தெரியும். அப்போது தானே திருந்துவான். அவன் அவனைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தான் சொல்கிறேன். ஆனால் எங்கே திருத்திக் கொள்கிறான், கோபம் தான் படுகிறான். நாம் ஏதோ அவனிடம் குறை கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்று எரிச்சல் தான் வருகிறது அவனுக்கு என்றார் சற்று முன் தன் கணவர் தன்னிடம் குறை கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறார் என்று எரிச்சல் பட்ட அந்தப் பெண்.

இது தான் நிதர்சனம். நாம் குறை

சொல்லும்போது நாம் அவர்கள் மேல் அக்கறை எடுத்து திருத்துகிறோம் என்று பலமாக நம்புகிறோம். ஆனால் இதுவே நம்மை யாராவது குறை சொன்னால, "ஏன் இப்படி இருக்கிறார்கள்?! எப்போது இவர்கள் திருந்துவார்கள்'' என்று பலவீன மாகித் துடிக்கிறோம்.

படிப்பில் ஒரு குழந்தை கொஞ்சம் மார்க் குறைத்து வாங்கி விட்டால் போதும் அது என்ன செய்தாலும் குற்றம். எது கேட்டாலும் சாடைப் பேச்சு. அது சற்று நேரம் டி.வி பார்த்தால் கூட, "இப்போது என்ன டி.வி. கேட்கிறது முதலில் மார்க் அதிகம் வாங்கப் பார்" என்கிறோம்.

அந்தக் குழந்தை சட்டை வாங்கிக் கேட்டாலும், ஸ்வீட் வாங்கிக் கேட்டா லும் வாங்கிக் கொடுப்பதில் நாம் தவறுவதில்லை. ஆனால் நம் செயலின் முடிவு அவர்கள் தவறுகளை சுட்டிக் காட்டுவதிலும் அதை அவர்கள் மறந்து விடக் கூடாது என்பதிலும் தான் முடிகிறது.

நாம் செய்வது சரிதானா? வாழ்வியல் என்ன சொல்கிறதென்று பார்ப்போம்.

பிள்ளைகளை நாம் ஒவ்வொன்றுக்கும் குறை சொல்லிக் கொண்டிருக்கும் போது அவர்கள், ''தாங்கள்'' எதற்கும் தகுதி இல்லாதவர்கள் என தாழ்வு மனப் பான்மைக்கு ஆளாகி தன்னிடம் ஏதோ குறை இருப்பதாக நம்பத் தொடங்கிவிடுகிறார்கள். அதனால் மற்றவர்களை விட்டும் தனித்து இருப்பதையே அவர்கள் விரும்புகிறார் கள். தன் மனதில் இருப்பதை பிறரிடம் சொல்ல அச்சப்பட்டு தனக்குள்ளே பேசிக் கொள்ளும் இயல்பை வளர்த்துக் கொள்வதோடு, தன் பெற்றோர்கள் தங்களை வெறுக்கிறார்கள் என மன உளைச்சலுக்கும் அவர்கள் ஆளாகி விடுகி றார்கள் என அச்சுறுத்துகிறது வாழ்வியல்.

தவிர, குறைகளோடும் நிறைகளோடும் தன்னை நேசிக்க நம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தால் தானே, அப்படி தன்னை நேசிக்கக் கூடிய ஒருவராக நம் பிள்ளைகளை நாம் வளர்த்தால் தானே அவர்களாலும் குறைகளோடும் நிறைகளோடும் மற்றவர்களை ஏற்றுக் கொண்டு நேசிக்க முடியும். இல்லை யென்றால் இப்படித்தானே அவர்களும் மற்றவர்களிடம் குறை கண்டு பிடித்துக் கொண்டிருப்பார்கள்.

உண்மையில், குறை சொல்ல வேண்டிய கட்டாயம் தவிர்க்க முடியாமல் ஏற்படுமாயின், நாம் கொஞ்சம் நேரம் அதற்காக ஒதுக்கி நாம எதற்காக இந்தக் குறையை சொல்கிறோம், அந்தக் குறையை மட்டும் திருத்திக் கொண்டால் அந்தப் பிள்ளை எவ்வளவு பெரிய சாதனையாளனாக வரமுடியும் என்று நம்பிக்கை கொடுக்கக் கூடியதாக அது இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் ஒரு குறையை சொல்ல முற்படும்போது அந்தக் குழந்தையுடைய பத்து நிறைகளை அது தாங்கி வர வேண்டும்.

நீ சோம்பேறி, நீ எதற்கும் இலாயக் கில்லாதவன் என்று நம் பிள்ளைகள் நன்றாக வரவேண்டும் என பெற்றோர்கள் போகிற போக்கில் குறை சொல்லிவிடலாம். ஆனால் இதை மீண்டும் மீண்டும் ஒரு பிள்ளை கேட்கும்போது அதை அவன் ஆழ்மனம் நம்பத் தொடங்கி அவனையுமறியாமல் அவன் அதுவாகவே மாறி விடுகிறான்.

குறைகளைக் கேட்டு கேட்டு வளரும் பிள்ளைகள் வளர்ந்த பிறகும் யார் என்ன சொன்னாலும் அது அவர்களுக்கு குறை சொல்வதாகவே படும் மட்டுமல்ல அதனால் மனதில் ஆறாத ரணம் ஏற்பட்டு என்றென்றும் அது ஒரு உறுத்தலாகவே மாறி விடுகிறது.

## விடியல்

மார்கழி மாதத்தில்
வீட்டின் முன் கோலமிடும்
மங்கையரைப் போல்
மனமகிழ்ந்து
அதிகாலை எழுதல் வேண்டும்.

நகரத்து மக்களின்
விழித்தலைச்
சுறுசுறுப்பாக்கும்
தேநீர்க்கடைக்காரர்போல்
செயல்பட வேண்டும்.

விடிந்தும் விடியாப் பொழுதில்
வீட்டார்களின் எதிர்பார்ப்பை
ஈடுகட்டும்
பால்காரரைப் போல்
பரபரப்பாக ஓடவேண்டும்.

அடிவயிற்றிலிருந்து
சத்தமெடுத்து தெருவையே
திரும்பிப் பார்க்கச் செய்யும்
கீரைக்காரப் பெண்மணிபோல
நடக்க வேண்டும்.

பறக்கும் திசையெல்லாம்
கிழக்கென
இலக்காக்கும் பறவை போல
நம் பயணத்தைத்
தொடரவேண்டும்.

ஒரு நாளின் தொடக்கம்
இதுவெனில்
ஒவ்வொரு நாளும்
நம் வாழ்க்கையில் மலரும்
அர்த்தமுள்ள விடியல்.



மு.மகேந்திர பாபு
மதுரை , தமிழ்நாடு .

அதனால் நாம் அவர்கள் நிறையில் கவனம் வைத்து, முற்றிலுமாக குறை சொல்வதை தவிர்த்து விடுவது அல்லது முடிந்த வரை குறைத்து விடுவது தான் நல்லது.

“குறைகளை சுட்டிக் காட்டுவதை விட்டும் நிறைகளைக் காண்பதே சிறந்த பலன் தரும்” என அறிவுறுத்துகிறார் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த புத்த தத்துவவாதியும் சிறந்த கல்வியாளருமான “டைசகு இக்கிடா” (Daisaku Ikeda)

நிறைகள் பெரும்பான்மையாக சுட்டிக் காட்டப் படும்போது குறைகள் தானாக நிவர்த்தி செய்யக் கூடியதாக ஆகிவிடும் என ஆருடம் சொல்கிறார் அமெரிக்க பத்திரிகையாளர் “ஜூடித் மார்ட்டின்“ (Judith Martin)

இதில் ஆழ்மன இயல் சொல்லும் இரகசியம் என்ன தெரியுமா, நீங்கள் அவர்களின் நிறைகளைப் பார்த்து தட்டிக் கொடுத்தால் அதில் அவர்கள் கவனம் செல்லும். அந்த நிறை வட்டம் பெரிதாகிக் கொண்டே போகும் அப்படிப் போகப் போக நீங்கள் சுட்டிக் காட்டாத, கவனிக்கப் படாத குறைகள் சுருங்கி, சுருங்கி, ஒரு புள்ளியாய் மறைந்து அவர்களை விட்டும் நீங்கி விடும் அல்லது அது அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக இல்லாமல் மாறி விடும் ஆனால் அதே நேரம் நீங்கள் குறைகளையே சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தால் அந்த குறைகள் அவர்களிடம் விடாப் பிடியான கறையாகி மாறி விடும் வாய்ப்புண்டு என்ற நமக்கு எச்சரிக்கை தருகிறது.

உண்மைதானே எதற்கு தண்ணீர் ஊற்றுகிறோமோ, அது தானே உயிர் பெறும்.

# நேசம்



நாணலோடு உரசிச்
செல்லும் தென்றல்
தேனெடுக்க வட்டமிடும்
கருவண்டின் கண்கள்

வானத்தோடு உறவுக்
கொள்ளும் மேகம்
உடல்களின் உணர்வைச்
சொல்லும் மோகம்

நினைவுகளின் பயணம்
தொடர்ந்திடும் வேகம்
காரணம் காதல்
தரும் யோகம்.

விழிகளோ கவிதைகளின்
உற்பத்தி கூடம்
மொழிகளே இல்லாமல்
நடத்திடும் பாடம்

ஒளியின்றி இசைத்திடும்
இதயத்தில் நாதம்
இவையாவும் இளமையில்
வருகின்ற வேதம்

முகத்தினில் புன்னகைப்
பூத்திடும் காலம்
அகத்தினில் ஆயிரம்
பட்டாம்பூச்சிகளின் ஜாலம்

கோடையில் மனமது
குளிர்ந்திருக்கும் நாளும்
இரவுகளின் பொழுதுகளைக்
கனவுகளே ஆளும்

இத்தனையும் நேசத்தில்
உருவாகும் கோலம்

- லீ.லியாகத்அலி

# காற்று வெளியிடை...

'சிறுகதைச் செம்மல்'

**இரஜகை நிலவன்**

சாகுலை கண்டிப்பாக நான் சென்னை விமான நிலையத்தில் எதிர் பார்க்கவில்லை. அவன் கடவுச்சீட்டு சரி பார்க்கும் வரிசையில் எனக்கு முன் மூன்றாவது ஆளாக நின்று கொண்டிருந்தான்.

'சத்தம் போட்டுக்கூப்பிடலாமா?' என்று நினைத்தேன். அநாகரீகமாக இருக்கும் என்று உணர்ந்து கொண்டு பின்னால் நின்றவரிடம்' ஒரு நிமிடம். என் நண்பரை பார்த்து விட்டு வருகிறேன்' என்றுசொல்லி விட்டு முன்னால் வந்து 'என்ன சாகுல் எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

சாகுலும் என்னை எதிர்பார்க்கவில்லை என்பது அவர் முகத்தில் ஏற்பட்ட ஆச்சரிய குறியே எனக்கு காட்டித்தந்தது.

'என்ன பவுல் எப்படி இருக்கீங்க?' என்ன இந்தப்பக்கம்?' என்றார்.

'சாகுல் நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள்?' அவர் கையைப்பிடித்துக் குலுக்கியவாறு புன்னகைத்தேன்.

'அது தானே பார்த்தேன். உங்கள் சிரிப்பே தனி தானே. அதைக் காணவில்லை என்று நினைக்கு முன்னே சிரித்து விட்டீர்கள்..' அவனும் சிரித்துக்கொண்டே சொன்னான்.

'கண்டிப்பாக சினிமாவில் ஜெயிக்காமல் ஊருக்கு போக மாட்டேன் என்றீர்கள். இப்போது திரும்ப அபுதாபி பயணமா?' கொஞ்சம் கேலி கலந்தே கேட்டேன்.

என் கேலியை உணர்ந்த சாகுல், ' பவுல். நான் சொன்னதற்கு என்றுமே பின் வாங்கியதில்லை. எனக்கு ஒரு நண்பர் கொஞ்சம் பணம் தர வேண்டியதிருக்கிறது, அதற்காகத் தான் இந்த பயணம்.

மற்றபடி, நான் எடுத்த முடிவில் என்றுமே பின் வாங்கவில்லை.

ஆறு மாதமிருக்குமில்லையா?. இங்கே அபுதாயில் இவ்வளவு நல்ல வேலையை விட்டு விட்டு திரை இசைப்பாடல் எழுத .. எடுத்த முயற்சி எல்லாம்... நன்றாகத்தான்... போய்க்கொண்டிருக்கிறது.. நாம் விமானத்தில் சந்திக்கலாமா?' என்று சொல்லி விட்டு முன்னே வரிசையில் சென்றான்.

எனக்கு அவன் சொன்னத் தொனியில் உள்ள நம்பிக்கை எவ்வளவு அழுத்தமாக இருந்தது என்று ஆச்சரியமாக இருந்தது.

எவ்வளவு பேசியிருப்போம்... இன்னும் சினிமா பாடலாசிரியராகப் போகிறேன் என்கிறானே... தலையைச் சிலிர்த்துக் கொண்டே வரிசையில் நகர்ந்தேன்.

அந்த விடுமுறை நாளான வெள்ளிக் கிழமையை இன்னும் மறக்கமுடியவில்லை.

•••

அபுதாபியின் ஒரு பகுதியில் இருந்த அங்குள்ள ஒரு அழகிய தீவிற்கு அந்த விடுமுறை நாளில் சென்றிருந்தோம்.

உணவு வேளைக்கு முன், இரண்டு பேர், வெள்ளரிக்காய் வெட்டிக்கொண்டிருக்க, அங்கே நடந்த வாதத்தில் சூடாகிப் போய்விட்ட நான், 'சாகுல் உங்ககிட்டே ஏற்கனெவே சொல்லியிருக்கேன். என் நண்பனின் அண்ணன் ஒருவர் திரைத் துறையில் உயராமல் ஊருக்குத் திரும்ப மாட்டேன் என்று சென்னைக்கு சென்றவர், கல்யாணம் கூட கட்டிக்கொள்ளாமல், இளமையை இழந்து நரை தட்டி...இன்னும் கோடம்பாக்கத்தில் அலைந்து கொண்டு...

இவ்வளவு நல்ல சம்பளம்... நல்ல வேலை.. பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்... இதை விட்டு விட்டு... இப்போ போய் சினிமாவிலே பாட்டு எழுதப் போகிறேன்... என்கிறீர்கள்..' என்றேன்

சாகுல், என்னை பேச விடாமல், ' பவுல், எத்தனை முறை சினிமா பார்க்கும்போது, பாடல்கள் யார் எழுதியிருக்கிறார்கள் என்று முதலில் எழுத்து (டைட்டில்) போடும்போது பார்த்திருக்கிறோம்

அதிலே 'பாடல்கள் வசந்த சாகுல்' என்று வர வேண்டாமா? அப்படி வரும் போது... எப்படி இருக்கும். யோசித்துப் பாருங்கள். சாதாரணமா ஒருக்கா தினமலர் வாரமலரிலே கவிதை வந்ததற்கே நான் எப்படி வானத்தில் பறந்தேன் என்பது உங்களுக்குத் தெரியாததா? அந்த ஆத்ம திருப்தி... இந்த ரெண்டு லட்ச சம்பளத்திலே வருமா?'

சிரித்தான் சாகுல்.

'ஆமா..நீங்க போனவுடனே உங்களுக்கு சிவப்பு கம்பளம் விரிச்சி 'வா ராஜா. என் படத்துக்கு எல்லா பாட்டும் நீயே எழுது!' என்று தூக்கி கொடுத்து உங்களை பாட்டு எழுதச்சொல்லப் போகிறார்களாக்கும்' என சாதாரண கேலி கலந்தே சொன்னேன்

சிரித்துக்கொண்டே 'நீங்கள் இந்த வேலைக்கு வருவதற்கு எத்தனை முயற்சிகள் எடுத்தீர்கள்?' என்று கேட்டான் சாகுல்

' இந்த வேலைக்கு வேறு யார் வருவதும் மிக்க எளிது சாகுல்.

திரைத்துறை அப்படிப் பட்டதல்ல என்பது என்னை விட அதிகமாகவே உங்களுக்குத்தெரியும்'

'பவுல். சினிமாவிற்கு வருவதற்கு... அங்கே பாட்டெழுதுவதற்கு கண்ணதாசன், வாலி, நம்ம தாமரை மேடம், முத்துக்குமார் என்று ஒரு வரிசையே சொல்லிகிட்டே போனாலும் அவர்களிடம் ஆரம்ப நாட்களிலே இருந்த வலிகளின் ஓசைகளை நானும் நெறய வாசிச்சிருக்கேன் சார்'

'ஒரு முறை நம்ம சிவகாசி படம் பார்க்கும் போது டைரக்டர் பேரரசே எல்லா பாடலையும் எழுதியிருக்கிறார்னு நீங்களே சொல்லியிருக்கீங்க. அப்படியிருக்கும் போது....'

'என்ன இழுக்கிறீங்க... என்ன நான் கோடம்பாக்கத்திலே நின்று பிச்சை எடுக்கப் போற மாதிரிப் பேசறீங்க..'

'ஆமாம். சாகுல். அது தான் உண்மை.. ஆனால் உங்க ஆத்ம திருப்திக்காக உங்க குடும்பம்...'

'நடுத்தெருவிலே நிக்கும் என்கிறீர்களா?' அவன் வார்த்தைகளில் கொஞ்சம் சூடேறியது

இடையில் வந்த கண்ணன் 'ஏய்.. பிக்னிக் வந்தோமா? சண்டை போட வந்தமா?' ஒழுங்கா சாப்பாட்டை பாருங்

கப்பா‘ என்றான்.

‘நாம் ஏற்கனெவே நிறைய தடவை இதைப் பற்றி பேசியாகி விட்டது. பவுல் நீங்க என் மேல் எவ்வளவு பாசம் வச்சிருந்தா என் வருங்காலத்திற்காக இவ்வளவு பேசுகிறீர்கள் என்று எனக்கு புரிகிறது.. சரி விடுங்க.. எனக்குள்ளே எரிகிற தழலைப் பற்றி உங்களுக்குப் புரியாது‘ என்றான் உணவு பரிமாறிக்கொண்டே..

மறு நாள், அடுத்த நாள் என்று பல முறை சொல்லிப்பார்த்தேன்

அவன் வேலையை விட்டு விட்டு சென்னைக்கு கிளம்பி விட்டான்

•••

என்னுடைய பாஸ்போர்ட், விசா எமிகிரேசன் எல்லாம் முடித்து விட்டு லாஞ்சுக்குள்ளே வந்த போது ‘வாங்க பவுல் சார்‘ என்று வரவேற்றான்.

’சாகுல் கண்டிப்பாக நம்மை பார்க்க விரும்பாமல் ஓடியிருப்பான்’ என்று தான் எண்ணியிருந்தேன். அவன் என்னை எதிர்கொண்டு அழைத்து காபி கடைக்குள் (கப்புசின் காபி ஷாப்) கூட்டிப் போய் அமர்த்தி, ‘பவுல் உங்களுக்கு விருப்பமான காபி‘ என்று வாங்கி என் முன் வைத்து விட்டு அவனும் பருக ஆரம்பித்தான்

’சாகுல் பேசட்டும் ’ என்று அமைதியாக அவன் முகம் பார்த்துக் கொண்டே காபியை இரசித்தேன்.

‘என்ன அமைதியாகிட்டீங்க?‘ என்றான் சாகுல்

‘சொல்லுங்கள் சாகுல். எந்த அளவிற்கு வந்திருக்கீங்க? நீங்கள் விரும்பினால் இன்னும் நம்ம கம்பெனியிலே உங்களுக்காக கேட்டுப்பார்க்கிறேன்‘

‘நாலு ஆல்பம் போட்டாச்சு.. கையிலே இருந்த பணம் காலியானாலும் என் வீட்டுக்காரி எனக்கு முழு உதவியாக இருக்காங்க...‘

‘ம்..ம்... அப்புறம்?‘

‘ஒரு படத்திலே ஒரு பாட்டு எழுதி இசையமைச்சாச்சு... இனி சினிமாவிலே எப்படி வருதுண்ணு எதிர் பார்த்துகிட்டே இருக்கேன். அடுத்தாலே ஒரு சினிமாவிலே வாய்ப்பு தர்றதா சொல்லியிருக்காங்க..‘

‘எனக்கேன்னவோ சாகுல்...‘ என்று நான் சொல்லி முடிப்பதற்குள்

‘கவலையே படாதீங்க... பவுல் அடுத்த முறை நாம் சந்திக்கும் போது கண்டிப்பாக... நீங்க எதிபார்க்கின்ற வெற்றிபெற்ற ’வசந்த சாகுலா’ தான் பார்ப்பீங்க. வேணும்ணா பாருங்க..அடுத்த முறை துபாய்த் தமிழ்த்தேர் நிகழ்விற்கு கூட என்னை முக்கிய விருந்தினர்களில் ஒருத்தரா அழைக்கத்தான் போறீங்க...‘ என் தோளில் தட்டிச் சொன்னான்.

விமானத்திற்கான அழைப்பு அறிவிக் கப்பட.. அவனுடைய அசாதாரண நம்பிக்கையைக் கண்டு, அசந்து போய், ‘வாழ்த்துக்கள்‘ என்று அவனைக் கட்டிப் பிடித்து வாழ்த்துச்சொல்லி விட்டு பையை எடுத்துக் கொண்டு விமானத்தை நோக்கி கிளம்பினேன்.

’அவனுடைய அசாதாரண நம்பிக்கை எப்படியிருக்கிறது’ என்று எனக்கே இன்னும் விரிந்த வியப்புடன் கூடிய ஆச்சரியாமாக இருந்தது.

■



# வானமென பசுமை

மரத்திற்கொரு பறவையென
இளைப்பாறுதல் தொடங்கிட
கிளைகளும் பூக்களுமென
வாசத்தில் புன்னகைக்க
நீளும் வனத்தின் பாதையில்
கால்தடங்கள் விரிந்திருக்க
ஓடையிலும் சுனைகளிலும்
உயிரமுதம் பருகிநிற்க
வானமென பசுமையும்
படர்ந்திடும் போதினிலே
வரைந்து நின்ற சிறுவனுக்குள்
பெருமூச்சாய் பெருகி வருகிறது
கொசு வலைக்குள் மூச்சுமுட்டும்
எட்டாம் மாடியின் இருத்தல்.

**இளையவன் சிவா**






# கைபேசி என்னும் கூட்டிலே

உலகமே மாறுதப்பா மாறுதப்பா
கணினி உலகமாய் மாறுதப்பா!
கையிலே உலகம் வந்ததே
கைபேசி என்னும் உருவிலே!
சிறகடித்து பறக்கும் பறவைகளும்
தானேவந்து நான்கு சுவற்று கூட்டிலே
அடையுதப்பா அடையுதப்பா
புலம் முகநூலென்ற கூட்டிலே!
நிலவை காட்டி குழவிக்கு சோற்றை ஊட்டும்
அன்னை கைபேசியை காட்டி சோறு ஊட்டும்
காலமும் வந்துவிட்டதப்பா வந்துவிட்டதப்பா!
கண்கள் உன்னை நோக்க நோக்க கண்களும்
கெட்டு போகுதப்பா!
அறியாத செய்திகளையும் உன்னால்
அறிந்தோம்ப்பா அறிந்தோம்ப்பா!
கையால் தொடும் தூரத்தில் உள்ள
உறவுகளையும் மறந்தோம்ப்பா!
பல இன்பங்களையும் அடைந்தோம் பல
துன்பங்களையும் அடைந்தோம்
கைபேசியை உருவாகிய மனிதர்கள் யாவும்
கைபேசியின் வலையிலே
சிக்கினார்ப்பா சிக்கினார்ப்பா!!!

**கோ.பவித்ரா**
காஞ்சிபுரம்




# ‘வயலான் குருவி’

**ரசனைக்குறிப்பு**

இன்றைய இலக்கிய வடிவங்களுள் நாவல் பெரியது. எனினும் நாவல் விரும்பி வாசிக்கும் வாசகர்களும் சற்று அதிகம் தான். வாசிப்பின் மூலம் பல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரே இடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் சுற்றிப்பெற்ற அனுபவமும், அறிவும், வாசிப்பு மூலம் கிடைத்து விடுகிறது.

அந்த வகையில் அண்மையில் வாசிக்கக் கிடைத்த ‘வயலான் குருவி‘ நாவலைக் கூறுவது இங்கு பொருத்தமாகும். சுமார் முப்பது வருடகால இலக்கிய அனுபவமிக்கவரான எழுத்தாளர் அஸீஸ் எம் பாயிஸ் அவர்கள் எழுதிய வெற்றிப்படைப்புதான் இந்த ‘வயலான் குருவி‘ நாவலாகும்.

இந்த நாவலானது மூன்று அரச விருதுகள் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. ‘உயிர்ச்சிறகுகள்‘ என்ற 178 ஹைக்கூ கவிகள் கொண்ட படைப்புக்கும் சொந்தக்காரரான இவர், கீறல் பத்திரிகை ஆசிரியருமாவார் .

இந்த நாவலைக் கையில் எடுத்தவுடன் முதலில் இதன் அட்டைப்பட வடிவமைப்பே நம்மை பெரிதும் கவர்ந்து விடுகிறது. ஓர் ஒற்றைக்கிளையில் அழகிய மஞ்சள் வர்ணக்குருவி. ஓ... இதுதான் வயலான் குருவியோ என நினைத்து உள்ளே கதைக்குள் நுழைந்தால், அங்கே ஒரு இனத்தின் வரலாறே நாவலாக மிளிர்கிறது. கதாசிரியரும், அவரின் வயலான் குருவி நெல்மணிகள் பொறுக்குவது போல, பல விடயங்களை சேகரித்து, இரண்டு தலைமுறைகளுக்கான வாழ்வியல் கோலங்களை அவருக்கே உரிய பாணியில் மிக நேர்த்தியாக இரு குடும்பப் பின்னணியை மையமாக வைத்து ஒரு கிராமத்தின், இனத்தின் வரலாறையே நாம் எல்லோரும் அறியும் படி தெளிவாக தந்திருக்கிறார்.

இக்கதையானது, நவீன உலக மேல் தட்டு மாந்தரின் வாழ்வியலிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நிற்கிறது. சேனைப் பயிர்ச்செய்கை, விவசாய நில ஆக்கிரமிப்பு, வறுமை, பாடசாலைக்கல்வி இடைநிறுத்தப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களது கல்வி சிதைக்கப்படுதல், இனவெறி, அரசியல் என்பன இவர் உணர்வுகளில் ஏற்படுத்திய தாக்கம் என்பது தான் உண்மை.

இலக்கியம் என்பது வேறல்ல அது காலத்தின் கண்ணாடி என்பது தான் மிகப் பெரும் உண்மை.

இக்கதையில் கிழக்கிலங்கை வாழ் கிராமிய மக்களின் பேச்சு வழக்கு 50 வருடங்கள் பின்னோக்கியதான வாழ்க்கை முறை, வட்டானை, போடியார் என பழமை நெடி கொஞ்சம் தூக்கலாக இருந்தாலும், இவர் நாவல் முழுக்க உபயோகப்படுத்தியிருக்கும் அழகான உவமான உவமேயங்களால் சொல்ல வந்த விடயம், வாசகர் மத்தியில் இலகுவாக சென்றடையும் என்பது தெளிவு.

குருவி வெரசர, கண்ணாக்குடி, கரக்கடயில, கண்ணேரங்குடி என்பன போன்ற மறந்து போன கிராமியச் சொற்கள் சுவாரஸ்யத்தை தருகின்றன. ஒவ்வொரு விடயங்களையும் குறிப் பிட்டுச் சொல்ல இங்கு கால நேரங்கள் தொழுகை நேரங்களாக எடுத்துக் காட்டப் பட்டிருப்பதும் விசேடம். மறந்து போன மான்வேட்டையும் இங்கு இளைய தலை முறைக்கான சுவாரஸ்யம்.

வயல் வரப்புக்காட்சிகளின் வர்ணனை யும் சூப்பர். விடிகாலை சுடச்சுட பாலப்பம் நன்னாரித் தேனீர் கதைக்கு மேலும் சுவை.

இக்கதையில் பூமி ஆக்கிரமிப்பு, பேரின வாத சூழ்ச்சி, தொல் பொருள் ஆராய்ச்சி என்பன யதார்த்தத்தைக் கூறி நிற்கும் அரசியலோ?விஜயனின் இலங்கை வருகை போன்ற விடயங்கள் புகுத்தப்பட்டிருப்பது அறிவு சார்ந்தது.

கதையின் நாயகன் இளையவன் வயதில் மூத்தவரான நாயகி தக்குவாவை விரும்ப, அவளின் காதலை ஏற்பதா அன்றி பிள்ளை போல் வளர்த்த போடியாருக்கு செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதா என நாயகன் தத்தளிக்கும் இடம் நெகிழ்வுடன் மனதில் நிற்கிறது. ஒடஞ்சி போன விகாரைக்கு சுற்று வட்டாரக்காணி 600 ஏக்கர் என்ற கணக்கு. யார் வந்தாலும் எங்கட காணி விட்டுக்கொடுக்கப்படாது என்ற குமுறல், ஒட்டு மொத்த சிறுபான்மை இனத்துக்குமான குமுறலாக, சாடலாகி நிற்பது விவேகம். ஒலுவில் கிராம அல்லிக்குள வர்ணனையும் சூப்பர். அந்தப் பக்கம் ஒரு விசிட் போகலாமே என்றும் எண்ணத்தோன்றுகிறது.

இளையவர், தக்குவா தம்பதியினர் இனிய இல்லற வாழ்வில் உதித்த தவப்புதல்வர்கள், இந்தத் தலைமுறை யினராக, சுயநலப்போக் குள்ளவர்களாக இருப்பதும், குடும்பச்சொத்தான சேனைக் காணியை விற்று ஒரு மகன் சூறை யாடுவதும், சொந்தக் காணிப் பகுதியிலே பெற்றோர் அந்நியராக்கப்பட்டு மிகத் துயரப்பட்டு கடைசிக் காலங்கள் அந்தச் சேனைப் பகுதியிலேயே கழித்து பரிதாபமாக உயிர்நீத்தலும் இந்தக்கால தலைமுறையினர் அந்திம காலத்தில் தன் பெற்றோரை வைத்திருக்கும் நிலையினை நன்கு புலப்படுத்துகிறது. கதை முடிவில் கனத்த இதயத்துடன் கண்களும் குளமாகி விடுகின்றன .

யதார்த்தம் கைகோர்த்து நிற்கும் கிராமிய வாழ்வு இங்கே அழகான இலக்கியமாகி நிற்பதை இந்நாவலை வாசித்த ரசிகர்கள் நிச்சயம் உணர்ந் திருப்பர். நமது கதாசிரியர் இக்கதை மூலம் இலக்கிய உலகில் பேசப்படுவார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. இப்படியான வரலாறு கூறும் அற்புத நாவல் நமது இளைய தலைமுறையின ருக்கான சேமிப்பாக நமது வீட்டு புத்தக அலுமாரிகளை சிறப்பாக அலங்கரிக் கட்டுமே!

**ஏ எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**
கிண்ணியா
நூல் தேவைகளுக்கு 0776619949

# வெளிச்ச விளக்கு

காத்திருக்கும் விழிகளுக்குள் கரு வொன்றை விதைத்துள்ளேன்.
கன்னிமன புன்னகையில் கவிதை யொன்று எழுதுகின்றேன்.
நள்ளிரவு முழுநிலவில் நயமான கற்பனைகள்
நங்கை முகக் காட்சியாக நாணத்தின் பொருளுணர்ந்தேன்.

தெள்ளியதோர் மயக்கத்தில் தேவியிவள் பூமுகத்தை,
தேவதையாய் மனமேற்றி தேடலுக்குள் தேடுகின்றேன்.
புள்ளியில்லா வண்ணக்கோலம் புது வரவாய் மனமறிய,
தள்ளிவிட முடியாத தழைத்தோங்கும் கனவிலிருந்தேன்.

வெள்ளை நிலா இயக்கத்தில் வெளிச்சத் துணைத் தேடியே
விந்தைமனக் கூட்டுக்குள் விவரத்தை விதைத்து வந்தேன்
அள்ள அள்ளக் குறையாத அவள்மனதை படித்ததாலே,
ஆனந்தத் தென்றலோடு அவள் முகம் சிரிக்கக் கண்டேன்.

வழித்தட வரவேற்பில் வஞ்சியிவள் இருளகற்ற,
வந்ததோர் ஒளிக்கவிதை வானகத்துள் ஒளிரக்கண்டேன்.
பழியறியாப் பாவையிவள் பைந்தமிழாய் மனதிலிருக்க,
பார்வைக்குள் பாலமாக பனிமனம் உணரக் கண்டேன்

தையலாள் இவளிங்கே தாமரையாய் பூத்திருக்க,
மையலால் மனமொன்றி மனத்திரை விலக்கியவன்,
தைக்கின்ற வேல்போல தளிர்மனதாள் கண்ணோக்க,
தடம்மாறா மனதுடனே தங்கமுகம் கனவு கண்டான்.

மொழியறியா மௌனமங்கை மோனத் தவம் கொண்டு நிற்க,
முகமலர் ஒளிர்தரவே முத்துப்பல் சிரிப்பழகி
விழிவழி போதனையால் விளைந்ததோர் தடத்தினிலே
வெளிச்ச விளக்காகி விதியிருள் விரட்ட முனைந்தாள்.

பரணி சுப சேகர் மதுரை

# உன்னவள் நான்!

காதல் கவிதை ஒன்று
அனுப்புகிறேன் இன்று
அது உனக்கும் எனக்கும்
காலத்தால் அழியாத ஏடு
வெள்ளை காகிதம் மீது
சிவப்பு மையைக் கொட்டி
என் வரிகளை எழுதியுள்ளேன்
சிவப்பு மையா இரத்தமா என்று
ஒரு முறை சரி பார்த்துக்கொள்
காதல் என்றே என் கை பிடித்தாய்
காதலை நட்பென்று சொல்லி கைவிட்டாய்
திகைத்து நான் காரணம் கேட்டேன்
நட்பும் காதலும் ஒன்றல்ல என்றாய்
நண்பனான என்னை காதலனாக எண்ணியது
என் தவறல்ல உன் தவறு என்றாய்
காதல் என்பது வேஷம் என்றாய்
காதலை அழகாய் பொய்ப்பித்தாய்
காதலித்த காலம் மறந்து போக
காதலால் மோசம் செய்தாய்



என்னில் நுழைந்த காதலனே
காதல் என்பது உண்மைதான்
செவி தொட்டு என் இதயம் திறந்த
உன் காதல் மொழிகளும் உண்மைதான்
காதல் என்பது வேஷம் இல்லை
வேஷமிடும் காதலர்களே மெய்
பொய்யில் பிறந்ததல்ல காதல்
தூய்மையின் தரிசனமே காதல்
கல்லூரி வாசலில் எனை அழைத்து
ஆசை மொழி பேசியது பொய்யா
பரிசு பொருட்கள் அள்ளித் தந்து
என்னை களிப்படையச் செய்தது பொய்யா
அழகே அமைதி கொள்ளும் அளவு
என்னை அழகாக்கியது பொய்யா
அன்பை தேடி அலைந்த என்னை
அரவணைத்து செதுக்கியது பொய்யா
ஊரெல்லாம் நம் காதல் கதை பேச
அது உண்மைதான் என்றதும் பொய்யா

நீ என்னை காதலித்ததும் நிஜம்
நான் உன்னை ஏற்றுக்கொண்டதும் நிஜம்
நாம் வாழ்ந்த நாட்களை மறந்திடலாமா
நானின்றிய உன் வாழ்க்கை சாத்தியமா
ஏன் மாறிவிட்டாய் என் காதலனே
எதனால் என்னை விட்டுச் சென்றாய்
மனம் திறந்து பதில் சொல்
பொய்யை தவிர்த்து உண்மை சொல்
சொல்ல முடியாத காரணம் இருந்தால்
காத்திரு என்றாவது சொல்
ஆயுள் முழுவதும் காத்திருப்பேன்
உன் வருகையை எதிர்பார்த்து வாழ்ந்திருப்பேன்

**- அகீலா ஜவுபர்**
**ஏத்தாளை புத்தளம் இலங்கை**

# கமலாம்பாம் பஜரே

'நாளைக்குக் காலையில் முதல் வேலையாக கௌரியின் கணக்கைத் தீர்த்துஅனுப்பிவிட்டுத்தான்மறுவேலை'என்ற முடிவுக்கு வந்த பிறகுதான் கோமதி படுக்கவே போனாள். கணவர் என்ன சொல்வாரோ என்ற யோசனை போய், அவரை என்ன கேள்வி, அவள் எனக்கு ஒத்தாசைக்கு வந்தாளா, இல்லை அவருக்கா என்று தானே அலசி ஆராய்ந்து, இப்போது தன் முடிவில் தானே உறுதியான பிறகு தான் தூங்க எத்தனித்தாள். படுத்துக் கொள்வது வரை ஒருவர் இஷ்டம். தூக்கம் வருவதும் வராததும் அவரவர் கையிலா இருக்கிறது? நினவலைகளை நம் கட்டுப்பாட்டில் வைப்பது, கடலலைகளை கையால் நிறுத்தும் அளவிற்கு கடினமான விஷயம் இல்லையா?



கோமதிக்கு தஞ்சாவூர் தான் பிறந்த ஊர். அந்த ஊர் மண்ணுக்கே உரிய நல்ல சங்கீத ஞானம் அவளுக்கும் இருந்தது. அவளுக்கு மட்டுமின்றி அவளுடைய அக்காவிற்கும் நல்ல ஞானம். இருவருக்கும் பெற்றோர் ஒரு நல்ல ஆசிரியரிடம் பாட்டு சொல்லி வைத்தார்கள். ''இவள் அபாரமாகப் பாடுகிறாள், மேடைக் கச்சேரிகள், செய்யவைக்க வேண்டும், நன்றாக முன்னுக்கு வருவாள்.'' என்று பாட்டு வாத்தியார் கேட்டபோது 'அதெல்லாம் எதற்கு, கல்யாணத்திற்கு இருக்கிற பெண், எங்களுக்கு இஷ்டமில்லை' என்று அப்பா ஒரே அடியாக அடித்துச் சொல்லிவிட்டார். வாத்தியாருக்கும் சரி, இவளுக்கும் சரி ரொம்ப வருத்தம் தான். என்ன செய்வது? அந்தக் கால வழக்கம். பெண் பிறந்து விட்டால் நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுப்பது ஒன்றுதான் பெற்றோர்களின் ஒரே இலக்கு. என்ன செய்தால் அதற்குக் குந்தகம் வந்தவிடுமோ என்று எதற்கெடுத்தாலும் பயம்.

பாட்டு என்றில்லை, கோலமா, எம்பிராய்டரியா, பூத் தொடுப்பதா எல்லாமே கண்பார்த்ததை கை செய்யும் சமர்த்து கோமதி. அவள் அக்காவிற்கும் பத்தாம்

வகுப்பை முடித்ததும் கல்யாணம் செய்து விட்டார்கள்.

அதேபோல் பத்தாவது முடித்து ஒரு வருடம் கூட இல்லை இவளுக்கும் வரன் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். ‘‘எதுக்குப்பா இப்பவே கல்யாணம்?’’ என்று முனகிப்பார்த்தாள். யாரும் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

சங்கரன் குடும்பத்தினர் அவளைப் பெண் பார்க்க வந்தனர். சங்கரன், அவன் அப்பா, அம்மாவைத்தவிர, அத்தை, சித்தப்பா, சித்தி என்று பெரிய கும்பலாக வந்தார்கள். இவள் அப்பா தஞ்சாவூரில் பெரிய மிராசுதார். ஆக, அவர்கள் எதிர்பார்த்த எல்லாவற்றையும் தாராளமாக செய்வதாகச் சொல்லிவிட்டார்.

“பொண்ணுக்கு பாட்டு சொல்லி வெச்சிருக்கேளா?’’ என்று கேட்டாள் அத்தைக்காரி.

“ரொம்ப நன்னா பாடுவா. இவ மட்டுமில்லை. பெரியவளும் ரொம்ப நன்னா பாடுவா. அஞ்சு வருஷமா சொல்லிக்கறாளே! இதோ பாருங்கோ, இந்த பிரைஸெல்லாம் இவா இரண்டு

## மைதிலி சம்பத்

**செகந்திராபாத்-15**



பேருமா வாங்கினதுதான்’’ என்றார் கோமதியின் அப்பா.

‘‘பின்னே பாடச் சொல்றது’’ என்று அமர்த்தலாகச் சொன்னாள் பையனின் சித்தி. அம்மா சொல்ல, இவள் தம்புராவை வைத்துக் கொண்டு ‘உபசார முலனு‘ பாடினாள்.

‘‘தமிழ்ப் பாட்டு வராதோ?’’ என்று கேட்டார் சங்கரனின் சித்தப்பா.

“சபாபதிக்கு வேறு தெய்வம்” என்று இவள் ஆரம்பித்ததும், ‘‘கொஞ்சம் ராகம் பாடி, பாட்டைப் பாடும்மா’’ என்றார் அவர். இவள் அன்று பாடிய ராகத்திற்கும், கிருதிக்கும் வேறு எந்த இடமானாலும் பலமான கைத்தட்டல் கிடைத்திருக்கும். இவர்களோ ‘அப்படி யெல்லாம் பாராட்டினால் கௌரவக் குறைச்சல்’ என்பதுபோல் இறுக்கமாக உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்கள் பெண்ணைப் பிடித்திருக்கிறது என்று தெரிவித்துவிட, கல்யாண வேலை களைத் தொடங்கிவிடுவாரே அப்பா என்று இவள் அவசரமாக ஆட்சேபித்துப் பார்த்தாள்.

“இவர்கள் சங்கீதத்தை ஊக்குவிப்பவர் களாகத் தெரியவில்லையே, அப்பா? இத்தனை நாள் கத்துண்டதெல்லாம் வேஸ்டா?”

“இதோ பாரும்மா! உன்னைத்தான் பாடச் சொல்லிக் கேட்டார்களே? அது மட்டுமில்லே. பையன் பார்க்க நன்னா இருக்கான், நல்ல வேலைல இருக்கான். நிறைய சொத்து பத்து இருக்கு. ஒரே அண்ணா. நல்ல வேலைல இருக்கான் அவனும். கல்யாணம் ஆகி வெளியூர்ல இருக்கான். ஒரே தங்கை. அவளுக்கும்

கல்யாணம் ஆயாச்சு. இன்னும் என்ன? ஜாதகமும் நன்னா பொருந்தியிருக்கு. இத்தனையும் சேர்ந்து வரது அபூர்வம்மா. நீ பாடினாலோ, விருத்தி செய்து கொண்டாலோ வேண்டாம்னு சொல்லப் போறாளா? " என்று பேசி இவள் வாயை அடைத்துவிட்டார் அவள் அப்பா.

கல்யாணம் ஆகி புக்ககத்திற்கு வந்தாள். கல்யாண அமர்க்களமெல்லாம் முடிந்து இவர்கள் நாலு பேருமாக இருந்த போது தன்னைப் பாடச்சொல்லிக் கேட்பார்கள் என்று எதிர்பார்த்தாள். சொல்வாரில்லை. சரி, நாமேதான் பாடினால் வேண்டாம் என்பார்களா என்ன?

அன்று வெள்ளிக்கிழமை சாயந்திரம் விளக்கேற்றிவிட்டு தம்புராவை ஸ்ருதி சேர்த்துக் கொண்டு, ''கமலாம்பாம் பஜரே'' பாடினாள். பாடி முடிக்கும் முன்பே அவள் மாமனார், கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த அவள் கணவன், ஊரிலிருந்து வந்திருந்த அவர் அண்ணா எல்லோரும் மாடிக்குப் போய் விட்டார்கள். பாடி முடித்ததும் அங்கு வந்த அவள் மாமியார் "இங்கு ஒருத்தருக்கும் வீட்ல பொம்மனாட்டிகள் பாடறதெல்லாம் பிடிக்காது" என்று ஒரு வாக்கியம் சொன்னாலும் உரைக்கிற மாதிரி சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.. இவளுக்கு அழுகையாக வந்தது. இன்னும் ஒரு நாள் தன் நினைவே இல்லாமல் ஏதோ பாடிக் கொண்டே வேலை பார்த்தபோது, அவள் மாமியார். ''ஏற்கனவே சொல்லிட்டேன் போலிருக்கே'' என்றாள். அதன் பிறகு அவள் ஏன் பாட வாயைத் திறக்கிறாள்?

அது என்றில்லை. வாசலில் புள்ளி வைத்துக் கோலம் போட்டால், "அதெல்லாம் கிராமத்து வழக்கம்.இங்கே குழாயாலோ, கையாலேயோ சின்னதா ஒரு கோலம் போட்டா போதும்" என்பாள்.

பிறகு ஒருநாள் ஒரு புதுத் தலைகாணி உறையில் அழகாக வண்ணங்களில் எம்பிராய்டரி செய்து அதை மாமியார் தலைகாணிக்குப் போட்டாள். மறுநாளே மாமியார் "இதோபார்! இந்தபூப்போட்டது, காய் போட்டது இதையெல்லாம் உனக்கு வெச்சுக்கோ. எனக்கு உறுத்தறது. என் பழைய தலைகாணியையே கொண்டு வந்து குடுத்துடுடியம்மா" என்று சொல்லி விட்டாள்.

ஆக, தான் இந்த வீட்டில் சமையல் செய்ய மட்டும்தான் இருக்கும் ஜீவன் என்று புரிந்துகொண்டாள்.

கொஞ்சமாதங்களில் அவள் அக்கா கல்கத்தாவிலிருந்து தஞ்சாவூர் போகும் வழியில் இவர்கள் வீட்டில் ஒரு நாள் தங்கினாள். அவள் அங்கு தான் பாட்டு ட்யூஷன் எடுப்பதையும், பஜனை க்ரூப் வைத்து கோவில்களில் பாடுவதையும் சொல்ல இவர்கள் அதை மிகவும் பாராட்டினார்கள். வந்த எரிச்சலில் இவள் தன் தம்புராவை அவள் திரும்ப கல்கத்தா போகும்போது கொடுத்தனுப்பிவிட்டாள் 'ஒன்றுக்கு இரண்டாக வைத்துக் கொள்' என்று.

இருந்தது மைலாப்பூரில். வீட்டைச் சுற்றி சபாக்கள் இவளுக்கு ரொம்பவே ஆசையாக இருக்கும் கச்சேரி கேட்க. மூச்! அதெல்லாம் பேசமுடியாது. ரேடியோ எப்போதாவது வைத்தாலே வந்து அதன் மென்னியைப் பிடித்துவிடுவார்கள். அதன் பிறகு கலைகளுக்கான மென்மையான உணர்வுகளே இல்லாத கோமதியாகிப் போனாள்.

தங்கம் தங்கமாய் இரண்டு பெண்

குழந்தைகள். இரண்டிற்கும் இவளைக் கொண்டு நல்ல சங்கீத ஞானம் இருந்தது. பாட்டு சொல்லிக் கொடுக்கலாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். சங்கரனே "குழந்தைகள் நன்னா படிக் கணும். அதுதான் முக்கியம் இதெல்லாம் அதுக்குத் தடையா இருக்கும். வேண்டாம்" என்று வெகு தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

குழந்தைகள் பெரியவர்களானார்கள். நல்ல படிப்பு படித்தார்கள். கல்யாண மாகி ஒருத்தி மும்பையிலும், ஒருத்தி யு.எஸ்சிலும் இருக்கிறார்கள். அவர் களுக்கும் இரண்டிரண்டு குழந்தைகள். கோமதி தம்பதியினருக்கு மூன்று பேத்திகள், ஒரு பேரன்.

இப்போது மாமியாருக்கும் வயதாகி விட்டது. ஒடுங்கிப் போய்விட்டாள். உடம்புக்குத்தான் வயதாகி இருந்தது. மற்றபடி அதிகாரத்துக்கும் குரலுக்கும் வயதாகவே இல்லை 90 வயதுக்குமேல் ஆகிவிட்டதால் எல்லாவற்றிற்கும் உதவி தேவைப்பட்டது. அதில் கொஞ்ச நாள் முன்பு நெஞ்சு வலி என்று சொன்னதால் டாக்டர் வந்து பார்த்து விட்டு "அவங்களுக்கு ஹார்ட் ரொம்பவே பலஹீனமாஇருக்கு. எப்போ வேணுமானா லும் எதுவும் நேரலாம்" என்று சங்கரனிடம் வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். உடனே சங்கரன் என்னவோ தன்னை அம்மா கைக்குழந்தையாக விட்டுவிட்டுப் போகப் போவதுபோல கலங்கிப் போய் விட்டார். டாக்டரிடம் "என்ன செய்தால் அம்மா இன்னும் கொஞ்ச வருஷம் இருப்பா?" என்று கேட்டார்.

"என்ன சார் சொல்றீங்க? அவங்க வயசு என்ன? எந்த ட்ரீட்மெண்ட்டைத் தாங்க முடியும் ? எல்லாம் யோசிச்சுத்தான் நான் உங்ககிட்டே சொன்னேன்" என்று சொல்லிவிட்டார் டாக்டர்.

கோமதியின் மைத்துனருக்கு ஒரே பெண்தான். ஏற்கனவே கோமதி மாமியா ருடன் திண்டாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு மட்டும் என்ன சின்ன வயதா? அதே நேரம் திருவனந்தபுரத்தில் இருந்த அவள் மைத்துனர் பெண், தன் பெண் டெலிவரிக்காக தான் யு.எஸ் போவதாகவும், திரும்பி வரும்வரை தன் அப்பா இவர்களோடு இருக்கட்டும். (அவளுடைய அம்மா என்னவோ நான்கு வருடங்கள் முன்பே போய்ச் சேர்ந்தாகி விட்டது) தன் கணவர் தன்னுடைய அம்மாவீட்டுக்குப் போய்விடுவார். தவிர, பாட்டிக்கு ஏதாவது ஆனாலும் அப்பா அங்கேயே இருப்பது தானே நல்லது என்று சொல்லிவிட்டு அவரையும் சென்னைக்கு அனுப்பிவிட்டாள்.

ஆக, நாலு கிழவர்கள் அந்த வீட்டில். ஒருத்தி நோயாளி. எல்லாருக்கும் செய்கிறவள் இவள் மட்டும்தான். ரொம்பவே திண்டாடினாள். திடீரென்று ஒருநாள் மும்பையிலிருக்கும் மகள் போன் பண்ணினாள். அவள் பெண்கள் இருவருக்கும் அடுத்த வாரத்திலிருந்து ஒரு மாதம் லீவாம். சென்னைக்கு அனுப்பு கிறாளாம். அமெரிக்காவில்இருக்கும்பெரிய பெண்ணின் கணவருக்கு வேறு ஊருக்கு மாற்றலாகியிருப்பதால் அவளும் தன் குழந்தைகள் இருவரையும் சென்னைக்கு அனுப்புகிறாளாம், தெரிந்தவர்களோடு மும்பை வந்தால், அங்கிருந்து சின்ன மாப்பிள்ளை பார்த்து தன் பெண்களையும் சேர்த்து சென்னை விமானத்தில் ஏற்றி விடுவாராம். மற்றவர்கள் எல்லோரும் சந்தோஷம் மட்டும் பட்டார்கள் இவள் கூடவே 'எப்படிடா எல்லோருக்கும் வேளாவேளைக்கு சமைத்துப் போட்டு சமாளிக்கப் போகிறோம்' என்று கவலை யும் பட்டாள்.

அப்போதுதான் ஒருநாள் தெய்வமே அனுப்பியது போல இவளுடைய சினேகிதி ஒருத்தி வந்திருந்தாள். ரொம்ப நாளையத்துப் பழக்கம். சின்னக் குழந்தை போல் இவள் ஓடி ஓடி வேலை செய்வதைப் பார்த்துவிட்டு, ''என்னடி கோமதி, இப்படி திண்டாடறியே ? ஒத்தாசைக்கு யாரையாவது வைத்துக் கொள்ளக் கூடாதா?'' என்றாள்.

"நம்பி உள்ளே விடறமாதிரி மனுஷா எங்கே கிடைக்கறா, சொல்லு" என்றாள் கோமதி.

"இல்லை, கோமதி! ஒரு பொண்ணு இருக்கா. கல்யாணம் ஆனவதான். ஆனா, கல்யாணம் ஆன புதுசிலேயே புருஷன் எங்கேயோ ஓடிட்டான்.. இவளுக்கு வேறே ஆதரவே இல்லை. இப்ப என் நாத்தனார் வீட்ல இருக்கா. ரொம்ப ஒத்தாசையா இருப்பா. திருட்டு, புரட்டு எதுவும் கிடையாது. இப்ப என் நாத்தனார் நியூஸிலாந்துக்கு நாலு மாசத்துக்குப் போறா. இந்தப் பெண்ணை என்ன பண்றதுன்னு யோசிச்சிண்டுருக்கா. உங்கிட்டே வேணா அனுப்பச் சொல்லட்டுமா?"

"இவரிடம் ஒரு வார்த்தை கேட்டுட்டு சொல்லட்டுமா?"

"கேள்வி என்ன? 'எனக்கு முடியல்லே, வெச்சுக்கப் போறேன்'னு சொல்லு'' என்றவள், மறுநாளே இந்த கௌரியைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள்.

பார்க்க நீட்டாக, பளிச்சென்று இருந்தாள் கௌரி. அவள் வந்தபோது உள்ளே சமையல் ஆகிக் கொண்டிருந்தது. இவளும் இவள் சினேகிதியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க உள்ளே போய் ஒரு பார்வை பார்த்தவள், "என்ன மாமி! வெண்டைக்காய் பாதி நறுக்கியிருக்கேள். பாக்கியையும் நறுக்கி, கறிதானே? எல்லாரும் பெரியவாளா இருக்கேள். உப்புக் காரம் கம்மியாப் போடறேன். முருங்கக்காய் எடுத்து வெச்சிருக்கேளே, சாம்பார் தானே? குக்கர் ஆயிருக்கே? பருப்பைக் கொட்டி கொதிக்க வைக்க வேண்டியது தானே? உப்பு போட்டுட்டேளா? " எனக் கேட்டபடியே மளமளவென்று வேலையை ஆரம்பித்தாள். அடுத்த அரைமணி நேரத்தில் எல்லா சமையலையும் முடித்து, நீட்டாக மூடி வைத்துவிட்டு வெளியே வந்துவிட்டாள். எல்லாமே நன்றாக இருந்தது.

"இவளுக்கு சம்பளம் என்ன கொடுக்கணும்னு பேசிட்டியா?" என்று கோமதி சினேகிதியை.க் கேட்க, அதைக் கேட்டுக் கொண்டே வெளியே வந்த கௌரி, ''மாமி! எனக்கு சாப்பாடுபோட்டு, தங்கவும் இடம் குடுத்தடறேள். அதுக்கு மேலே என்ன செலவு? எனக்கு சம்பளம் எல்லாம் வேண்டாம்" என்றாள்.

"அது சரியில்லை. நான் உனக்கு சம்பளம்னு கொடுக்க நினைக்கறதை தனியா எடுத்து வேச்சுடறேன்" என்றாள் கோமதி.

"திருப்திதானே?" என்று இவளிடம் கிசுகிசுத்த சினேகிதி விடை பெற்றுக் கொண்டு போய்விட்டாள்.

''பாட்டிக்கு ரசம் சாதம் நன்னா மசிச்சுக் கொடுக்கணும்" என்றபடி இவள் எழுந்து வந்ததும், கௌரி தானே அதைச் செய்து பாட்டிக்குப் பக்கத்திலிருந்து கொடுத்தாள். பாட்டிக்கென்று ஒரு ஆள் போட்டிருந்தது. ஆனாலும், சாப்பாடு, மருந்து, மாத்திரை கொடுப்பது என்று எல்லாம் இத்தனை நாள் கோமதிதான் செய்து வந்தாள். இப்போது கௌரி பார்த்துக் கொண்டாள். சும்மா சொல்லக்

கூடாது. காரியம் கப்பல்தான்.

ஆனால்,கோமதிக்கு ஒரு விஷயம்தான் பிடிக்கவேயில்லை. எப்போது பார்த்தாலும் கௌரிக்கு வாயில் பாட்டுத்தான். பாட்டு என்றால் நல்ல கர்னாடக சங்கீதம் தான்.. ஸ்லோகங்கள் சொல்லிக் கொண்டே சமைப்பாள். சொல்லிக் கொண்டே இல்லை, பாடிக் கொண்டே தான். கோமதிக்கு எரிச்சலாக இருக்கும்.

அவள் வந்த புதிது ஒரு வெள்ளிக் கிழமை. கோமதி ஸ்வாமி விளக்கேற்றி வைத்துவிட்டு வெளியே வரவும், கௌரி பூஜை அறைக்கு வெளியே உட்கார்ந்து சன்னக் குரலில் “கமலாம்பாம் பஜரே” பாட ஆரம்பித்தாள். நிறுத்து என்று யாரும் சொல்ல முடியாவண்ணம் ரொம்ப நன்றாகவே பாடினாள். ஆனால், கோமதிக்கு எரிச்சல் வந்தது, காரணம், வெளி ஹாலில் உட்கார்ந்து அவள் கணவரும் மச்சினரும் அதை ரசித்ததுதான். அதைவிட அவளை மனதில் பொருமவைத்தது அவள் மாமியார் ‘‘இங்கே வாம்மா, கௌரி ரொம்ப நன்னா பாடினே. இன்னும் இரண்டு பாடு” என்று சொன்னதுதான். வந்த வெறுப்பில் கௌரியின் சீட்டை அப்போதே கிழித்திருப்பாள். ஆனால் இரண்டு நாளில் பேரனும் பேத்திகளும் வரப் போகிறார்கள். தன்னால் அத்தனை வேலைகளையும் செய்ய முடியாது என்ற பயம்தான் அதைத் தடுத்தது.

நாலு குழந்தைகளும் வந்துவிட்டார்கள். வளர்கிற குழந்தைகள் அல்லவா? பார்த்து பார்த்து வயிற்றிற்குப் போட வேண்டியிருந்தது.. சுணங்காமல் கௌரி பண்ணிப் போட்டாள்.

கௌரியின் சுறுசுறுப்பிற்கு அத்தனை வேலைகள் செய்தும் அவளுக்கு நிறைய



நேரம் கிடைத்தது. பாட்டி வேறு ஒடுங்கிக் கொண்டே வந்தாள். பாட்டி போய்விட்டால் குழந்தைகள் பார்த்தால் பயப்படுவார்களோ என்னவோ என்று கோமதிக்குப் பயம்தான். அன்று பெண் போனில் பேசியபோதே சொன்னாள் அதை.

“போம்மா! அதுகள் பார்க்காத சினிமாவா, சீரியலா? எல்லாக் குழந்தைகளும் எல்லாம் பார்த்திருக்காங்க. நீ பயப்படாதே. தவிர, நீ என்ன வீட்டிலேயா எல்லாக் காரியமும் பண்ணப்போறே?” என்று ஒரேடியாக அம்மாவின் வாயை அடைத்துவிட்டாள் பெண்.

செவ்வாய்க்கிழமை அன்று, ‘‘ஏன் மாமி! குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து குளித்துவிட வேண்டாமா.? வெள்ளிக் கிழமை வரை பாட்டி எப்படி இருப்பாளோ என்னவோ?’’ என்றாள் கௌரி.

சற்று அதிகப்பிரசங்கித்தனமாகத் தோன்றினாலும், அவள் சொல்வதிலுள்ள நியாயம் புரியாமல் இல்லை கோமதிக்கு. கௌரியே எண்ணெயில் மிளகு, ஓமம் போட்டுக் காய்ச்சி எடுத்து வந்தாள். மூன்று

பேத்திகளுக்குமே நிறைய தலைமயிர். மூன்று பேருமே டான்ஸ் கற்றுக் கொள்கிறார்கள். அதனால் தலை மயிரை வெட்டும் பழக்கமே கிடையாதாம். மணையைக் கொண்டுவந்து கௌரி போட ஒருத்திக்கு எண்ணெய் வைக்கும் முன்னமேயே கோமதிக்கு தலை கிறுகிறு என்று வந்துவிட்டது. அதைப் பார்த்த கௌரி, தான் எண்ணெய்க் கிண்ணத்தை வாங்கி, மற்ற இரண்டு பெண்களுக்கும் வைத்துவிட்டாள். பொறுப்பாக தானே சீயக்காய் போட்டு தேய்த்து, அலசி, சாம்பிராணி போட்டு உலர்த்தி, தளர பைப் பின்னலும் போட்டுவிட்டுத்தான் ஓய்ந்தாள்.

பையன் சின்னவன். அவனுக்குப் பொறுப்பாக சாதத்தைப் பிசைந்து, ஸ்பூன் போட்டுக் கொடுப்பாள். நான்கு பேரையும் உட்கார்த்தி வைத்து பாட்டும் சொல்லிக் கொடுத்தாள். அது மட்டுமா ? பெண் குழந்தைகளுக்குக் கோலம் போட, பூத்தொடுக்க, அடிப்படையான சங்கிலித் தையல் என்றெல்லாம் கற்றுக் கொடுத்தாள். போகும் முன் கௌரியின் பயிற்சியில் தமிழில் அ, ஆ, இ, ஈ கூட கற்றுக் கொண்டு விட்டார்கள். ஊருக்குப் புறப்படும் நாள் வந்தது. இரண்டுதரம் மருதாணி இட்டுவிட்டாகிவிட்டது. பெண்கள் கேட்டிருந்த பட்சணங்கள், பொடி வகை கள் எல்லாவற்றையும் கௌரியிடம் சொல்லிவிட்டு அக்கடா வென்றிருந்தாள் கோமதி. ஓடி ஓடி எல்லாம் செய்தாள் கௌரி. இன்னும் ஒருவாரம் இருந்தது குழந்தைகள் புறப்பட.

“மாமி! என் சம்பளம்னு தனியா வைக்கப் போறேன்னு சொன்னிங்க இல்லையா? அதிலிருந்து ஒரு இரண்டாயிரம் ரூபா தர முடியுமா?” என்று கேட்டாள் கௌரி.

‘‘என்னடியம்மா அதிசயமா பணம் கேக்கறியே? சும்மா தெரிஞ்சிக்கலாம்னு தான் கேக்கறேன். எதுக்கு இப்ப பணம் உனக்கு?”

“குழந்தைகள் ஊருக்குப் போறதுகள். கௌரி மாமி, கௌரி மாமின்னு ஆசையா இருந்துதுகள். நானும் வேறே யாருக்கு என்ன செய்யப்போறேன்? ஆளுக்கு 500 ருபாய்க்கு டிரெஸ் வாங்கித் தரலாமேன்னுதான்” என்றாள்.

கோமதி வேண்டாம் என்றாலும் பிடிவாதமாக குழந்தைகளுக்கு டிரஸ் வாங்கித்தான் கொடுத்தாள் கௌரி.

அமெரிக்காவில் இருக்கும் பேத்தி புறப்படும் முன் பெரியவளாகிவிட்டாள். கோமதிக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. கௌரிதான் கோலம்போட்டு, அந்தப் பெண்ணை மணையில் உட்கார வைத்து பால் பழத்தைக் கொண்டு வந்து கோமதியிடம் கொடுத்து பேத்திக்குக் கொடுக்கச் சொன்னாள். புட்டு, குணுக்கு என்று பண்ணியவள், அந்தக் குழந்தைக்கு கோமதி பட்டுப் பாவாடை வாங்கித்தர அதைத் தைத்தும் வாங்கி வந்தாள். பூ வைத்து தைத்துவிட்டாள். மற்றவர்களும் ஆசைப்பட இரண்டு நாளில் மூவருக்குமே பூ வைத்து தைத்தாள் அதுகளுக்கு ஒரே சந்தோஷம். எல்லாம் மாறி மாறி போட்டோ எடுத்துக் கொண்டதுகள். அந்தப் பெண்தான் கோமதிக்கு பெரிய பேத்தி. கோமதி தடுமாற ‘அந்த‘ விஷயங்களையெல்லாம் கூட கௌரிதான் கற்றுக் கொடுத்தாள்.

நிஜமாக ‘எங்கிருந்தோ வந்தான் கண்ணன்‘ என்ற பாட்டை ‘எங்கிருந்தோ வந்தாள் கௌரி‘ என்று மாற்றிப் பாட வேண்டும் போல் இருந்தது கோமதிக்கு. ஆனால், அவள் இத்தனை உபகாரம் செய்தாலும், பானகத் துரும்புபோல் ஒரு நெருடல் அவள் மனதில் இருந்து

கொண்டேதான் இருந்தது. இப்போது கௌரியை இவ்வளவு கொண்டாடும் இவர்கள், இதே விஷயங்களுக்காகத் தன்னை எப்படி அடக்கி வைத்தார்கள் என்பதுதான் அது. தப்பெல்லாம் தன் வீட்டு மனிதர்கள் மேல்தானே தவிர, கௌரியின் மீது தப்பென்ன என்று கோமதிக்குப் புரியாமல் இல்லை.

இத்தனை நாட்களாயிற்றே, கௌரி கோமதி சொல்லாமல் ஒரு டம்ளர் காப்பி கூட கலந்து குடிக்க மாட்டாள். பூஜை அறைக்குள் நுழையமாட்டாள். இவர்களுக்கு சமதையாக உட்கார்ந்து சாப்பிடமாட்டாள். தன் வரையறை தெரிந்தவள்தான் கௌரி. ஆனால், புரிவது வேறு, பிடிப்பது வேறு இல்லையா?

குழந்தைகளை கூட்டிப் போக சின்ன மாப்பிள்ளை வந்திருந்தார். தாத்தா, பாட்டியை விட்டுவிட்டு ஊருக்கு போவதைவிட கௌரி மாமியை விட்டு விட்டு ஊருக்குப் போகத்தான் குழந்தைகள் அழுதார்கள். அப்பாவிடம் சின்னப் பேத்தி சொன்னாள் “அப்பா, கௌரி மாமியையும் நாம கூட்டிண்டு போகலாம்ப்பா. அவங்க ரொம்ப ரொம்ப நல்லவங்கப்பா” என்று.

“இப்ப பாட்டிக்கு ஒத்தாசைக்கு கௌரி மாமி வேணும்மா. கொஞ்ச நாள் கழிச்சி நாம கூட்டிக்கலாம்'' என்று அவளை சமாதானப் படுத்திக் கூட்டிப் போனார். கௌரியும் ரொம்ப அழுதுவிட்டாள்.

அவர்கள் புறப்பட்டுப் போன மறு வாரம் பாட்டியின் உயிர் தூக்கத்திலேயே பிரிந்தது. அதற்கும் கௌரிதான் அழுதாள். அன்றைக்குப் பிறகு மற்ற நாட்கள் எல்லாம் மடத்தில் காரியங்கள் செய்து விட்டு, சுபத்தன்று கொஞ்சம் நெருங்கிய உறவினர்கள், சினேகிதர்களை சாப் பிடக் கூப்பிட்டுருந்தாள் கோமதி.



## ஈரமில்லா மனிதர்கள்

சாலையில் நிகழும்
விபத்தை சுயமியெடுப்பார்
தலையாய கடமையென
காப்பாற்ற மனமின்றி
அலைபேசியில் பதிவிட்டு
மகிழ்ச்சிக் கொள்வார்

குழந்தை பெறாதவருக்கு
மலடியெனப் பட்டம்
மணமாகாதவருக்கு ராசியில்லா
பிறவியென வசைபாடுவார்
மனதில் ஈரமின்றி...

பசியின் கொடுமை
கையேந்தும் சிறுமி
புரை கிடைக்காத
ஏக்கத்தோடு நாய்
ஈந்திடும் மனமின்றி
விரட்டியடித்து மகிழ்வார்

ஈரமில்லா மனிதர்களின்
ஈனமான செயல்கள்
ஈரமுடைய மண்ணும்
காய்ந்து வறண்டிடும்
வானும் பொய்த்து
வறட்சியும் வந்திடும்

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

கேட்டரர்ஸுக்குச் சொன்னாலும் மற்ற வேலைகளை யார் செய்வது என்று மலைப்பாகத்தான் இருந்தது. ஆனாலும், கௌரிதான் இருக்கிறாளே என்றுதான் சாப்பாட்டை ஏற்பாடு செய்திருந்தாள். அன்றைய வைதிகக் காரியங்கள் முடிந்ததும் மங்களம் பாடச் சொல்லி சாஸ்திரிகள் சொன்னதும் யாரும் வாயைத் திறக்கவில்லை. கோமதிதான் இனி இந்த வீட்டில் பாட வாயைத் திறக்க மாட்டேன் என்று சபதம் வைத்திருந்தாளே.! சட்டென்று சங்கரன், “கௌரி, நீதான் மங்களம் பாடேம்மா” என்றார்.

பளிச்சென்று அவள் பாடிய மங்களத் திலேயே எல்லோரும் அசந்து போனார்கள். ஒரு சோறு போதாதா ஒரு பானைச் சோற்றுக்குப் பதம் பார்க்க? கேட்டரர்ஸ் இன்னும் வரவில்லை. எல்லோரும் சற்று உட்கார்ந்த வேளையில் ஒரு உறவுக்காரப் பெண் “ஒரு பாட்டுப் பாடும்மா. நன்னா பாடறியே?'' என்றாள். இவளுடைய மச்சினர் “கமலாம்பாம் பஜரே... பாடும்மா. அதை நீ ரொம்ப நன்னா பாடறே'' என்றார்.

இவள் பல வருடங்களுக்கு முன் கல்யாணம் ஆகி வந்ததும் நடந்தது அவர்களுக்கெல்லாம் மறந்து போயி ருக்கலாம். ஆனால், இவளுக்குப் பசுமரத் தாணியாகமனதில்பதிந்தல்லவாஇருந்தது.? ரகசியமாக உள்ளே வந்து அழுதாள். அப்படியும் மோப்பம் பிடித்துவிட்ட பெண்மணி ஒருத்தி, “உன் மாமியார் என்ன அல்பாயிசிலேயா போயிட்டா? அழாதே! கண்ணை துடைச்சிக்கோ'' என்றாள். சிரிக்காமலிருக்க இவள் கஷ்டப்பட்டாள்.

ஒவ்வொன்றாக நேயர் விருப்பம்போல நான்கு பாடல்கள் பாடவிட்டுத்தான் கௌரியை எல்லோரும் விட்டார்கள். ‘‘தஞ்சாவூர் பக்கமா உனக்கு? அதான் நன்னா பாடறே.'' என்று இன்னொரு மாமி சொல்ல, திரும்ப கோமதிக்கு வயிற்றெரிச்சலாக இருந்தது.

இவள் கணவரோ, மச்சினரோ கௌரியை பாராட்டினதெல்லாம் தப்பான எண்ணத்தில் இல்லை. இவளுக்கும் அது தெரியும். ஆனால், ஒரு மிளகு குழம்பு வைத்தால்கூட ‘அம்மா அந்தக் காலத்தில் பண்ணுவாளே, அந்தக் கை பக்குவம் யாருக்கும் வராது’ என்று சொல்லிக் கொண்டு சாப்பிடுவார்கள். ‘இன்னிக்கு மோர்க் கீரை பிரமாதம்மா, கௌரி. எங்கம்மா பண்றாப்போலவே இருந்தது’ என்றால்? கோமதிக்குக் கடுப்பாக இருந்தது. ஆச்சு, மச்சினரும் இரண்டு நாட்களில் புறப்பட்டுவிடுவார். இவர்கள் இரண்டு பேர் தானே, இவள் செய்து கொள்ள மாட்டாளா, என்ன?

நினைத்துக்கொண்டே விடியும்போதுதான் தூங்கினாள் கோமதி.

காலையில் எழுந்ததும் அண்ணாவும், தம்பியும் வெளியே போயிருந்தார்கள். ஒரு புதுப் புடவை, வெற்றிலை, பாக்கு பழத்துடன் அவளுடைய மூன்று மாத சம்பளத்தையும், அவள் சேர்த்து வைத்திருந்த கௌரியின் பழைய சம்பளத் தையும் வைத்து கௌரியிடம் நீட்டினாள் கோமதி.

‘‘எனக்கு எதுக்கு மாமி சம்பள மெல்லாம்? உங்களோடயே தானே இருக்கப்போறேன்” என்றாள் கௌரி.

“இல்லைம்மா ! இனிமே நாங்க இரண்டு பேர்தானே? நான் பார்த்துப்பேன். இனிமே நீ வேணுங்கறதில்லைம்மா” என்றாள்.

‘‘என்ன மாமி, திடீர்னு இப்படிச் சொல்றேள்? நான் ஏதாவது தப்பா

நடந்துண்டுட்டேனா?"

''அதெல்லாம் இல்லை. இரண்டு பேருக்கு சமைக்க என்னால முடியாதா? மேல்வேலைக்கு வேலைக்காரி இருக்கா. அப்பறம் என்ன? நீ கிளம்பலாம்மா"

"மாமி, என்னை இப்படிப் போகச் சொன்னா, நான் எங்கே போவேன், சொல்லுங்கோ? நான் வந்த போதே எனக்கு வேறே போக்கிடம் இல்லைன்னு உங்களுக்குத் தெரியுமே?"

"அதுக்காக, ஆயுசு பூரா நாங்க உன்னைப் பார்த்துக்க முடியுமா?" என்று சொல்லிவிட்டு வாசல் பக்கம் போய் விட்டாள் கோமதி.

ரோசமாக இருந்ததோ என்னவோ, அடுத்த பதினைந்து நிமிடங்களில் தான் கொண்டு வந்த நான்கு புடவைகள் அடங்கிய பையை எடுத்துக் கொண்டவள், "மாமி, இத்தனை நாள் என்னை வைத்து ஆதரித்ததற்கு ரொம்ப நன்றி" என்று கோமதியை நமஸ்கரித்துவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

சங்கரன் வந்து "கௌரி எங்கே? ஒரு டம்ளர் காப்பி வேணும்" என்று கேட்டார் இவளே போட்டு எடுத்து வரவும், ''கௌரியை எங்கேயாவது அனுப்பிச்சிருக்கியா?" என்று கேட்டார்.

"ஒரேடியா அனுப்பிட்டேன்"

"ஏன், என்னா ஆச்சு? உனக்குத்தான் அவ இருந்தது சௌகரியமா இருந்தது, இல்லையா?"

"அண்ணாவும் நாளைக்குப் புறப்பட றார். நாம இரண்டு பேர்தானே?. நான் பண்ணிப்பேன்" என்றவள் அதற்கு மேல் அவர் எதிரில் நிற்கவேயில்லை. "இவருக்கு என்னவென்று சொல்வது? சொன்னால் மட்டும் புரிஞ்சுடுமா, என்ன?" என்று தோன்றியது.

நான்கு மாதங்கள் ஓட்டமாய் ஓடின. அவளுடைய பெரிய பெண் யு,ஸ்.லிருந்து போன் செய்தாள். "நாங்க இன்னும் ஆறு மாசத்தில இந்தியாவோட வந்துடலாம்னு இருக்கோம், இப்போ இன்னும் நாலு மாசத்துக்கு அதிகக் குளிர் இருக்காது. நீங்க இரண்டுபேரும் வந்து எங்களோட இருந்துட்டுப் போங்கோம்மா" என்றாள்.

"நீங்களே இங்கே வரப் போறேள். நாங்கவேறே எங்கம்மா வரது?" என்றாள் கோமதி. "தவிர, நாங்கதான் ஒரு தரம் வந்திருக்கோமே"

"இல்லேம்மா! நீங்க கண்டிப்பா வரத் தான் வேணும். அப்போ நீங்க வந்திருந்த போது எனக்கு டெலிவரி ஆயிருந்தது. ஒரு இடத்துக்கூட கூட்டிப் போய் சுத்திக் காண்பிக்கவே இல்லை. அது எங்க இரண்டு பேருக்கும் குறையா இருக்கு. இவரும் சொல்லிண்டேதான் இருக்கார். இரு! இதோ உன் மாப்பிள்ளை பேசறார்" என்றாள்.

அவரும் கோமதி, சங்கரன் இருவரிட மும் மிகவும் வற்புறுத்திச் சொல்லவும் இருவரும் கிளம்பினார்கள். இந்த முறை ஒவ்வொரு வார இறுதியிலும் மாப்பிள்ளை இவர்களை ஒவ்வொரு இடமாகக் கூட்டிப் போனார். நயகரா போய் திரும்பிவரும் போது கார் பார்க்கிங் நோக்கி நடந்தனர். முன்னால் போய்க் கொண்டிருந்த குழந்தைகள் திடீரென்று "மாமி" என்று கூவிக் கொண்டே ஓடிப் போய்க் கட்டிக் கொண்ட பெண்ணைப் பார்த்ததும், கோமதி ஆச்சரியத்தில் வாயடைத்து நின்றாள். கௌரிதான் அது. எப்படி,

ஒரு கட்டத்தில்
எல்லோர்க்கும்
அது தெரிந்தது.

தெரிந்ததாகச்
சொல்லிக் கொள்ளவும்
பேரச்சம்.

எந்த இருளிலிருந்தும்
எந்த
மூலையிலிருந்தும்
வெளிப்படலாம்.

என்ன செய்யும்
என்றறியா விடினும்
அப்படியொரு
பேரச்சம்.

பொய் சொல்லப்
பயப்படாதவர்க்குப்
பயம் என்பதில்லை
நடைமுறையும்கூட.

சிலநேரம் கேட்கும்
மூச்சிரைப்புச் சத்தம்

நடமாட்டம் குறைந்து
நெடுகவும் இயக்கமற்று
எல்லாமே குலையும்போது
பரவெளிக்குத்
தப்ப முயலலாம்.

பாதை தெரியாவிடின்
என்ன
பயம் புரிகிறது.
அது இருப்பது
ஒரு நீட்சிக்கானதுதான்.

நா.விச்வநாதன்
அரசூர்.வேதியபுரம்,
தஞ்சாவூர் 613205

எப்படி அவள் இங்கே?

அவர்களிடம் நெருங்கியதும், “மாமி, மாமா, நமஸ்காரம்! பட்டு குட்டிங்களா! நன்னா இருக்கேளா?” என்று விசாரித்தாள் கௌரி.

“வாம்மா, சௌக்கியமா இருக்கியா? ஆமா, எப்படி, யாரோட இங்கே வந்தே?”

“அன்னிக்கு உங்க வீட்டிலேருந்து கிளம்பினதும் எங்கே போறதுன்னு தெரியாமே, பெருமாள் கோவிலுக்குப் போகலாம்னு போனேன். பெருமாள் வழி காண்பிச்சுட்டார். அங்கே முதல் நாள் உங்க ஆத்து விசேஷத்ல பார்த்த சாரதா மாமி வந்திருந்தார். அவரிடம் ‘நீங்க திடீர்னு ஊருக்குப் போறதாயும், எனக்கு யார் ஆத்திலேயாவது வேலை இருந்தா சொல்லும்படியும் கேட்டுண்டேன். இப்போதைக்கு என்னோட வான்னு கூட்டிண்டு போனார். அங்கே அவருடைய நாத்தனார் குடும்பம் வந்திருந்தது.’’ எங்களோட அமெரிக்கா வரேளா? எங்க பெண்கள் இரண்டு பேரோட சேர்த்து இன்னும் கொஞ்சம் பாட்டு ட்யூஷன் ஏற்பாடு பண்ணித்தரோம்ன்னா. எனக்கென்ன மாமி, பிக்கலா, பிடுங்கலா, கிளம்பிட்டேன். இங்கே ந்யூ ஜெர்சியிலே நிறைய குழந்தைகள் பாட்டு, ஸ்லோகம், கோலம்னு கத்துக்க எங்கிட்டே வரா. பஜன் க்ரூப்பும் வெச்சிருக்கேன். இவாளுக்கு ஒத்தாசையாகவும் இருக்கேன். ஆமா, நீங்க பொண்ணுகிட்டே வந்திருக்கேளா?” என்று சகஜ பாவத்தில் கேட்டாள். கோமதி திடீரென்று போகச் சொன்னதில் அவளுக்கு ஒரு வருத்தம், கோபம் இருப்பதாகவெல்லாம் தெரியவில்லை. அதற்குள் அவள் யார் வீட்டில் இருக்கிறாளோ அந்தப் பெண்மணியையும் அறிமுகம் செய்து வைத்தாள்.

“ரொம்ப நன்னா பாடறா, நன்னா சொல்லித்தரா, எல்லாத்தையும் விட குழந்தைகள் கிட்டே பொறுமையா நல்லதனமா பழகறா. இவளோட கிளாஸ்ல சேர எங்க ஊர்ல போட்டி. பஜனை க்ரூப்பும் போகாத கோவிலே எங்க பக்கங்கள்ல இல்லை” என்றாள் அவள்.

“எல்லாம் இவா பண்ணின ஹெல்ப் தான்” என்றாள் கௌரி.

விடை பெற்றுக் கொண்டு திரும்புகையில் சங்கரன், “நம்ம வீட்ல சமையற்காரியா இருந்தவ, இப்ப இத்தனை பிரசித்தமா, நல்ல பாடகியா இருக்காங்கறது ரொம்ப பெரிய விஷயம் இல்லையா? ரொம்ப பெருமையா இருக்கு” என்றார்.

“ஆமாம்பா! ரொம்ப பெருமையாகத் தான் இருக்கும் நம்மாத்து சமையல்காரி பெரிய பாடகியா இருக்கறதுல. ஆனா, ஒரு நல்ல பாடகியாக வேண்டியவளை சமையல்காரியா ஆக்கிட்டேளே! அந்த வயிற்றெரிச்சலை எங்கே போய் சொல்றது?” என்று கேட்டு விட்டாள் அவரின் பெரிய பெண் நிர்மலா.

“என்னம்மா, நீ என்ன சொல்றே, புரியல்லியே?”

“ எப்படிப்பா புரியும்? எந்தக் கஷ்டமும் கொடுத்தவாளுக்கு நினைவிருக்குமா?”

“அம்மாடி, நிர்மலா! கொஞ்சம் புரியறமாதிரி சொல்றியா?”

“உங்களைக் கல்யாணம் பண்ணிக் கறச்சேயே அம்மா எத்தனை நாள் பாட்டு கத்துண்டிருக்கா, அவ ஊர்ல எத்தனை பாட்டுப் போட்டில பிரைஸ் வாங்கியிருக்காங்கறது எல்லாம் தெரிஞ்சி தானே கல்யாணம் பண்ணிண்டேள்? பெண் பார்க்கப் போயிட்டு ஆளாளுக்குப் பாடச் சொல்லி கேட்டீங்களே! அப்பறம் வாயையே திறக்கக்கூடாதுன்னு 144 போட்டது எந்த வகையில் நியாயம் ? அது மட்டுமா? கோலம், எம்பிராய்டரி, ஸ்லோகம்னு அம்மாவை எதையும் பண்ண விடாமே பண்ணிட்டேளே? நாங்களும் மைலாப்பூர்ல வளர்ந்தோம்ன்னுதான் பேரு. அம்மாவுக்கும் எங்களுக்கும், நாங்கபாட்டு கத்துக்கக் கூடாதுன்னு நீங்களும், பாட்டியும் சொன்னதுல இன்னிவரைக்கும் எங்க எல்லாருக்கும் வருத்தம், தெரியுமா? இப்ப எவளோ பாடறான்னா பெருமையா இருக்கா உங்களுக்கு? இது எந்த வகையில் நியாயம்?”

“அதும்மா, எங்க அம்மாவுக்குத்தான் பிடிக்கல்லே. அதனாலே..”

“அதனாலே, நீங்களும் சேர்ந்து பாடா தேன்னு சொல்லணுமா, என்ன?”

“இல்லைம்மா! எங்கம்மாவை எங்க பாட்டி பாடக் கூடாது ன்னுட்டாளாம். எப்பப்பார்த்தாலும் வருத்தப்படுவா”

“அப்படிச் சொன்னா வருத்தமா இருக்கும்னு தெரிஞ்ச நீங்க அதுக்கப்பறம் இருபத்தி அஞ்சு வருஷம் கழிச்சு உங்கம்மாவைத் திருப்திப் படுத்த அதையே சொன்னீங்களாக்கும்?”

“தப்புதாம்மா! நான் அதை இத்தனை நாளா உணரவேயில்லை. உங்கம்மாவும் ஒருநாள்கூட ‘நான்பாடத்தான்பாடுவேன் ’ன்னு எங்ககிட்டே நயமாகவோ, மிரட்டியோ சொல்லவேயில்லைம்மா” என்றார் பரிதாபமாக.

“அதெப்படி சொல்லுவா? உங்கம்மா சுபாவம் உங்களுக்குத் தெரியாதா?

கல்யாணமான புதுசில ஒருதரம் தஞ்சாவூர் போன போது. தன் அப்பா, அம்மாகிட்டே சொல்லி அழுதிருக்கா.'' இதெல்லாம் குடித்தனத்தில சின்ன விஷயம். உன்னை உன் மாமியாரும், ஆத்துக்காரரும் பட்டினி போட்டு கொடுமை படுத்தினாளா? வெளியே தள்ளி கதவைச் சாத்தினாளா? இந்த சின்ன விஷயத்திலேயெல்லாம் பிடிவாதம் பிடிச்சி குடித்தனத்தில விரிசல் உண்டாக்கக்கூடாது. அவா சொல்றபடி அப்படியே கேக்கறதுதான் பெத்து வளர்த்த எங்களுக்குப் பெருமை. உனக்கும் நல்ல பேரு" என்று வாயை அடைத்துவிட்டார்களாம்.

ஆனா, 'பாவம் சின்னவ. பெரியவளைப் பாரு! புக்ககத்து ஆதரவுல பெரிய பாடகி ஆயிட்டா. இதைத்தான் சரியா தெரிஞ்சிக்காமே கல்யாணம் பண்ணிக் கொடுத்து வித்தையை வீணாக்கிட்டோம். ஆனா நாம அதுக்கு வருத்தப்படறோம்னு தெரிஞ்சா, அவளுக்கு இடம் கொடுத்துப் போகும். குடித்தனம் சண்டையும், சச்சர வுமாக கெட்டுப் போகும். அதனால தான் என் வருத்தத்தை அவகிட்டே காண்பிச்சுக்கல்லேன்னு தாத்தா பாட்டி கிட்டே சொல்லிச் சொல்லி வருத்தப் படுவாராம்"

கேட்ட சங்கரனுக்கு முகம் விழுந்து விட்டது. "தப்புதாம்மா, ரொம்ப தப்பு தாம்மா! இனிமே என்ன பண்ண முடியும்?"

"ஏன் மாமா, இப்பவும் இதை சரி பண்ணலாம்'' என்றார் மாப்பிள்ளை, முதல் தடவையாக வாயைத் திறந்து. ''இன்னிக்குக் கூட அம்மா பாடி நான் கேட்டேன். 'நான் பாடறதில்லைன்னு சபதம் பண்ணியிருக்கேன் எனக்குள்ளே' ன்னு சொல்லி பாட மாட்டேன்னு ரொம்ப பிடிவாதம் பிடிச்சா. நிர்மலா பாடினாத்தான் ஆச்சுன்னு ரொம்ப வற்புறுத்தவே 'கமலாம்பாம் பஜரே' பாடினா. இத்தனை நாள் கழிச்சு, இத்தனை பெரிய பாட்டு பாடினாலும் ஒரு துளி பிசுறுகூட இல்லை. சூப்பரா இருந்தது. அதனால, இப்பகூட நீங்க ஊருக்குப் போனதும் நாலு குழந்தைகளுக்கு பாட்டு சொல்லிக் கொடுக்கவும், ஒரு பஜனைக் குழு அமைச்சுக்கவும் அவாளுக்கு உதவி பண்ணுங்கோ. முதல்ல ஆத்ம திருப்தி. அதையும் தாண்டி 'கோமதி பஜனை மண்டலி' பிரமாதமா வரும், பாருங்கோ"

"நிச்சயமா பண்றேன். ஸாரி, கோமதி! என்னவோ மடத்தனமா நடந்துண் டுட்டேன். ஐ யாம் ரியலி வெரி சாரி" என்றார் சங்கரன்.

"பரவாயில்லை. இனிமேத்தான் பாடப் போறேனே" என்றாள் கோமதி புன்னகை யுடன்...

... ... ...

நாங்கள் சுமார் பதினைந்து வருடங் களுக்குமுன் திருவாரூர் சென்றிருந்தபோது தியாகராஜர் ஆலயத்தில் கமலாம்பாள் சன்னிதியில், "கமலாம்பாம் பஜரே " பாடிக் கொண்டிருந்த அந்தப் பெண்மணிக்கு இந்தக் கதையை அர்ப்பணிக்கிறேன். சிறு வயதில் எத்தனை அழகாக இருந்திருப்பார் என்று பிரமிக்கும் வண்ணம் அந்தக் கோலத்திலும் இருந்தார் அவர். ஆம்! அவர் தலை மழித்து, நார்மடியில் முக்காடு போட்டிருந்தார். சன்னமான குரலில், உள்ளம் கசிந்து உருகி, யாரையும் நிமிர்ந்துகூடப் பார்க்காமல் அன்று பாடி எங்கள் மனதில் இன்னும் நிற்கும் அந்தப் பெண்மணிக்கு எந்த மங்கல நிகழ்ச்சியிலும் பாடும் வாய்ப்பு மறுக்கப் பட்டிருக்கும் என்றே தோன்றியது.

**மைதிலி சம்பத்**

# சிறகுகளை வருட எத்தனிக்கையில்

நினைவுப் பறவையின்
சிறகுகள்
நீண்ட வானில்
பறந்த களைப்பில்
சற்றே அயர்ந்தாலும்

தொடுதிரையின்
தேடல்களுக்கு நடுவே
கண்ணில் படும்
இதய எமோஜி ஒன்றோ

குளிர்பெட்டிக்குள்
கண் சிமிட்டும்
இனியப்பம் ஒன்றோ

முகநூல் பக்கத்தில்
யாரோ எழுதிய
கவிதை ஒன்றோ

சாலைக் கடக்கையில்
கண்ணில் தென்படும்
ஏதோ ஒன்றோ

நினைவு அடுக்குகளைக்
கீறிச் செல்கையில்
மறுபடியும்
சிலிர்த்து சிறகை
விரித்து விடுகிறது
நினைவுப் பறவை.

நீ அருகில்
இல்லாத
இரவுகளைக் கூட
கனவுகளை வைத்து
சமாளித்துக் கொள்கிறேன்.

ஆனால்.,
உன் அரவணைப்பு
இல்லாத
அதிகாலைகள்
ஏக்கப் பெருமூச்சுகளால்
தகிக்க
ஆரம்பித்து விடுகின்றன.

காலைப் பொழுதுகளை
தாண்டி நீளும்
வேளைப் பொழுதுகளில்
எல்லாம்
கண்ணுக்கு
புலப்படாமல்
மறைந்து கொள்ளும்
நினைவுப் பறவை-

மாலை மங்கும்
நேரத்தில்
மீண்டும் வந்து
அருகில் அமர்ந்து
கொள்கிறது.

சிறகுகளைப்
படபடவென்று அடித்துப்
பறக்கப் போவதாய்
பாவனை செய்கையில்
அருகில் இழுத்துக்
கைப்பிடிக்குள்
அடக்கி விடுகின்றேன்.

மெல்லிய
சிறகுகளை
வருட எத்தனிக்கையில்
செட்டைகளினால்
மொத்தமும்
மூடி விடுகிறது
என்னை!

- அ.ஈடித் ரேனா





# பவானி ஆற்றங்கரையில் ஒரு பைந்தமிழ்ச்செம்மல்

தமிழுக்கு அது ஒரு சிறந்த மொழி என்பதைவிட இனிமையான மொழி என்பதே சாலப் பொருந்தும். இல்லாவிடில் மதத்தைப் பரப்ப வந்த கான்ஸ்டான்டைன் நோபல் பெஸ்கி, தம்பெயரை வீரமாமுனிவர் என்று மாற்றிக் கொண்டு தமிழ்ப்பணி செய்திருப்பாரா? ஜி யு போப் நான் ஒரு தமிழ் மாணவன் என்று வெளிப்படையாக அறிவித்திருப்பாரா? ஒரு தேம்பாவணியும் சீறாப்புராணமும் நமக்குக் கிடைத்திருக்குமா? கவிக்கோ அப்துல் ரகுமான் கவிஞர் மு மேத்தா கவிஞர் இன்குலாப் போன்ற இசுலாமியக் கவிஞர்களை நம் தமிழ்தானே வாரி வழங்கியிருக்கிறது.

அவ்வரிசையில் இம்மாதம் நாம் நேர்காணல் செய்துள்ள கவிஞரும் வருகிறார். இவரது கவிதைகள் காதற்சுவை தமிழ்மொழிச் சுவை அங்கதச் சுவை என பல்வேறு சுவைகளைக் கொட்டும் வகைகளில் எழுதப்பட்டிருக்கும். அருகில் ஒரு அகராதி வைத்துக் கொண்டுதான் படிக்க வேண்டும் எனுமளவுக்குப் பழஞ்சொற்களைக் கையாளுவதில் வல்லவர். பாகுபாடின்றி எழுதும் கவிஞர். பவானியாற்றங்கரையில் வசிக்கும் கவிஞர் சையத் யாகூப் அவர்களை நம் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் செய்த நேர்காணல் இதோ...

♦ வேங்கைமார்பன் என்ற பெயரின் இரகசியம் என்ன?

ஒரு தமிழ்ப் பாவலரை, அடியேனை தமிழ்ப் பெயராலும் உலகத்திற்கு அறிமுகம் செய்யலாம் என்று ஒரு புனைப் பெயரை தேர்வு செய்தேன். மதம், குலம் ஏதும் கலவாதப் பெயராக இருக்கும் பட்சத்தில் மத நல்லிணக்கம் கொண்டு அனைத்து மதத்தையும் சமமாகப் பாவிக்கும் எனது எழுத்துக்களுக்கும் பொருந்தட்டும் என்ற எண்ணம். அதன் வெளிப்பாடு 'வேங்கை மார்பன்'

♦ தாங்கள் பிறந்த ஊர் மற்றும் பெற்றோர் குறித்து..

நான் பிறந்தது ரம்மியமான இயற்கை சூழல் அமைந்த மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில், நெல்லை மாவட்டத்தில் அமைந்த 'பணகுடி' என்னும் சிற்றூர். தந்தை காவல் துறையில் பணிபுரிந்த, இறையச்சம் கொண்ட சாமானியர். தாயார் இல்லத்தரசி. நடுத்தர குடும்பம்.

♦ தங்கள் இளமைக்காலக் கல்வி மற்றும் பட்டங்கள் குறித்து.

பள்ளி இறுதி வகுப்பு நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியில் 'திலகர் வித்தியாலயம்'. தமிழில் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி. கணிதம் இளங்கலை படித்தது நெல்லையில் அமைந்த மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில், முற்றும் ஆங்கில வழிக் கல்வி.

♦ கவிதை எழுதும் ஆர்வம் எப்படி வந்தது?

ஆரம்ப காலத்தில் ஆங்கிலம் மற்றும் இந்தியில் பற்று அதிகம். கணிதம் விருப்ப பாடமாக அமைந்தாலும் ஆங்கில இலக்கியம் மற்றும் புதினங்கள் நிறையவே படித்தேன். அதே சமயம் தமிழ் இலக்கிய இதிகாசங்களையும் விட்டு வைக்கவில்லை. பிடித்த எழுத்தாளர் நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன், தி. ஜானகிராமன். பாரதியார் பாடல்கள் மேல் காதல் அதிகம். ஆனால் நான் கவிதை எழுத தூண்டியது நிச்சயம் செந்நாப் போதார் வள்ளுவர்தான். எதற்கு எடுத்தாலும் திருக்குறளை கோடிட்டுக் காட்டுவேன். அந்தச் சொற்கள் மனதில் எப்போதும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். கேட்டால் வேடிக்கையாக இருக்கும். நான் முதன் முதலில் பத்திரிகையில் எழுதியது அஞ்சலி கவிதைதான். முகநூலில் எளிமையான தமிழில் உரைநடை கூட கவிதை எனும் பெயரில் பதிவுகளாய் வந்து கொண்டு இருப்பதைப் பார்த்தவுடன் நாமும் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று தோன்றியது. முதலில் கவித்துவமாக பின்னூட்டங்கள் போட ஆரம்பித்தேன். பின்னர் சில கவிஞர்கள் கொடுத்த ஊக்கத்தில் 'நிலாமுற்றம்' என்ற குழுமத்தில் எழுத ஆரம்பித்தேன். இன்று உங்கள் முன் 'வேங்கை மார்பனாக' நிற்கிறேன்.

♦ கவிதை என்றால் என்ன என்று கருதுகிறீர்கள்?

கவிதை என்பது வெறும் உதடுகள் படிக்கக் கூடாது. படிப்பவரின் சிந்தையை

ஒசூரில் நடைபெற்ற கவியரங்கில் திரு ஆவடிக்குமார் அவர்களிடம் விருது பெற்றபோது





கவிஞர் ரூபா அன்றன் சுவிஸ், ஓசூர் மணிமேகலை ஆகியோருடன்




சென்னையில் 1000 கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர்கள் ஞானி, சரஸ்வதி பாஸ்கரன் ஆகியோருடன்

உரசிச் செல்ல வேண்டும். கவிதை என்பது ஆற்று வெள்ளம் போல் ஓட வேண்டும். நான்கு எல்லைக்குள் அணையாக அடக்கக் கூடாது. கவிதை எப்படி இருக்க வேண்டும் என்று நன்னூல் சொல்கிறது.

‘சில சொற்களில், பலவிதமான பொருள் களை, சிறப்பான ஒரு கண்ணாடியில், துல்லியமாக காட்டுவது போல திடமாக, நுட்பமாக சிறப்பாக சொல்வது கவிதை‘

பாடல்

‘சில்வகை எழுத்தில்
பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற்
செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ்
சிறந்தன சூத்திரம்‘

கவிதையிலி சொல்லாட்சியும் இருக்க வேண்டும். தனித்துவம் இருக்க வேண்டும்.

♦ கவிதை எழுதும்போது யாரை முன் மாதிரியாக வைத்து எழுதுகிறீர்கள்?

கவிதை எழுத யாரையும் முன்மாதிரி யாக வைக்க வில்லை. எனக்கு மாதிரி நானே தான்

♦ அரபி உருது இந்தி ஆங்கிலம் எனப் பிறமொழிகள் அறிந்துள்ளதாகத் தெரிகிறதே. அதில் உள்ள இலக்கியங் களைப் படித்துள்ளீர்களா?

தமிழ் ஆங்கிலம் இந்தி உருது ஆகிய 4மொழிகள் தெரிந்தாலும் தமிழ் ஆங்கில இலக்கியங்கள் தான் அதிகம் படித்து இருக்கிறேன். இந்தி உருது கலந்த திரைப்பாடல்கள் அதிகம் தினந்தோறும் கேட்பேன். அநேகமான பாடல்கள் இலக்கிய தரத்தையும் விஞ்சும் அளவில் இருக்கும்.

நிலாமுற்றம் ஆண்டுவிழாவில் கவிஞர் முத்துலிங்கத்திடம் விருது பெற்ற போது அருகில் முத்துப்பேட்டை மாறன்



♦ ஆங்கிலக் கவிதைகள் எழுதுவீர்களா? ஏதாவது ஒன்றைச் சொல்லமுடியுமா?

அறிவு முதிர்ச்சி அடையும் முன்னர் ஆங்கிலத்தில் கவிதை என்ற பெயரில் சில பல எழுதினேன். பாதுகாத்து வைக்க வில்லை.

♦ தமிழ்க் கவிதைகளை ஏன் நீங்கள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யக் கூடாது?

என்னைப் பொறுத்த மட்டும் மொழி மாற்றம் செய்யுங்கால் மூலத்தில் உள்ள சுவை மொழிமாற்றக் கவியில் வருவ தில்லை. பொருள் இருக்கும். சிறந்த வரிகள் கூட மிக சாதாரணமாக தெரியும். பிரத்தியேகமாக அந்தந்த மொழிக்கு கவித் துவமான சொற்கள் உண்டு. இணைச்சொல் தேடுவது கடினம். இரண்டு மொழியிலும் தேர்ந்த கவிஞராக இருந்தாலும் ஒப்புமை செய்வது சிரமம். சூர்ப்பனகை வர்ணனை கம்பகாதையில்

‘பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர்
பல்லவம் அனுங்க,
செஞ் செவிய கஞ்சம் நிகர்,
சீறடியள் ஆகி,
அம் சொல் இள மஞ்ஞை என,
அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என,
வஞ்ச மகள் வந்தாள்‘

இதையெல்லாம் மெருகு குறையாமல் மொழி மாற்றம் செய்ய ஷேக்ஸ்பியர் காலத்திற்கு செல்ல வேண்டும்.

♦ நீங்கள் எழுதும் கவிதைகளில் ஏராள மான புழக்கத்தில் இல்லாத சொற் களைப் பயன்படுத்துவது ஏன்?




பல்லடத்தில் நடந்த கவியரங்கில் மற்ற கவிஞர்களுடன்

நான் அதிகம் பழைய இலக்கியம் தேடிப்பிடித்து படிப்பதுண்டு. கவிதை எழுத ஆரம்பிக்கு முன்னர் நெடுநல்வாடை, திருப்புகழ், தேவாரம், திவ்விய பிரபந்தம் என்று சிறிது நேரம் படிப்பதுண்டு. நினைவில் உள்ள சொற்கள் தாமாகவே வந்து விழும். கம்பனை கொஞ்சம் அதிகமாக படிப்பேன் அவ்வப்போது.

♦ தமிழ்ச் சொல்வளத்தை எவ்வாறு பெருக்கிக் கொள்கிறீர்கள்?

அதிகம் படிப்பதுதான் காரணம். மற்றவர்கள் கவிதைகளையும் விரும்பிப் படிப்பேன். படிக்க படிக்க சொல் வளம் பெருகும். படித்த சொற்களை பயன்பாட்டில் கொண்டு வர வேண்டும். இல்லையெனில் நமக்கே மறந்து போகும்.

♦ தங்களுக்குப் பிடித்த 5 கவிஞர்

கிருட்டிணகிரியில் ஒரு கவியரங்கில் விருது பெற்ற போது





பெயரனுடன் கவிஞர் சையத் யாகூப்


களைக் கூற முடியுமா?

கண்ணதாசன்,
மருதகாசி,
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,
வாலி,
முத்துக்கூத்தன்

♦ தற்காலக் கவிஞர்களில் உங்களைக் கவர்ந்த கவிஞர்கள் இரண்டொருவரைக் கூற இயலுமா? ஏன்?

திரையில் விக்டர் தாஸ், வைரமுத்து, முத்துக்குமார். முகநூலில் பொன்மணி தாசன், மன்னை மணிமாறன், கமல சரசுவதி, இராம வேல்முருகன் வலங்கைமான், பட்டுக்கோட்டை ராஜா, இம்மானுவேல் ஆலன்ஸ் இத்யாதி..

கவிஞர் இராம் வேல்முருகனுடன் ஒரு நிகழ்வில்



♦ இதுவரை தாங்கள் எழுதியுள்ள நூல்கள் ஏதாவது உள்ளதா?

இப்போது தான் முதல் நூல் தயாராகிக் கொண்டு இருக்கிறது. முன்னர் சந்தர்ப்பம் இணைந்து வரவில்லை.

♦ முகநூல் ஒரு இருபுறம் கூர்மை யுள்ள கத்தி என்பது உண்மையா?

ஆம், இருமுனைக் கத்தி போல் தான் முகநூல். ஒரு முனை அறிவு விருத்தி, திறமையை வெளிக் கொணர எளிமையான ஊடகம். மறுமுனை நேரத்தை அபகரிக்கும் முதலை. அளவோடு அறிவோடு பயன் படுத்த அட்சயப் பாத்திரம்.

♦ கவிதை எழுதும் கலையை உங்க ளுக்குச் சொல்லிக் கொடுத்தவர் யார்?

கவிதையை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. புதுக்கவிதை வந்தபிறகு எப்படி எழுதினாலும் ஒரு பாணி. ஆனால் கருவுக்கும் சொற்களுக்கும் ஆரம்பத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் எழுதி வந்தேன். ஓரிரு முறை தஞ்சைத் தமிழ் மன்றம் நடத்தி வரும் தமிழ்ச் செம்மல் இராம வேல்முருகன் வலங்கைமான் அவர்கள் மேலோட்டமாக சில குறிப்புகளைச் சொல்ல அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். அவருக்கே அது ஞாபகம் இருக்காது. தமிழ்ப் பணி என்றால் எனக்கு ஞாபகம் வருவது அவர் பெயர்தான்.

♦ அல்லாவையும் இராமனையும் பற்றி ஒரு கவிதை தரஇயலுமா?





கவிமுகில் விருது பெற்றபோது



கவியரங்கத்தில் மற்ற கவிஞர்களுடன்

வேறு தலைப்பு கொடுங்கள். இப்போது அரசியல் வட்டாரத்தில் இதை ஒத்த கருத்து பெரும் பிரச்சினைய கிளப்பி உள்ளது.

♦ எதிர்காலத் திட்டம் என்ன?

எனது படைப்புகள் அதிகம் காதல் கவிதைகளாக இருக்கும், காரணம் எனக்கு கொடுக்கப் பட்ட தலைப்புகள் அப்படி. இனிவரும் நாட்களில் சமூக சீர்திருத்த கவிதைகளுக்கு முதலிடம் கொடுத்து பிற்கால சந்ததிக்கு பயன்படுமாறு எழுத திட்டம்

♦ இளைஞர்களுக்கும் வளரும் கவிஞர்களுக்கும் தாங்கள் கூறும் அறிவுரை யாது?

வளரும் கவிஞர்கள் முதலில் எழுத்துப் பிழை இல்லாது எழுதப் பழக வேண்டும். நாம் எழுதும் நான்கு எழுத்துக்கள் நான்கு பேருக்காவது பின்னாளில் பயன்படப் போகிறது, ஆகையால் சிறிதேனும் தமிழை வளர்க்கும் எண்ணத்தோடு எழுதப் பட வேண்டும். வெறும் எதுகை மோனை இயைபு மட்டும் இருந்தால் போதும் என்று உரைநடையாகவோ அல்லது கன்னாபின்னாவென எழுதாமல் கட்டுக்கோப்போடு எழுத வேண்டும்.

♦ தமிழ்நெஞ்சத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தமிழ்நெஞ்சம் பத்திரிகை பலராலும் பேசப்பட்டு வருகிறது. சாமானியர் களுக்கும் வாய்ப்பு கொடுத்து ஒரு நடுநிலை பத்திரிகையாக வளர்ந்து வருகிறது. தமிழ் பணியில் ஒரு முக்கிய பங்கு ஆற்றி வருகிறது. மென்மேலும் வளர்ச்சி அடையவும் புகழ் பெறவும் மனமார்ந்த வாழ்த்துகள்.

சந்ரோதய விழாவில் விருது பெற்ற போது





ஈரோட்டில் குறள்நெறிக்கவிஞர் விருது பெற்ற போது





# மௌனத்தின் ஓசை...




விஜி சிவா
நோர்வே.


'அடுத்து என்ன... யோசிக்க வேண்டாமா..?' என் கணவரின் குரல் அறைக்கு வெளியே சத்தமாய் மோதி, என் மீது சிதறியது

ஒரு நிமிட அமைதிக்குப் பின்.... 'என்னால் முடியாது.' சலிப்புடன் வார்த்தைகளைச் சலித்தான் மகன்.

'என்னாலும் முடியலடா...' சற்றே வெறுப்பும் கோபமும் உரசிக்கொண்டது போல் மாமியாரின் குரல்.

வீடு எரிச்சல் கொண்டது.!

'எங்களுக்கும் வயசாகுது; எங்கள பார்த்துக்கவே எங்களால முடியல...!' அலுத்துக் கொண்டார் மாமனார்.

'என்னடா இது...? நாப்பது வயசுலேயே இப்படியா வாயில நுழையாத பேர்ல ஒரு வியாதி வரும்..?! எப்பப் பார்த்தாலும் 'டிங்கு டிங்கு'னு மணி அடிக்கிறா. முதல்ல அவ கட்டில்ல இருக்குற அந்த மணியக் கழட்டுடா...'

மாமியாரின் அதிகாரத் தோரணையில் மணி அடித்தது..!

'நான் ஆபீஸ் போவேனா, குழந்தைகளைப் பார்ப்பேனா.... இல்ல இவளைப் பார்ப்பேனா....

ஆபீஸ்ல நிம்மதியா வேலை செய்ய முடியுதா!' ஆதங்கத்தையும் கோபத்தையும் வார்த்தைகளில் கோர்த்தார் கணவர்.

வீடு வெறுப்பாய்ச் சிணுங்கியது!

'காலேஜ்ல கூட நான் நிம்மதியா இல்ல. வீட்டுக்கு வரவே பிடிக்கல! என் வயசுப் பிள்ளைங்க எல்லாம் எப்படி ஜாலியா இருக்காங்க தெரியுமா...?' மீண்டும் மகனின் குரல் என் கருவறையைக் குலுக்கியது!.

வீடு அலுத்துக் கொண்டது!

'வேளாவேளைக்கு நல்லாச் சாப்பிட்டு பகலெல்லாம் தூங்குறா... இரவாச்சுன்னா 'வலி வலி'ன்னு கத்தி, நம்ம தூக்கத்தைக் கெடுக்கிறா... நாம என்ன பாவம் பண்ணினோமோ...?'

மாமனார் முணங்க, வீடு மூக்கை உறிஞ்சியது!

எட்டு வயதிலும் இன்னும் மழலை மாறாத மகளின் குரல்...' நான் அம்மாவ... பா...த்துப்பேன்...' இதமாய் தடவியது.

'ஆமா.... நீ பாத்துப்ப; போடி அங்கிட்டு. முதல்ல உன் டிரஸ்ஸ உனக்கு ஒழுங்கா போட தெரியுதா... உனக்கே ரெண்டு பேர் வேண்டி கிடக்கு...ம்...கிழவி

மாதிரி பேசாத...‘

‘போ பாத்தி! நீதான் கியவி...‘ மகளின் கால் கொலுசொலி, நாய்க்குட்டியின் ஓசையில் தேய்ந்து போனது.

‘இந்தா பாருடா... எங்களால முடியல. ஏதாவது ஏற்பாடு பண்ணு...! அவ அம்மா, அண்ணன்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிடு.‘

‘ஆமாம்பா... தாத்தா, பாட்டி சொல்றது தான் சரி. ஏற்பாடு பண்ணுங்க!‘ மகனின் குரலில் நிம்மதி தொனித்தது.

வீடு நேரடியாகவும் மறைமுகமாகவும் சிணுங்கியபடி ஆணையிட்டது.!

சற்றே கரகரத்த குரலில் வார்த்தை களைக் கிளறினார் கணவர்.... ‘ம்... ஒரு ஹோம்ல ஏற்கனவே பேசியிருக்கேன் ; அங்க இவள நல்லாப் பார்த்துகுவாங்க. அங்க சேர்த்துடலாமா...!? என்ன சொல்றீங்க...?‘

கணவரின் மெல்லிய குரல் எனக்குள் மயானம் நோக்கியது.!?

‘....ம்......ம்... சரி...‘

குரல்கள் திசைக்கொன்றாய் உரச, எனக்குள் கருகிய வாசனை வீசியது.!

இப்பொழுது வீடு நிம்மதியானது!

வீடு சவமான சற்று நேரத்தில் தொலைக் காட்சி உயிர் பெற்று, யார் யாரோ பேசினார்கள்!

வீடு உமிழ்ந்த எஞ்சிய வர்ணங்கள், தூரிகைகளாய் மாறி ஓவியம் வரைந்தன என் தலையணையில்.... ’காய்ந்தும், ஈரமாயும்!’

சக்கர நாற்காலி என்னை அணைத்துக் கொள்ள, சன்னலோரம் எட்டிப் பார்த்தது மல்லிகை...! இன்று ஏனோ மல்லிகையின் மணம் அளவிற்கதிகமாய்; என்னைத் தாலாட்டித் தூங்கவைக்கும் முயற்சியில் அறைக்குள் நுழைய முயற்சித்தன காற்றும் மழையும்.!

அன்றும்...இரவெல்லாம் பகலாய், எப்பொழுதும் போல் மின்மினிகளுடன் மௌனமாய்ப் பேசியபடி சக்கர நாற்காலி என்னைப் பார்த்து புன்னகைத்தது.!

.............

மறுநாள் பிறந்த வீடு வந்தது.! கண்ணீருடன் கண்சிமிட்டி புன்னகைத் தாள் அம்மா.

‘அடடே என் பொண்ணு எவ்வளவு அழகு... என் தங்கம்.‘ என் முகத்தைத் திருஷ்டி சுத்தி, என் தலைசீவி, ஆடை மாற்றி ‘வா போகலாம், நம் வீட்டுக்கு!?‘ கலங்கிய புன்னகையுடன் உறுதியாய்ச் சொன்னாள்.

’இனி இதுதான் உன் வீடு! உன் அத்தையும் மாமாவும், இனி உன் அம்மா அப்பா’ என அன்று சொன்ன அம்மா...

’ஆண் ஒன்று, பெண் ஒன்றாய் இரு குழந்தைகள்; அதிர்ஷ்டக்காரிடி நீ’ என சொன்ன அம்மா.... ’உன் சமத்து யாருக்கு வரும்?! உன்னை எல்லாரும் கொண்டாடுறா. உன் நல்ல குணத்துக்கு ஏத்த மாதிரி உனக்கு கடவுள் நல்லதா வழிகாட்டி இருக்காரு..!’ பாராட்டி உச்சி முகர்ந்த அம்மா.... இன்று என் பார்வையைத் தவிர்க்கத் தலை குனிந்தாள்!

*'இங்கிருக்கும் எது வேணுமோ எடுத்துட்டு போம்மா! எதையும் மறந்துடாதீங்க.'*

*மாமியார் கனிவாய், கவனமாய் வார்த்தைகளை உதிர்க்கச் சிரமப்பட்டார்.*

*என் பார்வைகளைத் தவிர்க்க வார்த்தைகளுக்குள் நெளிந்தார் கணவர்.... 'நீ ஒன்னும் நினைச்சுக்காத. உங்க அம்மா வீட்ல உன்னை நல்லா பார்த்துக்குவாங்க. உனக்கும் இங்க இருக்கிறதைவிட உங்க அம்மாகிட்ட இருந்தா நல்லா இருக்கும்ல அத...னால.. . தான்..'.*

*சுவரோரம் ஒரு புழு நெளிந்து ஊர்ந்ததை நான் உற்றுப் பார்க்க, தயக்கமாய் விலகி நின்றார் கணவர்.*

*இப்பொழுது புகுந்தவீடு பாசமாய்ப் பேசியது.!?*

*வீட்டின் அமைதியைச் சக்கர நாற்காலி பறித்துக் கொள்ள, வாசல்வரை வந்து வழி அனுப்பியது வீடு.*

*'டோன்ட் ஒர்ரி மா...பாட்டி வீடுதான் உனக்கு பெஸ்ட்.. கொஞ்சம் பிராக்டிகலா*

---

## செருக்கழித்தருள்வாய்!

விருப்பொடு வெறுப்பு மில்லா
வேந்தனே சிவனே போற்றி
நெருப்பொடு நீரு மாகி
நெடுவளி யானாய் போற்றி
பொறுப்புடன் நிலமும் ஆன
பொன்னொளிர் வானே போற்றி
செருக்கெலாம் அழித்தே எம்மைச்
செதுக்கிடும் அன்பே போற்றி

கண்டதும் காதல் கொள்ளும்
களிப்புறு மனமே போற்றி
தொண்டரின் மனத்துள் வாழும்
தூயநற் சுடரே போற்றி
அண்டிய மாந்தர் உள்ளே
அடங்கிடும் மலையே போற்றி
எண்டிசை யாவும் நின்றே
என்னையும் காப்பாய் போற்றி

மந்திர மலையே போற்றி
மாறிடா மனமே போற்றி
தந்திர நீறே போற்றி
தலைமகன் சிவனே போற்றி
சந்திரன் கங்கை சூடும்
சத்தியத் திருவே போற்றி
இந்திரன் வணங்கிப் போற்றும்
எழுகதிர்ச் சுடரே போற்றி

சூலையாம் நோயைத் தந்தே
சொற்களின் அரசைப் பெற்றாய்
ஓலையைக் காட்டி யன்றோ
சுந்தரர் நட்பைப் பெற்றாய்
பாலெனும் அமுது தந்தே
பாலனைப் பாடச் செய்தாய்
ஆலமர் செல்வ னாகி
அருள்தரு சிவனே போற்றி!

மாங்கனி சுவைத்துச் சென்ற
மந்திர வடிவே போற்றி
ஓங்கியே உயர்ந்து நிற்கும்
ஒப்பிலா மலையே போற்றி
தேங்கிடா தெங்கும் ஓடும்
தெள்ளிய ஆறே போற்றி
ஈங்கெனைக் காப்ப தற்காய்
இன்னருள் பொழிவாய் போற்றி

யோசிக்கணும். சென்டிமென்ட்டோட இருக்கமுடியாது இல்லையா, பிகூல்.... நான் அடிக்கடி உன்னை வந்து பார்த்துக்கிறேன்..‘ என் மார்பில் முட்டி முட்டி பால் குடித்த என் மகன், இப்பொழுது வார்த்தைகளில் முட்டி மோதிக் கொண்டிருந்தான்.!

மகனின் அலட்சியமான வார்த்தைகளுக்கு வீடு வேகமாய்த் தலையாட்டியது.!

என் பார்வை சுற்றும் முற்றும் தேட....

‘முந்தானையால் வாயைப் பொத்திய படி, மூக்கை உறிஞ்சிக் கொண்டிருந்த மாமியார், சட்டென வார்த்தைகளை உறிஞ்சாமல் கூறினார்.

‘பாப்பா ஸ்கூலுக்கு போயிட்டா! நீ கௌம்புமா, உடம்ப பாத்துக்கோ...‘

’வலது காலை எடுத்து வைத்து சந்தோஷமா வாம்மா. சிரிச்சமுகம் உனக்கு, திருஷ்டி சுத்தி போடணும் எங்க வீட்டு மகாலட்சுமிக்கு’ என்ற புகுந்த வீடு..... ’நல்லபடியா கிளம்புமா... உடம்பை பார்த்துக்கோ’ என்று கண்ணைக் கசக்க

வறுமையை வென்று நானும்
வான்புகழ் ஈட்ட வேண்டும்
பொறுமையாம் குணத்தைக் கொண்டே
புவிதனை வெல்ல வேண்டும்
சிறுமனம் கொண்டோர் நட்பை
செம்மையாய் மாற்ற வேண்டும்
நறுமணப் பூவைப் போல
நான்மணம் வீச வேண்டும்

பகைவரும் நட்பாய் மாறிப்
பண்புடன் வாழ வேண்டும்
தொகையடி யார்கள் போலத்
தொண்டினை ஆற்ற வேண்டும்
வகைவகை யாகப் பாக்கள்
வண்டமிழ் மொழியில் யாத்து
நகைமுகம் கொண்டே அன்பர்
நட்பினைப் பேண வேண்டுங்


சிலம்பினைப் போல யானும்
சிறப்பறு நூலைச் செய்து
நலம்பல ஈட்ட வேண்டும்
நானிலம் போற்ற வேண்டும்
தலம்பல பயணம் செய்து
கட்டுரை யாக்க வேண்டும்
உலகெலாம் காக்கும் உன்றன்
உறுதுணை என்றும் வேண்டும்

அட்டமாச் சித்தி கொண்ட
அருட்பெருஞ் சோதி யுன்னை
அட்டமாத் திசையைக் காக்கும்
அருந்தமிழ்ச் சுடராம் உன்னை
அட்டமாக் குணங்கள் கொண்ட
அருமறை வேந்தன் உன்னை
இட்டமாய் வணங்கச் செய்வேன்
இணங்கியே அருளைத் தாராய்!

தெளிவுறு மனத்தைத் தந்து
தேற்றவே என்னும் வாராய்
நளியிரு முந்நீர் அன்ன
நல்லருள் எல்லாம் தாராய்
அளியெலாம் என்மேல் கொண்ட
அற்புதத் திருவே வெல்லும்
ஒளியெலாம் என்மேல் பாய்ச்சி
உயர்வுற அருளைத் தாராய்!

## இராம வேல்முருகன்

**வலங்கைமான்**



முயற்சித்தபடி அமைதியானது.

சக்கர நாற்காலி படி தாண்ட..... நான் நட்ட மல்லிகையும் முல்லையும் என் முகம் உரசி என்னைத் தடுக்க முயற்சிக்க.... நான் வளர்த்த கன்று "ம்மா" என ஓடி வர.... குப்பைத் தொட்டியில் இருந்து நான் எடுத்து வளர்த்த நாய்க்குட்டி என் சக்கர நாற்காலியில் ஒண்டிக்கொள்ள.... தெரு எட்டிப் பார்த்தது.!

உற்றார் உறவினர் புடைசூழ புதுமணப் பெண்ணாய் நான் வந்த பொழுது எட்டிப் பார்த்த தெரு.... காய்கறிக்காரருக்கும் பூக்காரிக்கும் புன்னகையுடன் நான் உணவளித்ததை அதிசயமாய்ப் பார்த்த தெரு..... நான் போடும் கோலங்களைப் பார்க்க முண்டியடித்த தெரு.... என் ஓவியங்களை ரசித்த தெரு.... ' இப்படி ஒரு அன்பான மருமக எங்களுக்கில்லையே..' என ஏக்கமாய்க் கூறிய தெரு..... என் சமையல் குறிப்புகளை ருசித்த தெரு..... என் கவிதைகளையும், கதைகளையும் விமர்சித்துப் பாராட்டிய தெரு....

இன்று-

பல கேள்விகளுடனும் சில பதில்க ளுடனும் எட்டிப் பார்த்துக் கொண்டி ருந்தன...!?

காரில் நான் ஏற்றப்பட, 'பார்த்து... பார்த்து' தெருவில் சில குரல்கள் சன்னமாய், கவனமாய் ஒலித்தன.!

தெருவெல்லாம் முகங்கள்; முகமூடி களைக் கழற்றிய முகங்கள்!

நாய்க்குட்டி முண்டியடித்து, கம்பிக் கதவுகளுக்கு இடையில் தன்னைச் செருகிக் கொண்டு என்னைப் பார்த்துக் கதறியது.

'விடுடா.... சனியன் போய்த்தொலை யட்டும்... இதுவும் கத்தி கத்தி உயிரை வாங்குது...' மாமியாரின் 'இதுவும், சனியன்' இந்த இரண்டு வார்த்தைகளும் இறுதியாய் என் காருக்குள் வந்து நுழைகையில், நாய்க்குட்டி ஓடி வந்து என் மடியில் விழுந்தது.

கார் உயிர் பெற, நாய்க்குட்டியின் பார்வை என்னை நெருங்க நெருங்க, வீடு தூரமானது.

'ஓடி ஒளிந்து உரசிய நினைவுகளுடன், இனி அந்த வீடு என்னுள் எப்பொழுதும் மௌனமாய்ப் பேசுமோ..?!' அம்மாவின் வாசத்தில், நாய்க்குட்டியின் தழுவலில் வாகனம் ஒரு மயானத்தைக் கடந்தது.!

................

ஓடிவந்து என்னை கட்டியணைத்துக் கொண்டார் என் அண்ணன்.... 'வாடா.... வாடா பட்டுக்குட்டி..'

அண்ணி மெதுவாய், கவனமாய்ப் புன்னகைத்தாள்.... 'பார்த்து வாம்மா...'.

நாய்க்குட்டி சுற்றும் முற்றும் ஓடி என்னுடன் வந்து ஒட்டிக் கொள்ள..... அண்ணி சற்று விலகி நின்று முணுமுணுத் தாள்.

'இதை வேற ஏன் அத்தை கூட்டிக்கிட்டு வந்தீங்க....?'

'பாவம்மா அது; வாயில்லாத ஜீவன். அது நம்ம பாப்பா கூடவே ஒட்டிகிச்சு. என்ன பண்றது சொல்லு....? நான் பார்த்துக்கிறேன்மா. அது ஒண்ணும் பண்ணாது. நாய் நன்றியுள்ள ஜீவன்மா....'

அம்மாவின் வார்த்தைகள் நிதானமாய், தெளிவாய்க் கெஞ்சின.

அண்ணி அண்ணனைப் பார்த்தவாறே தயக்கத்துடன் 'ம்' என்றாள்.

'அத்தை.... என் அழகு அத்தை' ஓடி வந்து கட்டிக் கொண்ட அண்ணண் மகளின் வார்த்தைகளில் அம்மாவின் சாயல் தெரிய, மனதிற்குள் ஏதோ ராகம் கேட்டது.

'வா தங்கம்... நம்ம ரூமுக்கு போகலாம்' வீல் சேரின் சத்தத்துடன், நாய்க்குட்டியின் தழுவலுடன் அறைக்குள் நானும் அம்மா வும் பிரவேசிக்க..... 'அடடா.. அதே வாசனை....' மல்லிகையும் முல்லையும் சன்னலோரம் எட்டிப் பார்த்தன.

அம்மா புன்னகைத்தபடி என் தலையைத் தடவினாள். 'உனக்குப் பிடிக்கும்ல... அதான் வாங்கி வச்சேன்.'

சட்டென வழிந்த என் கண்ணீர், துணைக்கு உதடுகளைத் தேடியது!

அந்த அறை முழுவதும் என் ஓவியங் களும், நான் எழுதிய கதை, கவிதைப் புத்தகங்களும், நான் வாங்கிய பரிசுகளும் அழகாய் அடுக்கப்பட்டு இருந்தன.

'உன் அண்ணனும் அண்ணியும்தான் உனக்காக இதெல்லாம் பார்த்து பார்த்து பண்ணுனாங்க....' இதைக் கேட்டுக்கொண்டே வந்த அண்ணியின் பார்வை ஆச்சரியமாய் அம்மாவைக் கடந்து என்னை நோக்கிப் புன்னகைத்தது.

'பாட்டி... நேத்து ஒரு நாள் நீங்க இல்லாம நான் பட்டினியா இருந்தேன் தெரியுமா.? அம்மா சமைச்ச சாப்பாடு... உவ்வே.' அண்ணணின் மகள், என் அம்மாவின் காதோரம் கிசுகிசுத்து சிரித்தாள்.

சேலையை அள்ளிச் செருகிக்கொண்ட அம்மா, என்னைப் பார்த்து கண்ணடித்துப் புன்னகைத்தாள். 'முதல்ல உனக்கு ஸ்ட்ராங்கா நான் ஒரு டீ போட்டுத் தரேன்....' என்னைத் தீர்க்கமாய்ப் பார்த்து, நெற்றியில் முத்தமிட்டு, அவசரமாய் விலகி அடுக்களையை நோக்கிச் சென்றாள்.

அண்ணி கொஞ்சும் தொணியில் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள் என் அறைக்குள் நுழைய முட்டி மோதின. 'நேத்து ஒருநாளே நீங்க இல்லாம நான் திணறிப் போயிட்டேன் அத்தே. நேத்துல இருந்து ஒரே கால்வலி.... ஆபீஸ்ல வேற பயங்கர டென்ஷன்.'

'அதான் நான் வந்துட்டேன்லடா..நீ ரெஸ்ட் எடுத்துக்கோ. கால்ல தைலம் தடவிட்டு படு..... எல்லாம் நான் பார்த்துக்கிறேன்.!' அம்மாவின் வார்த்தை கள் பூபாள ராகமாய் அந்த வீட்டின் ஒவ்வொரு அறைக்கும் பரவ, என் செவிகள் மட்டும் ராகத்தில் சுதி விலகியதாய் உணர்ந்தது.

வீடு புரிய ஆரம்பித்தது.!

................

அம்மா என் கால்களுக்கு தைலத்தைத் தடவி மசாஜ் செய்வதை இந்த ஒரு மாதமாய் வழக்கமாக்கிக் கொண்டாள் .

சமாதானப் புன்னகையை தயக்கத்து டன் சிந்தியது போல் புன்னகைத்த அம்மா... 'மாப்பிள்ள இப்பத்தான் போன் பேசினாருமா.... நீ எப்படி இருக்கிற..... நல்லா இருக்கியானு கேட்டார்மா....' அவளுக்காய் நான் புன்ன கைக்க, அதன் அர்த்தம் புரிந்து சற்றே கலங்கிப் போனாள்.!

'பாரேன் குட்டிமா.... தினமும்

இப்படி கை கால் எல்லாம் மசாஜ் பண்ணிக்கிட்டே இருந்தா, கொஞ்ச நாள்ல நீ எந்திரிச்சு நடப்ப பாரு. டாக்டர் ஆயிரம் சொல்லட்டும். பெத்தவளுக்கு தெரியாதா தன் பிள்ளையப்பத்தி.? நீ சீக்கிரம் குணமாயிடுவ பாறேன்.! அம்மா சொன்னா பலிக்கும்.' அம்மா எனக்கு உற்சாகம் தருவதாய் எண்ணிக்கொண்டு, என் கால்களுடன் சேர்த்து வார்த்தைகளையும் உருவிக் கொண்டிருந்தாள்.!

'அம்மா.... அம்மா....' அவசரமாய் அறைக்குள் நுழைந்த அண்ணனின் பதட்டமான அழைப்பில், பூஜையறை யிலிருந்து ஒலித்த அண்ணியின் பக்திப் பாடல் சட்டென தேய்ந்து போனது.!.

'உனக்கு விஷயம் தெரியுமா....? நம்ம தங்கச்சியோட மாமியார் கீழ விழுந்து, முதுகுத்தண்டு உடைந்து, இப்ப பெட்ல இருக்காங்களாம்மா. மருந்து மாத்திரை கொடுத்தும் சரியாகலையாம். சரியாகக் கவனிக்க ஆள் இல்லாமல் 'வலி வலி'ன்னு கத்திக்கிட்டே இருக்காங்களாம். அவங்கள ஏதோ ஹோம்ல சேர்க்கப் போறதா சொன்னாங்களாம்.'

என் மனம் சட்டெனப் பரிதாபப்பட்டுப் பதறியது.!

'அச்சச்சோ... இது எப்படா நடந்துச்சு ?' அம்மா படபடப்பாய்க் கேட்டாள்.

'இது நடந்து இரண்டு வாரம் ஆச்சாம். அவங்க என் தங்கச்சிக்கு செஞ்ச பாவம் சும்மா விடுமா?'

அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுடா... பாவம், பெரியவங்க அவங்க' அம்மா கனிவாய்க் கண்டித்தாள்.

'என் தங்கச்சிய அவங்க எவ்வளவு கஷ்டப்படுத்தினாங்க. மனிதாபிமானம் இல்லாத ஜென்மங்கள் அதுங்க.' அவனின் மூச்சுக்காற்றில் கோபம் சிதறியது. 'பெரியவங்கள, உடல்நலம் இல்லாதவங்கள எப்படி கவனிச்சுக்கணும்னு நாம செஞ்சு காட்டினாத்தானே நமக்கு அடுத்து வர்ற தலைமுறையும் அதை சந்தோஷமா செய்வாங்க. அன்பு, பாசம், உறவு.... இதோட அருமைய, புனிதத்தை முதல்ல நாம உணர்ந்தாதானே, நம்ம பசங்களும் அதை உணர்வாங்க..'

அண்ணியின் நிழல் அறையின் வாயிலில் தயங்கியது!

அண்ணனின் வருடலில் அவன் இதயம் துடிப்பது கேட்டது.... 'இவளின் புனிதமான உறவை, இந்த தெய்வப்பிறவியை அவங்க மறந்துட்டாங்க.. நன்றி மறந்த ஜந்துக்கள் தான் அந்த வீட்டுல இருக்குதுங்க. அந்தம்மா சுயநலமா இருந்தா.... பசங்களும் சுயநலமாதான் இருப்பாங்கமா. 'கர்மா' சும்மா விடுமா...? அனுபவிக்கட்டும்! செஞ்ச பாவத்துக்கு என்னைக்கிருந்தாலும் தண்டனை இருக்குமா.. சிலசமயம் நாம செஞ்ச 'பாவம்' நம்மள விட்டுடும்.... 'நம்ம குழந்தைங்கள' பிடிச்சுக்கும்....' வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்த அண்ணன், நிதானமாய் என் தலை வருடியபடி வாயிலை நோக்கினான்.!

அறையின் வாயிலில்.... அண்ணனின் வார்த்தைகளும், பார்வைகளும் அண்ணி யின் கையிலிருந்த பூஜைத்தட்டை மோதியது போல் அது கீழே விழ, திருநீறு தரையெங்கும் சிதற, 'பாவம்... கர்மா... நம்ம குழந்தை...' அண்ணனின் அழுத்தமான வார்த்தைகளை அண்ணி முணுமுணுத்தபடி சிலையாய் நின்றாள்!.

அண்ணியின் கண்களில் இருந்து வழிந்த நீர், குனிந்து பூஜைத்தட்டை எடுத்துக்

*கொண்டிருந்த அம்மாவின் தலையைத் தொட்டது. அம்மா புன்னகைத்தவாறே திருநீறை அள்ளி தட்டில் போட்டபடி அண்ணியிடம் சொன்னாள். 'ஒன்னும் இல்லடா... சிந்தினது நல்ல சகுனம்தான். திருஷ்டி எல்லாம் போயிடுச்சு.!' அம்மா வின் கனிவான வார்த்தைகளில் பூக்களின் வாசம் வருடியது.*

*எங்கிருந்தோ ஓடி வந்த நாய்க்குட்டி, சிதறிக் கிடந்த திருநீறில் புரண்டு படுத்து விளையாடியது. சட்டென என்னருகில் வந்து தன் உடலைச் சிலுப்ப, திருநீறு காற்றில் பறந்து என்மீது உதிர ஆரம்பிக்க , என்னை மேகக் கூட்டம் சூழ்ந்தது போல் நினைக்கையில்....*

*அண்ணி மெதுவாய் என்னை நோக்கி வந்தாள்... உற்று நோக்கினாள்..! அவளின் உதடுகள் ஏதோ சொல்லத் துடித்து ஒன்றுக்குள் ஒன்று மறைந்தன! என் நெற்றியில் திருநீறிட்டவள், தலையை மெதுவாய் வருடி ,குனிந்து என் உச்சந்தலையில் முத்தமிட ....அம்மாவின் வாசம் வீசியது!*

*என் உடல் சிலிர்த்தது!.....என் அங்கங் கள் மெதுவாய் உள்ளுக்குள் எதையோ உணர ஆரம்பிக்க, சக்கர நாற்காலி சத்தம் எழுப்பியது. கால்கள் மெதுவாய் நீண்டன...!*

*'ஈஸ்வரா....' அம்மா சத்தமாய்க் குரலெழுப்பி மகிழ்வுடன் பூஜையறை நோக்கினாள்.*

*மௌனத்தின் ஓசையை அழகிய இசையாக்க...*

*அகமும் புறமும் துடிக்க...*

*வீடு என்னை அணைத்துக் கொண்டது.!*

# உறவு

வீடு தொடங்கி பணியிடம் வரை
நீடிக்கிறது அக ஒட்டுதலற்ற
புறக் கவர்ச்சிகளின் நிற்பந்தங்கள்.

தின்றுவிடும் பார்வைகள்
தினம் கடந்து செல்கின்றன
சாலையின் இருமருங்கிலும்.
அதில், எனக்கான தேர்வுகள்
இருந்தும்கூட வெறுமையாகக்
கடக்கிறேன்
சூழல் கவுரவம் ஒழுக்க நிலை கருதி.

பின்னொரு நாள், கடமை நிமித்தமாக
கடத்தப்படுகிறேன் ஒரு பண்டமென
மிகுந்த பொருட் செலவில்.

ஒரு கணப் பொழுதில்
மின்னலென இறங்கிவிடும்
சில தரிசனங்களில் பூரணமாகிறேன்.

அத்தனையும் புறந்தள்ளிச் செல்லும்
பைத்தியக்காரத் தனங்களில்
நிகழ்கிறது
உனக்கும் எனக்குமான உறவு.

**எஸ்.மைக்கேல் ஜீவநேசன்.**
தேனி.




# கொஞ்சம் சிரிங்க பாஸ்

## நூல் மதிப்புரை

நீங்கள் செய்யும் ஒரு புன்னகை பலநூறு புன்னகைகளை உங்களுக்கு சம்பாதித்துக் கொடுக்கக் கூடியது. ஜீவ ராசிகளில் புன்னகை செய்யும் வரத்தைப் பெற்றவன் மனிதனே! ஆம், இங்கு 'கொஞ்சம் சிரிங்க பாஸ்' என நம்மையும் புன்னகை செய்ய அழைக்கிறார் கவிமுகில் சுரேஷ். இவரின் கைக்கடக்கமான இந் நூல் பிரபஞ்சத்தின் மகிழ்ச்சிக்கு பல வழிகளைக் காட்டியுள்ளது. வனத்தைச் சுமக்கும் சிறுவிதையாய், புன்னகையின் நேசத்தை நமக்குள் விதைத்து, புன்னகை தேசமாய் வியாபிக்க, மனதுள் மகிழ்ச்சி ஆரவாரம் ஊற்றாகப் பெருக்கெடுப்பதை உணர வைக்கிறது.

மனித வாழ்வியலில் மகிழ்ச்சி மிகுந்த தருணங்கள் அனைத்தும் நம் ஆயுள் கூட்டும் மந்திரங்களே! மன அழுத்தத்தைக் குறைத்து மகிழ்ச்சியாய் வாழ வழி சொல்லும் இந்நூலும் வரம் தான் எனத் தோன்ற வைக்கும் விதமாக, எளிமையை அணிந்தபடி இலக்கியவானில் சஞ்சரிக்கத் தொடங்கியுள்ள இப்படைப்பானது, வாசகனை நேர்மறையான ஒரு சூழலுக் குள் கைதொட்டு அழைத்துச் செல்ல, மனது இலவம் பஞ்சாக மாறிப் பறக்க ஆரம்பிக்கிறது.

ஒன்பது கட்டுரைகளுடன் முப்பத்து நான்கு பக்கங்களில் கச்சிதமாய் வெளியான இந்நூலானது, புன்னகை பற்றிய பல பொன்மொழிகளையும், புன்னகை பற்றிய கவிஞர் வைரமுத்து எழுதிய வைரவரிகளையும் சுமந்து மெருகூட்ட, வாசிக்கும் அனைவரின் முகங்களிலும் புன்னகையை கொலுவிருக்கச் செய்து, இறுக்கமான மனங்களைத் திறக்கும் திறவுகோலாகவும் அமைந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. எழுத்தாளர் கவிமுகில் சுரேஷுக்கு வாழ்த்துகளைச் சமர்ப்பிக்கிறேன்.

புஸ்தகா வெளியீடாக வெளிவந்திருக் கும் இந்த நூலின் விலை 40/= ஆகும். நூல் தேவைக்கு... **+91 86104 22455**

தமிழமின்



# குற்றமும் குற்றவாளியும்

**புல்லாங்குழலன்**

என்னங்க... காலையில் வீட்டை விட்டுப் போன வினிதா இன்னும் வீடு திரும்பலைங்க என்று பயத்துடன் சொன்னாள் ராஜேஸ்வரி தன் கணவர் ரங்கநாத்திடம்.

அவள் எங்கு சென்றாலும் மாலை 5 மணிக்குள் வீடு திரும்பி விடுவாளே.என்ற ரங்கநாத் அலைபேசியைக் கையிலெடுத் தார்.

ஏங்க, நானும் இரண்டு மூன்று முறை போன் பண்ணினேன், போன் ஸ்விட்ச் ஆப்ன்னே வந்தது..

அலைபேசியை உயிர்ப்பித்த ரங்கநாத் அது தன் மனைவி சொன்னதுபோலவே ஸ்விட்ச் ஆப்னு வந்ததைக் கேட்டார். அவர் உடனே தன் நண்பர்கள் வீடுகளுக் கும், மகள் வினிதாவின் தோழிகளுக்கும் அலைபேசியில் பேசினார். அவர்களிடம் எந்தப் பயனுள்ள தகவலும் கிடைக்காத தால் அவர் தன் நெருங்கிய நண்பர்கள் சிலருடன் சில இடங்களில் தேடினார். ஒன்றும் பயனளிக்காததினால் அவர் வீடு திரும்பினார்.

அவர் வீடு திரும்பிய சில நிமிடங்களில் அவருடைய பக்கத்து வீட்டிலிருந்து இளைஞன் ரமேஷ் ஓடி வந்து உங்கள் மகள் வினிதா அந்த முகுந்தனோடு போவதை நான் பார்த்தேன் என்று பரபரப்புடன் சொன்னான்..

இந்த செய்தி கேட்ட மாத்திரத்தில் ரங்கநாத்தும் அவருக்கு தெரிந்த நண்பர் களும் முகுந்தன் வீட்டிற்குப் படையெடுத் தார்கள். அங்கு முகுந்தனும் இல்லை. வினிதாவும் இல்லை. பல இடங்களில் தேடியும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்போது முகுந்தனின் நண்பர்களை விசாரித்தால் விவரம் தெரியும் என்று ரமேஷ் சொல்லவே முதலில் ரமேஷ் சொன்ன ஒரு நண்பனின் வீட்டைத் தேடிப் போனபோது அங்கே இருவ ரும் மண மாலை கழுத்தில் ஏறிய கோலத்தில் இருப்பதைப் பார்த்தார்கள். எல்லோருக்கும் பயங்கரக் கோபம் வந்தது. ரங்கநாத் தான் அவர்களை சாந்தப்படுத்தி அந்த இருவரையும் தங்கள்ஊர்ப் பஞ்சா யத்தின் முன் நிறுத்தினார்.

பஞ்சாயத்துத் தலைவர் அவர்களை விசாரித்தார்.

உன் மீது குற்றஞ் சாட்டப்பட்டி

ருப்பதை நீ மறுக்கிறாயா முகுந்தன்?

ஐயா, நானும் வினிதாவும் காதலில் கட்டுண்டதால் அவர்கள் குடும்பத்தார் ஏற்கமாட்டார்கள் என்று தான் நண்பர்கள் உதவியோடு கோயிலில் திருமணம் முடித்துக் கொண்டோம்.

வினிதா நீ என்ன சொல்கிறாய்?

ஐயா அவர் சொல்வது சரிதான். நானும் விருப்பட்டுத் தான் திருமணம் செய்து கொண்டேன். எங்கள் தவறை மன்னித்து எங்களை வாழ விட்டால் நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருப்போம் என்றாள் வினிதா.

முகுந்தன், வினிதாவின் பெற்றோர் ஏன் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்றாய் நீ?

சாதி வேறுபாடு தான் காரணம்.. வேறு ஒன்றுமில்லை ஐயா. நான் ஒரு சமூகம் வினிதா ஒரு உயர்ந்த சமூகம். ஆனால் நாங்கள் உண்மைக் காதலர்கள் சார்.

இரண்டு வேறு வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நம் கிராம வழக்கப்படி திருமணம் செய்து கொள்ளக் கூடாது. எனவே நீங்கள் கோயிலில் செய்து கொண்ட திருமணம் பஞ்சாயத்தார் தீர்ப்புப்படி செல்லாது என தீர்ப்பளிக்கிறேன். அது மட்டுமல்ல, நீங்கள் இருவரும் இனி எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. அலைபேசி வழியாகவோ வேறு எந்த விதத்திலோ தொடர்பு வைத்தீர்கள் என்றால் பஞ்சாயத்தாரால் தண்டிக்கப்படுவீர்கள்.

தீர்ப்பு சொல்லி முடித்ததும் இருவரையும் அவரவர் வீட்டிற்குப் போக அவரவர் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். இருவரும் வாடிய முகத்துடன் தங்கள் பெற்றோருடன் சென்றனர்.

அந்த ஊர் இந்த நிகழ்வை மறந்து இயல்பு நிலைக்குத் திரும்பிய வேளையில் 20 நாட்கள் கழிந்திருந்தது. இருபத்தோராவது நாள், மீண்டும் வினிதாவைக் காணவில்லை எனப் பெற்றோர் தவித்தனர். மீண்டும் முகுந்தனோடு ஓடிப்போய் விட்டாளோ என்று சந்தேகப் பட்டனர். ஒரு குழுவாக எல்லோரும் முகுந்தனின் வீட்டிற்குப் புறப்பட்டனர்.

அங்கே முகுந்தன் இருந்தான். வினிதா தான் காணப்படவில்லை.

வினிதா எங்கே என்று முகுந்தனை உலுக்கினார்கள். அவன் எனக்கு எதுவும் தெரியாது. பஞ்சாயத்தார் எங்களைப் பிரித்த பிறகு நான் வினிதாவை எந்த விதத்திலும் தொடர்பு கொள்ளவேயில்லை. நம்புங்கள் என்னை என வேண்டினான்.

நாங்கள் காவல் நிலையத்தில் கம்பிளைண்டு கொடுக்கிறோம் என ரங்கநாத் காவல் நிலையம் சென்றார். அவர் முகுந்தனுக்கு வினிதாவைத் திருமணம் செய்துவைத்த அவனுடைய மூன்று நண்பர்கள் மீதும், முகுந்தன் மீதும் அவன் குடும்பத்தார் மீதும் குற்றஞ்சாட்டி மனு கொடுத்தார்.

காவலர்கள் முகுந்தனையும் அவன் திருமணத்தை முடித்து வைத்த மூன்று நண்பர்களையும் தீவிரமாக விசாரித்தார்கள்.

நீ அவளை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய், உண்மையைச் சொல்லிவிடு. முகுந்தா. உண்மையைச் சொன்னால் உனக்குத் தண்டனைக் குறைவுக்கு ஏற்பாடு செய்வோம் என்றார் காவல் ஆய்வாளர்

உத்தமன்.

சார் நான் வினிதாவை கூட்டிக் கொண்டு முன்பு போனதும் திருமணம் செய்ததும் உண்மை தான். ஆனால் நான் இந்த முறை அந்தத் தப்பைச் செய்யவில்லை, நம்புங்கள் என்னை விட்டுவிடுங்கள் என்று சொன்னான்.

அவனது நண்பர்களும் அதே பதிலைத் தான் சொன்னார்கள். ஆனாலும் காவலர் கள் அவனை கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி நிறைய கேள்விகள் கேட்டார் கள்.

நான் சொல்வது உண்மை சார். பொய் யில்லை என அவனும் மீண்டும் மீண்டும் சொன்னான்.

நாங்கள் மீண்டும் வருவோம். அதற்குள் ளாகவாவது உண்மையைச் சொல். உன்னைக் காப்பாற்றுகிறேன் என்று காவல் ஆய்வாளர் சொன்னார்.

சரி வாருங்கள் என தன் சகாக்களைக் கூட்டிக் கொண்டு அங்கிருந்து அவர் சென்று விட்டார்.

அவரோடு இருந்த ஒரு மூத்த காவலர், ஐயா, நாம் வேறு கோணங்களிலும் இந்தக் குற்றத்தை ஆய்வு செய்யலாம் சார் என்றார் சரி பார்க்கலாம் என்ற காவல் ஆய்வாளர் காவல் நிலையம் நோக்கிப் போனார். அங்கு அவசரமாக வந்த மற்றொரு வழக்கில் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று

இந்த விசாரணை முடிந்த நான்காவது நாள் இந்த கிராமத்தை ஒட்டியிருந்த அடுத்த கிராமத்தின் வெளியே இருந்த ஒரு கரும்புத் தோட்டத்தில் ஒரு பெண்ணின் பிணம் இருப்பதாகக் கேள்விப்பட்டு காவல் ஆய்வாளர் அங்கு சென்று பார்த்தார். அது வினிதா தான் என்று உறுதியாயிற்று. அந்தக் கரும்புத் தோட்டத்தை ஒட்டியிருந்த பகுதிகளின் வீட்டு வாசிகளிடமும் மற்றவர்களிடமும் விசாரித்ததில் உருப்படியான ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

மீண்டும் அவர் காவல் நிலையம் திரும்பினார். மற்றொரு கேசில் கவனம் போயிற்று,

ரங்கநாத் காவல் நிலைய விசாரணை வேகம் எடுக்காததை அறிந்து அவர் தனக்குத் தெரிந்த ஒரு காவல் உதவி ஆணையரிடம் இது பற்றிக் கேட்டபோது, அவர் நீங்கள் ஒரு துப்பறிவாளர் வைத்துக் கொள்ளுங்கள். அவர் காவல்துறைக்கும் உதவி புரியலாம் என்று ஆலோசனை சொன்னார்.

தன் நண்பர் மூலம் புகழ் பெற்ற துப்பறிவாளர் சிங்கமுத்தை இதற்கு நியமித்தார்.

சிங்கமுத்து தன் விசாரணையை உடன டியாகத் தொடங்கினார்.

முகுந்தனையும் அவனுடைய சகாக்கள் மூவரையும் சாதாரணமாக விசாரித்தார். அவர்கள் உடல் மொழியிலிருந்தும் தன் னுடைய அனுபவ அறிவாலும் அவர்கள் குற்றவாளிகளாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தவர் தன் நண்பரான தொலைபேசி அலுவலக அதிகாரி ஒரு வரைத் தொடர்பு கொண்டார்.

அவரிடம் காவல் துறையினர் ரங்க நாத்திடம் வாங்கி வைத்திருந்த வினிதா வின் அலைபேசியைக் கொடுத்தார். அலைபேசியைக் கொடுத்த போது அந்த அலுவலர் அதைப் பரிசீலித்ததில் அதில் ஒரு

அலைபேசி எண்ணிலிருந்து அழைப்புகள் தொடர்ந்து வந்தது தெரிந்தது. அந்த எண்ணிற்கு அழைத்த போது அது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. மீண்டும் ஒரு முறை அழைத்தபோது அதில் பேசிய நபர் சார் என் அலைபேசி காணாமல் போய் 24 நாட்கள் கழித்து நேற்று தான் சார் கிடைத்தது. அதில் சார்ஜ் இல்லாமலிருந்தது இப்போது தான் அதற்கு உயிரூட்டினேன் நீங்கள் கூப்பிடுகிறீர்கள் என்றார் அவர்.

வினிதா காணாமல் போன அன்றி லிருந்து இயங்கிக் கொண்டிருந்த அவளு டைய அலைபேசி கொலையுண்ட நாளன்று வரை உயிருடன் இருந்தது. இந்தத் தகவல்களை அந்த அலுவலர் துப்பறிவாளரிடம் சொல்லிய போது அவர் ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு முந்தைய நாள் வரை அந்த அலைபேசி எண் இருந்ததை வினிதாவின் அலைபேசியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.. அப்போது பேசிய அலைபேசி எங்கிருந்து இயக்கப்பட்டது என்றறிய முடியுமா என்றார் அவர்.

ஓ. முடியுமே, என்றவர் 5 நிமிடத்தில் பதில் கூறினார். அது வினிதாவின் வீடு இருக்கும் பகுதியிலே இருந்து தான் வந்துள்ளது என்றார்.

நன்றி சார் உங்கள் உதவி பேருதவி என்று அவரை வழியனுப்பி வைத்த சிங்கமுத்து காவல் ஆய்வாளரிடம் இரண்டு காவலர்களைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டுக் கொண்டு வினிதாவின் அப்பா ரங்கநாத் வீட்டிற்குச் சென்றார்.

தங்களிடமிருந்து சில தகவல்கள் எனக்கு வேண்டும்.

சொல்லுங்கள் சார் எனக்கு வினிதாவை இந்த கதிக்கு ஆளாக்கிய அந்தக் கயவன் யார் என்று தெரிய வேண்டும் என்றார் ரங்கநாத்.

உங்களுக்கு முதன் முதலில் வினிதா காணாமல் போனதை யார் சொன்னார்கள்?

எனது பக்கத்து வீட்டு இளைஞன் ரமேஷ் தான் சார் என்றார். ஏன் கேட்கி றீர்கள் என்றார்.

அவனை நீங்கள் சந்தேகப்பட வில்லையா

அவனும் எங்கள் ஊர்க்காரன் தான். பக்கத்து வீட்டார் எங்கள் குடும்ப நண்பர் களாகத் தான் பழக்கம்.

ரமேஷ் வீட்டிற்குச் சென்றார் சிங்கமுத்து

ரமேஷ் நீ தான் வினிதாவைக் கொன்றி ருக்கிறாய் என்பதை நான் கண்டுபிடித்து விட்டேன்.

காவல்துறையே என்னிடம் ஏதும் கேட்கவில்லை, நீங்கள் யார் சார்.

நான் யார் என்பதை சொல்ல வேண் டுமா? எனத் தன் துப்பாக்கியை எடுத்து அவனுக்குக் குறி வைத்தார்.

சார் என்ன சார் என்று அவன் பதறினான்.

இது டம்மித் துப்பாக்கியில்லை ரமேஷ். லைசென்சோடிருக்கும் உண் மைத் துப்பாக்கி. சுடட்டுமா? காவல் ஆய்வாளரையும் வரச் சொல்லியிருக்கி றேன். நீ நடந்ததை முழுதும் சொல்லி விட்டாய் என்றால் உனக்குத் தண்டனை குறையலாம். உன் வாயாலேயே சொல்லு.

என மிரட்டினார்.

துப்பறிவாளர் சிங்கமுத்துவின் திறமை பற்றி அவனும் கேள்விப்பட்டிருந்ததால் தான் இனித் தப்ப முடியாது என்றறிந்தவன் எல்லா உண்மைகளையும் சொல்லத் தொடங்கினான்.

நாங்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இங்கே பிழைக்கத்தான் வந்தோம். எனக்கு வினிதா மேல் ஒரு கண்.ஆனால் அவள் முகுந்தனைக் காதலித்தாள். அவர்கள் வேறு வேறு சாதி என்பதால் இரு வீட்டாருக்கும் பிடிக்காததால் அந்தக் காதல் முறிந்து போனது

இந்த சமயத்தில் நான் மிக மெது வாக அவளிடம் நெருங்கிப் பழகத் தொடங்கினேன்.

அவளும் சோகத்தில் இருந்ததால் அவளி டம் அன்பாக, ஆதரவாக இருப்பதாக நடித்து காதல் புரியத் தொடங்கினேன்.

நாங்கள் ரங்கநாத்தின் தகுதிக்கு கீழா னவர்கள் என்ற மிதப்பு அவர்களுக்கு இருந்ததால் நான் வினிதாவைத் திருமணம் செய்து கொள்ள அவர்கள் சம்மதிக்கமாட்டார்கள் என நினைத்தேன். உண்மையும் அதுதான்.

அப்போது நான் ஒரு திட்டம் தீட்டினேன். என்று சற்று நிறுத்தினான்.

சொல்லு சொல்லு என்று அவனை ஊக்குவித்தார் சிங்கமுத்து.

இந்த விசாரணைகளை எல்லாம் ஒரு காவலர் ரெக்கார்டு செய்து கொண்டி ருந்தார்.

நான் சுனிதாவிடம் சென்று நாம் இருவரும் எங்காவது ஓடி விடலாம். அங்கே போய் நிம்மதியாய் வாழ்வோம். என்றேன்.

அவள் என்மீது கொண்ட காதலால் உடனே சரி என்றாள்.

இப்போது நாம் ஓடினால் இரண்டு குடும்பத்திற்கும் தெரிந்து விடும். அதனால் நான் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறேன். அதற்கு நீயும் ஒத்துழைக்க வேண்டியிருக் கும் ஒத்துழைப்பாய் தானே

சரி நான் ஒத்துழைக்கிறேன் என்றாள் அவள்

நீ உன் முன்னாள் காதலனிடம் சென்று நாம் திருமணம் செய்து கொண்டு எங்காவது ஓடிவிடலாம் என்று சொல்

அவன் நம்புவானா?

அவன் உன்மீது பைத்தியமாயிருக்கிறான்.

சரி, அப்புறம்

அவனுடைய நண்பர்களை அழைத்துக் கொண்டு ஒரு கோயிலில் மாலை மாற்றிக் கொள்.

ஐயோ என்ன இப்படிச் சொல்கிறாய்

நீ வேறு ஏதும் செய்யப் போவதில்லை. திருமணம் முடித்ததும் நீங்கள் இருவரும் முகுந்தனின் வீட்டிற்குப் போவீர்கள்.

பிறகு

நான் சரியான நேரத்தில் உன் அப்பா வுடன் அங்கு வருவேன். உங்களைக் கையும் களவுமாக பிடித்து விடுவோம்

கொக்கு தலையில் வெண்ணெய் வைத்த கதையாகவல்லவா சொல்கிறாய்.

உன் அப்பா உங்களை பஞ்சாயத்தார் முன்னிலையில் நிற்க வைப்பார். உங்களைப் பிரித்து விடுவார்கள்.

காவல் துறை என்னையும் முகுந்தனை யும் கேள்விகளால் குடைவார்களே.

நடந்த உண்மைகளைச் சொல். இந்தக் களேபரங்கள் சற்று ஓய்ந்ததும் நாம் எங்கு செல்ல வேண்டுமோ அங்கே செல்வோம்.

சரி என்றவள் எல்லாம் நான் சொன்னது போலவே செய்தாள். பஞ்சாயத்தாரும் அவர்களைப் பிரித்து வைத்தார்கள்.

பஞ்சாயத்துத் தீர்ப்புக்குப் பிறகு முகுந்தன் வினிதாவைத் தொடர்பே கொள்ளவில்லை. எனக்குப் பதில் காவல் துறையிடம் அவன் மாட்டிக் கொண்டான்.

அலைபேசியை ஏன் மாற்றினாய்?

நான் அவளை அழைத்துக் கொண்டு அந்தக் கரும்புத் தோட்டத்திற்குச் சென்றேன். அவள் ஏன் இங்கு என்னை அழைத்து வந்தாய் என்றாள்.

நாம் இருவரும் ஒருசேரக் காணாமல் போனால் விஷயம் தெரிந்துவிடுமே அதனால் சில நாட்கள் இங்கிருந்து பிறகு காவல்துறை விசாரணைகள் அடங்கியதும் நாம் நம் வழியைப் பார்க்கலாம் என்று தான் என்றேன்.

அரை மனதாய் அவளும் சம்மதித்தாள்.

நான் அவளுக்கு வேண்டிய உணவுகளை நேராநேரத்திற்கு அந்தக் கரும்புத் தோட்டத்திற்கு வாங்கி வந்து கொடுப்பேன். அதே நேரம் அவள் வீட்டில் காவல்துறை என்ன செய்கிறது என்று நோட்டமும் விட்டுக் கொண்டு அங்கேயே சுற்றினேன்.

யாருக்கும் சந்தேகம் வரவில்லையா?

நான் அவர்களுக்குப் பழக்கமானவன் தானே ஒரு காவலர் மட்டும் நான் கேள்விகள் கேட்பதைப் பார்த்து சற்று சந்தேகம் கொண்டார். அதையும் நான் என் பேச்சினில் போக்கினேன்.

அந்தக் கரும்புக் காட்டில் இரவு பகலாக அவள் தனித்திருந்தாள். மூன்றாவது நாளிலிருந்து அவள் என்னை இங்கிருந்து கூட்டிப் போகிறாயா அல்லது நடந்தது அனைத்தையும் நான் எல்லோரிடமும் சொல்லி விடவா? என மிரட்டினாள்.

நான் அவளைக் கூட்டிக் கொண்டு வெளியூர் செல்லலாமென்று தான் இந்தத் திட்டம் தீட்டினேன்.

அவள் என்னை மிரட்டியதால் இனி இவள் சரிப்படமாட்டாள் என்று அவளைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்தேன். நான் முன்பே அலைபேசியை மாற்றியது எனக்குக் கை கொடுத்தது. நான்காவது நாள் காலையில் டிபன் வாங்கிக் கொடுத்தவன். அவள் அதைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவளுக்குப் பின்னாலிருந்து அவளுடைய துப்பட்டாவாலேயே கழுத்தை இறுக்கிக் கொன்றேன். நீங்கள் புதிய டெக்னாலஜி மூலம் என் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பீர்கள் என நான் கனவிலும் நினைக்கவில்லை.

நான் பாவம் செய்தவன் தான் எனக் கதறி அழத் தொடங்கினான்.

சிங்கமுத்து கேட்டுக் கொண்டபடி காவல் ஆய்வாளரும் சரியான நேரத்திற்கு அங்கு வந்தார். அவன் கைகளில் விலங்கு பூட்டினார்.

காவல் நிலையத்தில் அவர் ஊடகங் களுக்கு தான் குற்றவாளியைப் பிடித்த வீர தீரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். துப்பறிவாளர் வெளியில் நின்று கொண்டு இந்த நிகழ்ச்சிகளை பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ரங்கநாத் பேசிய தொகையைக் முன்பே கொடுத்துவிட்டிருந்தார்

தன் உழைப்புக்கு ஊதியமே போதும், புகழ் வேண்டாம் என்ற அவருடைய போக்கு பாராட்டுக்குரியதுதானே. ஒன்றுமே செய்யாமல் தான் தான் என்று சொல்லிக் கொள்பவர்களும் இருக்கிறார்களே.

---

# இருளெனப் பெயரும் குமிழியில் இடதும் வலதும் புத்தன்

வெகுதொலைவில் ஒரு நிழல்
அருகாமையில் யாரோ ஒருவனின் தனிமை
மிதவேகத்தில் முயற்சியின் நடைபயணம்
எல்லாம் ஆரம்பித்த புள்ளியில்
அமர்ந்திருக்கிறது
மரத்தாலான கால்களை
ஏந்திவனின் நம்பிக்கை

ஒரு குழந்தையின் கையில்
மண்ணிலிருந்து பிடிங்கி கொடுத்த தண்டு
வளர்ந்த இலையாகிப் போனது
பிடுங்கியதும் மரித்துப் போனது
மரமாக காத்திருந்த செடியின்
வேர் நுனிக் கனவு

அடங்க மறுத்த யானையின்
நெற்றியில் ஈட்டியேந்தி
இருக்க குத்தி காயத்தை பதிவு செய்து
ஆடியமர்ந்த நெற்றியில்
வண்ணத்துடன் ஆறுதலை
உரசி முத்தமிட்டு பறக்கிறது
வானவில்லில் இறக்கைக் கொண்ட
வண்ணத்துப்பூச்சி

இலை மறைத்த வனமும்
பனி மறைத்த பருவதமென
நடுங்கியமர்ந்த ஒற்றையடிப் பாதையில்
மூன்றாம் கால் வயோதிகனின்
பாதச சுவடுகள்

கனிவிழுந்த தரையில்
எறும்பின் தலைக்கோ எடை
பசித்தவன் விழிக்கு இரை
உண்டு துப்பிவிடாது இடம் நகர
ஆலோசிக்கின்றனநாவில் பிறழும்
கனியிடை விதைகளிரண்டு...

எல்லாம்  இணைத்து விதைத்துவிட
மனமில்லாத காடுதான்
அசைந்தாடுகிறது இவ்வுலகில்..

**சே கார்கவி கார்த்திக்**
நாகப்பட்டினம்





# தன்முனைக் கவிதை தோற்றமும் - வளர்ச்சியும்

3


அன்புச்செல்வி சுப்புராஜு

பட்டாபிராம், சென்னை


கவிதையாய்
உருவாக்க இயலவில்லை
உணர்வுகள் இக்கணம்
நிற்க நிழலின்றி...
- டாக்டர் கோபி

கதை, கவிதை எதுவாயினும் பொதுவில் படைக்கிறோம்... அனைத்தும் கற்பனையே, புனைவுகளே என்று படைப்பாளிகள் கூறினாலும் கூட, அவர்களின் உணர்வுகள், சுய முகங்கள் எங்காவது ஓரிடத்தில் படைப்புகளில் வெளிப்பட்டு விடுவதைத் தவிர்க்க இயலாது. அதேசமயம் நமக்குள் உண்டாகும் அனைத்து உணர்வுகளையும் வெளிப்படைத்தன்மையுடன் கவிதையாக்க இயலுமா என்றால் அதுவும் இயலாது. இன்னும் ஒரு சூழல் உண்டு. உள்ளூறும் உணர்வுகளை கவிதையாக கொட்ட எத்தனிப்போம். ஆனால் அதற்கேற்ற வார்த்தைகள் வசப்படாது... தொண்டையில் மாட்டிய மீன் முள்ளாய் சிறு அவஸ்தையை உருவாக்கும். எப்போதடா இந்த உணர்வினை எழுத்தின் வழியாக வடிப்போம் என்று இருக்கும். டாக்டர் கோபி அவர்களிடம் சொற்கள் எவ்விதம் வசப்படுகின்றன பாருங்கள். கவிதையாய் உருவாக்க இயலாத உணர்வுகள் நிற்க நிழலின்றி இருக்கிறதாம். வாசிக்கும் பொழுதே நமக்குள் நிழலை உருவாக்க வேண்டும் என்ற தவிப்பு உருவாவதை தடுக்க இயலவில்லை அல்லவா? இத்தகைய தாக்கத்தை உருவாக்குவதே நானிலு ஆகும்.

நானிலுவிலிருந்து சிறு மாற்றங்களுடன் தமிழில் அறிமுகமாகிய தன்முனைக் கவிதைகளை கவிஞர்கள் பலரும் தொடர்ந்து எழுதி வந்த ஆர்வத்தினைக் கண்டு மலைத்தோர் பலர். அதன் பலனாக 'தன்முனைக் கவிதைகள்' குழுமத்தில் எழுதி வந்த கவிஞர்களின் வேண்டுகோளின்படி கவிஞர் அனுராஜ், கவிஞர் சாரதா க. சந்தோஷ் இருவரின் உறுதுணையுடன் முனைவர் கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள் தொகுப்பாசிரியராக முப்பத்தொரு கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்ற 'நான்... நீ... இந்த உலகம்': முதல் தொகுப்பு நூலாக, கவிஞர் வதிலைபிரபா அவர்களின் ஓவியா பதிப்பகம் வழியாக ஜுன் மாதம் 2018 ஆம் ஆண்டு வெளிவந்தது. நூலினை 'இனிய உதயம்' இலக்கிய இதழின் இணையாசிரியர் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் ஐயா அவர்கள் வெளியிட கவிஞர் குமரன் அம்பிகா அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள 31 கவிஞர்களின் கவிதையையும் இக்கட்டுரையில் பதிவிட இயலாத நிலையில் ஒரு சிலரின் கவிதைகளை உதாரணக் கவிதையாக குறிப்பிடுகிறேன். மற்றவர்கள் பொறுத்தருள்க. இந்நூல் வெளிவந்த

காலகட்டத்தில் தன்முனைக் கவிதைகள் பெரும்பாலும் 'நானிலு' வடிவமைப்பை ஒட்டி எழுதப்பட்டன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மௌனம் சத்தமிடுமா... இடுமெனில் அதை உணரமுடியுமா... பேரிரைச்சலாக இருக்குமா அல்லது மெல்லோசையாக இருக்குமா... நிதானித்து சொட்டு சொட்டாக விழும் மௌனத்தின் இசை எவ்விதம் கேட்கும்? சிறிது நேரம் மௌனித்துப் பாருங்கள். உள்ளார்ந்து நோக்க மௌனத்தின் ஓசையை உணர இயலும். தனது மௌனப் பெருவெளியை உற்று நோக்கி, துளித்துளியாய் சிந்தும் மௌனத்தினை கவிதையாக்கியுள்ளார் கவிஞர் காவனூர் ந. சீனிவாசன் அவர்கள்

*துளித் துளியாய்*
*சப்தம்*
*வழியெங்கும் சிந்தியபடி*
*என் மௌனம்*
*- கவிஞர் காவனூர் ந. சீனிவாசன்*

*அடுத்தொன்று*

*சுடரின் முடிவில்*
*மட்டுமல்ல*
*மரணத்தின் முடிவிலும்*
*நறுமணம்*
*- முனைவர் மா.இரமேஷ்*

தனக்கான தனது சுதந்திரத்தையே வேறொருவர் தர வேண்டும் என்பதே அவலம். அவ்வாறு கிட்டிய ... கிட்டியதாக எண்ணிய சுதந்திரத்தில் தன்னையே தேடுதல் என்பது இன்னும் அவலம். கவிஞர் சாரதா க சந்தோஷ் 21 எழுத்துகளில் பெண்களின் சுதந்திரம் எந்த அளவில் உள்ளது என்பதை எவ்வளவு அருமையாக வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார் பாருங்கள்.

*நீ அளித்த*
*சுதந்திரத்தில்*
*தேடுகிறேன்*
*என்னை*
*- சாரதா க. சந்தோஷ்*

சிறுசிறு விடயங்களுக்கு எல்லாம் கோபம் கொள்வதும், அதைப் பெரிதாக்கி சண்டை இடுவதும், இன்னும் பெரிதாக்கி பேசாமல் கடந்து விடுவதும் பெரியவர்களுக்கு கைவந்த கலை. கள்ளமில்லா குழந்தைகள் மனம் தெய்வத்திற்கு ஒப்பானது. சண்டை இட்ட சுவடே தெரியாமல், தொடங்கிய சண்டை முடியும் முன்பே சமாதானமாவது குழந்தைகளால் மட்டுமே இயலும். குழந்தைகளின் இயல்பை, மனதை இனிதே உரைக்கும் கவிஞர் மதுரா அவர்களின் கவிதை

*சண்டை முடிந்ததும்*
*சமாதானமாகி*
*விடுகின்றன*
*குழந்தைகள்*
*- கவிஞர் மதுரா*

கூடும் பொழுது இருக்கும் இன்பம், பிரியும் பொழுது துன்பமாக மாறுகிறது. அதிலும் நமக்கு பிடித்தமான ஒருவரின் சில நொடிப்பிரிதலும் யுகப்பிரிதலாக சோகத்தைத் தருமல்லவா? எப்போதும் தொற்றிக் கொள்ளும் அச்சோகத்தின் வெளிப்பாடாக கவிஞர் துரை அனுராசு அவர்களின் கவிதை

*எப்போதும்*
*கூடிப் பிரியும் போதெல்லாம்*
*தொற்றிக் கொள்கிறது*
*சோகம்*
*- கவிஞர் அனுராஜ்*

பெண்ணாகப் பிறப்பதே பெரும்

சிறப்பு. அதிலும் தாய்மை என்பது வரம். அத்தகைய தாய்மை வரம் பெற்ற தாய்க்கோ அல்லது பெண்ணுக்கோ அத்தியாவசியமான அடிப்படை உரிமை கூட கிடைப்பதில் பெரும் சிக்கல் உள்ளது. கொண்டவனிடம் கூட தனது தேவைகளை வெளிப்படையாக சொல்லவோ, கேட்கவோ முடியாத சூழல் இன்னும் கூட ஓரிரு இடங்களில் இருந்து வருகிறது. அத்தகைய நிலை யில் ஒரு தாய் என்ன செய்வாள்? குழந்தையைத் தாலாட்டும் பொழுது அதில் தனது எதிர்பார்ப்புகளை, ஏக்கங்களை பாடலாகப் பாடி உணர்த்துவாள். புரிய வேண்டியவர்களுக்கு புரிந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் என்பதை அன்புச்செல்வி சுப்புராஜூ ஆகிய எனது வரிகளில்

தாலாட்டில்
தன்னின் ஏக்கங்களை
உணர்த்துகிறாள்
தாய்

- கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ

நமக்கு நெருக்கமான, வேண்டிய அல்லது பிடித்தமான உறவுகளுக்காக, நண்பர்களுக்காக அவர்களின் மகிழ்ச்சிக் காக நாம் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் தாங்கிக் கொள்ளுவோம். அவர்களின் சிறு புன்னகைக்காக எவ்வளவு சுமைகளையும் தாங்கி உழைப்போம். நமது சுகதுக்கம் எதுவும் நமக்குத் தோணாது அவர்களின் மகிழ்ச்சி ஒன்றே நமக்கான மகிழ்ச்சியாக செயல்படுவோம். அதனால் ஏற்படும் இடர்களை மௌனமாகக் களைவோம் அல்லவா? அதனையே கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயா அவர்களின் வரிகளில் காண்போம்.

உனது புன்னகையில்
ஒளித்திருக்கிறது
எனக்கான சுமைதாங்கியின்
மௌனம்

- கவிஞர் கா.ந. கல்யாணசுந்தரம்

இவ்வாறாக தன்முனைக் கவிதை வளர்ச்சியில் முதல் படியாக இந்நூல் வெளிவந்ததைத் தொடர்ந்து ‘இனிய உதயம்‘ மகாகவி, காணிநிலம், கவிஓவியா, மின்னல் தமிழ்ப்பணி, அருவி, ஏழைதாசன், இனிய நந்தவனம், பொதிகை மின்னல், போன்ற இலக்கியத் திங்களிதழ்களுடன் இன்னும் சில இலக்கிய இதழ்கள், தமிழ்நெஞ்சம், கொலுசு, கவிதைப் பெட்டகம், காற்றுவெளி, தாய்த் தமிழ், வல்லினச் சிறகுகள், அகரமுதல போன்ற மின்னிதழ்களுடன் இன்னும் சில இலக்கிய இதழ்களும் தன்முனைக் கவிதைகளை தொடர்ந்து வெளியிட்டு ஊக்கம் தந்து வருகின்றன.

முதநூல் வழியாகவும் பல குழுமங்கள் தன்முனைக் கவிதைகளுக்கென தொடர்ந்து போட்டிகள் நடத்தத் தொடங்கின. தன்முனைக் கவிதைகளில் நூல் வெளியிட்ட முதல் கவிஞர் யாரென அடுத்த தமிழ்நெஞ்சம் இதழில் காண்போம். அதுவரை

தனிமையிலும்
தனிமையில்லை
தொடரும்
நினைவுகள்

- கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ



# பனித்துளிகள்



## எஸ்.பாயிஸா அலி

2.10 க்கு விரல் ஒப்பமிட்டுப் பாட சாலை கேற்றடிக்கு வந்தும் பத்து நிமிடம் கடந்து விட்டிருந்தது. இடப்பக்கமாய் வளைந்து நீண்டு கிடக்கும் கிண்ணியாப் பாலத்தையும் வலப்பக்கமாய் தெம்பிலியும் வாழைக்குலைகளும் பளபளக்கும் நூர்தீன் நானாவின் பழக்கடையையும் இன்னும் எத்தனை தடவைகள்தான் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருப்பது.

எல்லா ரக வாகனங்களும் சர்ர்சர்ரென விரையும் இந்த மட்டக்களப்பு வீதியில் எனதருமைக் கணவனாரின் பைக்கை மட்டும் இன்னமும் காணோமே....

பாவம் அவரும் என்னதான் செய்வார். அந்தப் பாதிமெண்டல் 1.30க்கு ஸ்டாப்மீட்டிங் போட்டிருக்கும். நல்லவேளையாக சின்னவள் பீரியட் வயிற்று வலியென்று ஸ்கூல் போகலே. இல்லாட்டி இப்ப அவளும் கூடத்தான் ரோட்டில் காய்ந்துகொண்டிருப்பாள்.

இவருக்கு மறுபடியும் கோல் பண்ணுவோமா என நினைத்துப் போனைக் கையில் எடுத்தாலும் தேவையில்லாம திரும்பத்திரும்ப சங்கடப்படுத்த வேணாமே என ஹேன்ட்பேகினுள் திணிக்கிறேன்.

மீதமாய் என்னோடு ஒட்டிக்கொண்டிருந்த நாலைந்து சீருடைச் சிட்டுக்களும் ஒவ்வொன்றாய்... அவரவர் ஓட்டோக்களிலும் பெற்றவர்களுடனுமாய் கிளம்பிக் கொண்டிருக்க...

“என்ன ரீச்சர்... சேர் இன்னும் ஏத்துறதுக்கு வரலையா...” என்றபடி கேற்றை மூடி நடக்கத் தொடங்கிவிட்டாள் எங்க அலுவலகி சுஜானாவும்.

இப்போது எஞ்சி இருந்தது நானும் நதாவும் மட்டுமே. “என்ன புள்ளே.. ஓட்டோ வரலையா” என்கிறேன்.

கையில் இருந்த சிறிய குச்சியினால் கேற்றை மெதுமெதுவாய் தட்டியபடியே ஆழ்ந்த யோசனையில் இருந்தவள் சிலிர்த்தபடியாய் “இன்னமும் காணலையே ரீச்சர்” என்றாள்.

'நாம கிளம்ப முதல் இவள வழியனுப்பியாகணுமே' என்ற புதிய ஆதங்கம் இப்போதெனக்கு. இல்லாட்டி பாவம் என்னவர்.'

'இப்படியான தனிமைப்பட்ட சூழலில் எப்படி இந்த வளர்ந்த பிள்ளைகளைத் தனியேவிட்டுட்டுநாமவீட்ட போற'என்று என்னோடு காத்திருக்கத் தொடங்கிடுவார். ரெண்டு பெண்பிள்ளைகளைப் பெற்ற தந்தைக்கேயுரிய பொறுப்புணர்வுதான் அவருக்கும்.

அப்பாடா நல்லவேளையாக நதாவின் ஹோர்ன் சத்தம். நிமிர்ந்து பார்த்தேன் எங்கட மில்லுக்கு அடிக்கடி அரிசிஏத்த வார இவருக்கு பழக்கமான தம்பிதான்.

ஓடிப்போய் ஏறியவள் என்பக்கம் திரும்பி "'உங்கட ஊட்டுவழியாத்தான் போவம் நீங்களும் ஏறுங்க ரீச்சர்" என்றாள் ஒருவகைத் துள்ளலோடு

"இல்லையேம்மா... நீங்க வெள்ளை மணல் பக்கமாத்தானே போவிங்க..."

"நீங்க மொதல்லே வந்து ஏறுங்க ரீச்சர்... நான் இண்டேகி பைசல்நகருக்கு ம்மாக்கிட்டே போவபோறேன்."

என்னவருக்கும் ஓட்டோவில போறதா ஒரு துவா வைத்துப்போட்டு அவளருகில் போய் உட்கார்ந்தவாறே கொஞ்சம் கலவரமாய் "என்னது... ம்மா வீட்டுக்கா.." என்றேன்.

அலைகடலோரமாய் ரம்மியமான சூழலும் குளுகுளுவென்ற இயற்கைக் காற்றுமாய்... வெளிச்சிக்கல்கள் கூட ஏதுமற்ற இப்பாடசாலைக்கு மாற்றலாகி வந்து நான்கு வருடங்கள் முடிந்து விட்டிருந்தன. பெற்றோர், பிள்ளைகள் சக ஆசிரியர்களால் எந்த நெருக்கீடுகளும் இதுவரை வந்ததில்லை. ஆறாம் வகுப்பு தொடக்கம் பதினோராம் வகுப்பு வரைக்கும் நம்மட பாடத்திற்கு நாம மட்டுமேதான். நம்மட வலயம் நம்மள மாதிரி இன்னொருவரையும் இங்கே அனுப்பிவைக்காதா என்ற ஒரேயொரு எதிர்பார்ப்பைத்தவிர.

இடைவெளியற்ற தொடர்ச்சியான பாடவேளைகள்.... இரவுபகலாய் கண் களைப் பூக்கச்செய்யும் ஒப்படை, செயற்பாட்டு பத்திரங்கள்... கற்பித்தல் கடந்த இதர வேலைக்களுமென இடை யிடையே களைப்பும் அயர்ச்சியுமாய் உடலும் உள்ளமும் சோர்ந்தே போனாலும் அதையும் மீறிய தெம்பையும் புதிய உற்சாகத்தையும் எனக்குள் உற்பவிப்பவை இந்த நதாபோன்ற சுறுசுறுப்பான செல்வங்கள்தான்.

இவளை ஆறாம் வகுப்பில் இருந்தே அவதானித்து வருகிறேன். கெட்டிக்காரி. நேர்த்தியாக வருவாள். லேப்புக்குள்ளே போறன்டா அவளுக்கு உயிர். பரிசோத னைக்கென்று நாம கொண்டுவரச் சொல்ற பொருட்களுக்கு மேலையும் குசினிக்குள்ள உள்ள உப்பு, புளி, மஞ்சள் எல்லாம் அள்ளிக் கொண்டு வருவாள்.

ஏலவலுக்கும் நல்ல ஸ்கூலும் நல்ல ரீச்சர்சும் செட்டாகிட்டா சந்தேகமே யில்லை இவளொரு டொக்டர்தான்.என்று மனசுக்குள் அடிக்கடி கனாக் காண்பேன். நம் கனவு நனவாக வேணுமே என்ற பிரார்த்தனைகளும் கூடவே வரும்.

"என்ன புள்ளே ம்மாவீடு... வாப்பாவீடு என்று கதை விடுகிறாய்..."

மெதுவாய் கேட்டேன்.

அவள் சொல்லத் தொடங்கியபோது 'அட இவ்வளவு நாளும் இது பற்றி விசாரிக்காம இருந்திட்டோமே' என்று எனக்கே என்மீது எரிச்சலும் கோபமும்...

என் வீடு வந்ததும் தேங்க்ஸ் சொல்லி இறங்கிக் கொண்டேன்.அதற்கு முன்னமே 'மறக்காம நாளெக்கி ம்மாவே கூட்டி வாமா' என்றேன்.

"'ம்மாவேயா.."

உற்சாகமாய் தலையாட்டினாள்.

இடைவேளை நேரம் லேப்பிற்குள் பிள்ளைகள் கலைத்துப் போட்ட பொருட்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தபோது...

"அஸ்ஸலாமு அலைக்கும் ரீச்சர்"

நதாவோடு அவளருகில் முப்பத்தைந்து வயதில் இன்னொரு நதா.

"வலைக்குமுஸ்ஸலாம்... வாங்கம்மா எப்படி சுகமா..."

நதாவின் படிப்பில் தொடங்கிய எங்கள் பேச்சு அவட உம்மா பற்றி வந்தபோது இடைவேளை முடிந்திருந்தது. timetable பார்த்தேன் இந்த ஐந்தாம்பாடம் எனக்கு ப்ரீதான். நதாவை அவட வகுப்பிற்கு அனுப்பிவிட்டு சப்ராசிடம் ஒரு பெப்சிக்கு ஓடர் செய்தேன்.

"என்னம்மா நதா இப்ப கொஞ்ச நாளா செரியான டல்லா இருக்கா. ஹோம்வொர்க் ஒண்டும் பண்ணி வாறதும் இல்லே அதோட மற்ற பிள்ளகளோடையும் கடுகடுன்னு இருக்கா எடுத்ததெற்கெல்லாம் டென்ஷன்... தனிமையிலே ஆழ்ந்த யோசனை... அது

## மல்லிகையே... மல்லிகையே...

மல்லிகையின் மணத்திலே
மலர்ந்திடுவாள் இயற்கையன்னை
வண்ணத்துப்பூச்சியின் ரீங்காரம்
இசைத்திடும் மலர்வனத்திலே
தேனை உறிஞ்சிடும்
தேனீக்கள் மகிழ்வுடனே
இயற்கை வாசத்தில்
இதயமும் இனிமையாகுமே
கவிபாடும் மனதிற்கு
கருப்பொருளாய் வந்திடுவாள்
தென்றல் காற்றில்
தவழ்ந்து நேசமாகும்
வான்மேகமும் நிலவும்
நட்சத்திரங்களும் உவகையூட்டிமே
கருங்கூந்தலில் பூச்சரமாகி
ஊஞ்சலாடிடும் அழகாகவே
பாங்காய் மனதை
கவரும் எந்நாளுமே
பரிகாசம் இல்லை
பந்தபாசங்களை இணைத்திடுமே
மலர்கள் பலவுண்டு
மனதும் நிறைவாகுமே
காதலர்கள் மனதில்
தனியிடமுண்டு நேசித்தாலே
மழலையின் சிரிப்பாய்
மலரின் இதழ்கள்
மழையில் நனைந்து
பனியில் மலருமே
தெய்வத்தின் சன்னதியில்
தினமும் வருகை
மொட்டிலிலும் வாசமுண்டு
மலர்ந்தாலும் குறைவதுண்டோ
மகளிர் மனதைக்
கவர்ந்த மலர்களே
மெல்லியலாள் நடைபழக
மேகங்கள் தூதுசெல்லும்..



பெ.வெங்கட லட்சுமி காந்தன்
விருதுநகர்

மட்டுமில்லாம ஸ்கூல் விட்டா ஒருநாள் வெள்ளைமணல், ஒருநாள் பைசல் நகர் என்று மாறிமாறித் திரிஞ்சா அவ எப்படிப் படிக்கிற... என்னதான்மா ஒங்கட பிரச்சினை...”

“ஓம் ரீச்சர் நான் ஸ்கூலுக்கு நாலஞ்சி தரம் வந்தப்பவேல்லாம் ஒங்களே சந்திக்க முடியாமப் போயிற்று.நதாட கிளாஸ் டீச்சருக்கு எல்லாம்தெரியும்”... குரல் கொஞ்சமாய் கரகரக்க...

“நதாட வாப்பா...” மெதுவாய் இழுத்தேன்.

“அவர் சூடான் நாட்டுக்கு வேலைக்கு போனார்.இப்பலீவுலவந்திருக்கார்போல.”

“எனா சூடானுக்கா... மரியான் படத்துல நம்ம தனுஷ் தீவிரவாதிங்களுக் கிட்ட மாட்டி சீரழிஞ்சு வீடுவந்து சேருறத பாத்துப் போட்டுமா அங்க அனுப்பினிங்க...” சிரித்தபடியே கேட்டேன்.

இயல்பாகப் பழகியவள்போல என் தோளில்தட்டியபடியே “ரீச்சர்..” என்று கலகலத்தவளின் முகம் திரும்பவும் மெது மெதுவாய் இறுகிக் கண்களும் கலங்கிட.... நான்பதறிப் போனேன்.

“சொறிமா... நான் தவறா ஏதும்...”

“இல்லே... இல்லே.. அவரு தீவிரவா திங்ககிட்ட அகப்பட்டிருந்தாலாவது உசிரக் குடுத்தாவது மீட்டு வந்திருப்பேனே ரீச்சர். ஒரு கேடுகெட்ட பொம்பிளக் கிட்ட இல்லையா மாட்டிகிட்டார். எண்ட வாழ்க்கையே செதஞ்சு போச்சே....” மறுபடியும் சிறு விசும்பல்.

ஆறுதலுக்கு அவள் தோளைமெதுவாய் தொட்டேன்.

“பிறகு...?.”

“என்னையும் விரும்பித்தான் முடிச் சார். டைவிங் போவார். போதுமான வருமானம் நதாக்கு ஒரு தம்பியும் இருக்கு. ஒரு கொறையுமே இல்லாம நல்லாத்தான் வாழ்ந்தோம்... என்ன செய்றது... விதி... இவருக்கு வந்த பேராசை... வெளிநாட்டு போறேன்டு. ஓடியோடித் திரிஞ்சார் கொழும்பிலே லொட்ஜிலே கண்ட பழக்கமாம் பிறகு பார்த்தா... எனக்குத் தெரியாம அவளோ டையும் கள்ளத்தனமா....” மறுபடியும் கன்னங்களில் ஈரம்.

ஊருக்குள்ளே கொஞ்சங் கொஞ்ச மாய் கசிஞ்சாலும் நான் நம்பவே யில்ல ரீச்சர்... அவரில அவ்வளவு நம்பிக்கை. எல்லாம் முடிஞ்ச பிறகுதான் உண்மை தெரிஞ்சுது. எவ்வளவு அழுது கெஞ்சி மன்றாடியும் பயனில்ல... அவர்ட முழுக் குடும்பமும் ஒத்துத்தான் கூட்டிக் குடுத்திருக்காங்கபோல... ஊர்ல ஒலகத்துல நடக்காத ஒன்டா... அவன் ஆம்பிளைதான எதுவும் செய்வான். ஒனக்கு சோறும் சீலையும் தந்தா சரிதானே எண்டாங்க.”

“என்னது சோறும் சீலையும் மட்டும் தான் ஒரு பெண்ணோட வாழ்க்கையா அப்போ... அதைத் தாண்டி அவளுக்கு இந்த உலகத்துல ஒண்டுமே இல்லையா... என்ன கணிப்பீடு இது..”

எனக்கும் சூடானது..

“அப்ப அவர் என்னம்மா சொன்னார்?”

“சந்தர்ப்பசூழல் தவறு நடந்திட்டு... ஒனக்கு ஒரு கொறையுமே வராம பார்த்துக்கிட்டு அவளையும் வெச்சுக் கொள்றேனே” என்டார்

“சீ... யாருக்கு வேணும் இந்த அரை வாழ்க்கை... நீ அவளோடையே கிடந்து

சாகுடான்டு சொல்லிப்போட்டு எங்க வீட்டுக்கே திரும்பி வந்திட்டேன் ரீச்சர்."

"ஏன் ரீச்சர் நான் இப்படி செய்திருந்தா நெலமே எப்படி இருந்திருக்கும்? நாமளால இப்படியெல்லாம் நெனச்சுக் கூட பார்க்கேலுமா..?"

"சரிமா.. முதல் மனைவியோட அனுமதி இல்லாம ஆண்கள் ரெண்டாவது முடிக்கேலா என்டுதான சொல்றாங்க... பிறகு ஒங்களுக்குத் தெரியாம இது எப்படி,,,?"

கண்களைத் துடைத்துக் கொண்டவாறு நிமிர்ந்தவள் 'அவன்களுக்கு' எதுக்கு

ரீச்சர் நம்மட அனுமதியெல்லாம்.. இங்கே எல்லாமே சும்மா பேருக்குதான்.. காசவீசி எறிஞ்சா இந்தக் கள்ள மௌலவிமார் ஒடனே காவின் எழுதிடு வாங்களே..."

ச்சே... என்ன மனிதர்கள் இவர்கள்... பெண்களின் உணர்வுகளுக்கெல்லாம் ஒரு தனித்துவம் மதிப்பு மரியாதை என்றெல்லாம் ஒன்டுமே இல்லையா...

என் உடலும் மனசும் ஒருசேர ஒடுங்கிப்போனது..

"அப்ப பிள்ளைகள்....".

"எவ்வளவோ மன்றாடியும் தர மறுத் திட்டான். மகன் ஒருநாள் அவருக் கிட்ட சொல்லிக்கொள்ளாமலே ஓடி வந்திட்டான். வாப்பாக்காரன் வந்து காலுல உழுந்தும் அவன் போகல நதாதான் பாவம். அங்கேயும் இங்கேயுமா அல்லாடுறா..

யா அல்லாஹ் இதென்ன கொடுமை. இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் என்ன பாவம் செய்தார்கள்? பெற்றவர்களின் பொறுப்பற்ற நடத்தைகளால்... தேவை யற்ற சலனங்களால்.. சபலங்களால்... பிள்ளைகளுக்கு எவ்வளவு பெரிய சிக்கல்கள்?

மனசு மறுபடியும் பதறியது.

"இவ்வளவு நாளும் போனது போகட் டும்... நதாட ஒலேவல் எக்ஸாமுக்கு இன்னமும் மூன்று மாசந்தான் இருக்கு. ஒழுங்கா க்ளாஸ் போகணும், ஒழுங்காப் படிக்கணும். நல்ல ரிசல்ட்டுக்கு எதிர் பார்க்கிற பிள்ளை இல்லையா இவள்.

உங்க கணவரோட பேசி ஒரு இடமா அவ இருக்கிறமாதிரிப் பாருங்க. அங்கே ரெண்டு கொப்பி... இங்கே மூண்டு உடுப்பு... இதெல்லாம் படிக்கிற பிள்ளைக்கு ஒருநாளும் சரிப்பட்டு வராது" என்றேன் கொஞ்சம் இறுக்கமாய்.

"அவ அங்கேதான் இருந்தா.. எனக்கு நல்லாத்தெரியும் அவருக்கு பிள்ளை கள் என்டா உசிர். அந்தப் பொம்பிளையும் ஒரு குறை வைக்காமதான் பார்த்திருக்கா.. அவருக்கு அங்கேயும் ரெண்டு வயசு மகன். அவன்ட துடினம் கரைச்சல் தவிர வேற ஒரு பிரச்சினை இல்லேண்டுதான் அடிக்கடி சொல்லும்.. அதுதான் பிள்ளையை ஒரே யடியா வரச்சொல்லி தெண்டிக்கல்ல.

இப்பதான் அவளுக்கு அங்கே புதுப் பிரச்சினை...." என்று சொல்லி இழுத்தாள்.

"என்ன"

"அவட தம்பிக்காரன் ஒருத்தன் அங்கே அடிக்கடி வாறானாம். இடைக்கிடையே ராவைக்கும் நிக்கிறானாம். அவனது பார்வை போக்கு சரியில்லையாம். அதான்

பயப்படுறாள்.”

ச்சே... ஒரு பிள்ளைக்குத் தன்சொந்த வீடே பாதுகாப்பு இல்லாமப் போறது மகா கொடுமை.

“ரீச்சர்... பாடம்”

பத்தாம் வகுப்பு மொனிற்றர் சிம்லா.

“அட பெல்லடிச்சது விளங்கல்லை யேமா... சரி போங்க வாறன்”.

அப்ப “சரி ரீச்சர் நாங்க பிறகு பேசுவம்... என்ர பிள்ளையை நல்லா கவனிச்சுக் கொள்ளுங்க. புத்தி சொல்லிக் கொடுங்க. உங்கட கதைய அவள் கேட்பாள்.”

நல்ல வேளையாக அன்றைக்கொரு வாப்பா சொல்லிவிட்டுப் போனமாதிரி “பொடியன் சொன்னசொல் கேட்கிறான் இல்லே ஒங்களயும் கரைச்சல் குடுத்தான் என்டா கண்ணை மட்டும் விட்டுப் போட்டு பயப்பிடாம மத்த எல்லா இடமும் அடியுங்கரீச்சர்” என்டு இவளும் சொல்லவில்லை.

வீட்டுக்கு வந்து நெடுநேரமாகியும் ஒரு வேலையும் ஓட வில்லை. நதாட கிளாஸ் ரீச்சர் நஜினாவுக்கு call எடுத்தேன்.

“........ அப்ப ஒங்களுக்கு மட்டும் தான் டீச்சர் இது தெரியா..”

“அதெல்லாம் விடுங்க ரீச்சர். இவ ஒழுங்கா எக்ஸாம் எழுதி அடுத்த கட்டத்திற்கு போகணும். இருந்து படிக்க இவளுக்கு பாதுகாப்பான வீட்டுச் சூழல் தேவை... அவட வாப்பாவோடையும் பேசிப் பார்ப்பமா...”

“சுகைரா ரீச்சரோடும் பேசுவோம்சரியா...”

மாடியில் ஆலோசனை வழிகாட்டலுக் கான அறை.

“அஸ்ஸலாமு அலைக்கும் நான் நதாட வாப்பா.”

ஒரு நாற்பது.. நாற்பத்தொரு வயசிருக்கலாம். குப்பென்ற சென்ட் மணமோ... சிகரட் நெடியோ இல்லாமல் உடையும் பேச்சும் பார்வையும்கூட கண்ணியமாகவே தெரிந்தது. நதாவின் உம்மா வாறது தொடர்பில் நாங்க அவருக்கு அறிவிக்கவில்லை.

அதிபரிடம் இது தொடர்பில் பேசி ஏற்கனவே முன் அனுமதி பெற்றிருந்தோம். எங்கட அதிபர் நலீப்சேர் எங்களில் முழு நம்பிக்கை வைத்து எங்களை சுயமாக இயங்க விடுபவர். அவரின் நிறைவான வாசிப்பு அனுபவமும் நல்ல இலக்கிய ரசனையும் கூட இதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம். அதிலும் ஆங்கில இலக்கியத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்.

நான், வகுப்பாசிரியை நஜீனா, கவுன் சிலிங் சுகைரா ரீச்சர். நதாவின் உம்மா தவிர அறைக்குள் வேறு யாரையும் அனுமதிக் கவில்லை.

கண்டவுடன் இருவருக்குமே அதிர்ச்சி, பதட்டம், கோபம், ஆத்திரம்.

நாங்கள் மாறி மாறிப் பேசினோம்.

எங்கள் மூவரின் பேச்சும் நதாவின் படிப்பு, பாதுகாப்பு, அவளின் டாக்டர் கனவுகள் பற்றி மட்டுமே

எனினும் உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருக்கும் எரிமலை எவ்வளவு நேரத்திற்குப் பொறுக்கும்,

இடையிலே அவள்தான் ஒரு கட்டத்தில் எல்லை மீறினாள். “ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுசனா...? நம்பி வந்த என்ன நடுத்தெருவிலே விட்டுப்போட்டு அவளோட போனாய்தானே... இப்ப பெரிசா சபையிலே பேச வந்திருக்கார்...”

அவன் கிடந்து பதறினான்

‘‘இல்லே.. இல்லே.. அதே மட்டும் இங்கே இழுக்காதிங்க.. இங்கே நாம நதாட படிப்பு பத்தித்தான் பேசுறோம்... நான் ஒங்களே ஏமாத்தலதானே... கை விடலதானே...”

“என்னது... ஏமாத்தலையா... இதெவிட என்னடா ஏமாற்றம் வேணும்...??”

அவள் குரல் உயரஉயர... இங்கே வேறு யாராவது வந்து விடுவார்களோ என்று நான் உண்மையில் பயந்தே போனேன். நல்ல வேளை அப்படியொன்றும் நடந்து விடவில்லை.

திடீரென சுஹைரா டீச்சர்தான் கேட்டாங்க,

‘‘நீங்க ரெண்டுபேரும் டைவர்ஸ் பண்ணிட்டிங்களா...”

“எங்க டீச்சர்... நான் காதிக்கோட்டுக்கல்லாம் குடுத்தேந்தான்... இவன் ஒரு தவணைக்குமே வரலையே... மாசாமாசம் காசெல்லாம் ஒழுங்கா தாரத்தாலே எங்களுக்கும் பெரிசா ஒரு நடவடிக்கையும் எடுக்கேலாண்டு அவங்களும் கையை விரிச்சிட்டாங்க...”

‘‘அப்ப ஒங்களுக்கு இன்னொன்று முடிக்கிற ஐடியா ஏதும்...”

‘‘ச்சீ... இன்னொன்டா... விரும்பி முடிச்சி...2 புள்ளைகள் பெத்து 12 வருஷம் ஒன்டா வாழ்ந்த இவனே இப்புடித் துரோகம் செஞ்சிட்டான்... இனி இன்னொருத்தனை நான் நம்பவா..?”

நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டோம்.

சுகைரா ரீச்சரே திரும்பவும் தொடங்கினார். ஆலோசனை வழிகாட்டலுக்கும் பொறுப்பானவர் அல்லவா... இப்படியான எத்தனை பிரச்சனைகளைத்தான் கண்டிருப்பார்.

“பிள்ளையின் படிப்புக்காக கொஞ்ச நாளாவது ரெண்டு பெரும் சேர்ந்து வாழுங்களேன்மா... நதாவும் எங்களு கிட்டே இதத்தாம்மா சொல்றா. உம்மாவும் வாப்பாவும் ஒண்டா சேரணும். எப்பவுமே ரெண்டுபேருமே எங்களுக்கு வேணுமென்று....”

முதலில் இருவருமே மிகக்கடுமையான வார்த்தைகளால் இதற்குத் தம் எதிர்ப்பை வெளிக்காட்டினாலும் நாங்கள் மூவருமே மாறிமாறி முன்வைத்த கருத்துகளுக்குள் கொஞ்சம் அடங்கிப் போனார்கள்.

எனக்கு அந்தப் பெண்ணின் சுயமரியாதையில் personal life இல் கை வைக்கிறோமோ என்ற குற்றவுணர்வு மிகையாய் உறுத்தியது.

‘அன்றைக்கு என்னவோ நதாவின் பாதுகாப்பு, படிப்பில் மட்டுமே எங்கள் மொத்தக் கவனமும்.’

“யா அல்லாஹ்.. எல்லாத்துக்கும் நீயே பொறுப்பு”

அடுத்துவந்த மூன்று மாதங்களிலும் ஏனைய பாட ஆசிரியர்களாலும்

அவதானித்துக் கூறக் கூடிய அளவுக்கு நதாவில் நல்ல முன்னேற்றம்.

இடைக்கிடையே நதாவின் உம்மா வுக்குக் கோல் பண்ணுவேன். உற்சாகமாய் பதில் வரும். பிள்ளையின் படிக்கிற ரூமுக்குள் நல்ல பவரான லைட் போட்றது தொடங்கி pastpappers வாங்கிகுடுக்கிறது... பிள்ளை படிச்சுமுடிச்சித் தூங்குற வரைக்கும் வீட்டில முடியுமான அளவு நாமளும் முழிச்சிருக்கிற வரைக்கும் எங்கட உரையாடல் தொடரும்.

“எனா... இந்த வார டிசம்பர் லீவுல அந்தப்பிள்ளை நதாவோட வீட்ட ஒரு தரம் போய் வருவமா...?அதுட உம்மா என்ன எப்பவும்தான் கூப்பிடுறா...”

கணவரிடம் மெதுவாய் கூற... அவரோ ஒரு நக்கல் சிரிப்போடு அதை விடவும் மெல்லிய குரலில் என்னிடம் கேட்டார்... “என்ன அந்தப் பிள்ளை நல்லாப் படிக்குதா எண்டு பார்க்கவா... இல்லே... அவட உம்மாட familylife பற்றி நோண்டவா... அங்கே போவப்போறிங்க....”

டிசம்பரின் இடைவிடாத மழையும் வெள்ளமும் அது பரிசாய் கொண்டு தந்த குளிர் காய்ச்சலும்... எனக்கே எனக்கான விருந்தினர்களுமாய்... எப்போதும் போலவே எனது விடுமுறைக் காலம் மட்டும் வீட்டோடையே முடிந்துவிட.... உண்மையில். நதாவைன்பற்றிய நினைவே முற்றாய் மறந்துபோனது.

அடுத்து வந்த ஜனவரியின் நடுப்பகுதி.

எங்கள் புதிய ஆறாம்தர விஞ்ஞானிக் குஞ்சுகளோடு லேப்பிற்குள்.

இன்னமும் பெயர் மனசுக்குள் சரியாய் நிக்காத புதுமுகங்களின் செல்லக் கலகலப்புகள். நுணுக்குக்காட்டியில்வைத்து அவதானிக்கவென அந்தப் பிஞ்சுகள் கொண்டுவந்து குவித்திருந்த பழைய பாண்துண்டுகளும். பரமீசியங்கள் நீந்தி விளையாடும் வைக்கோல் நீர் பொலித்தீன் முடிச்சுகளும்... பூஞ்சணம் பிடித்த என் microscope lens களுமாய் நான் வியர்த்து வழிந்து கொண்டிருந்தவேளை....

“ரீச்சர்..”

எனக்கு மிகவும் பரிச்சயமான அந்தக் குரல்...

‘நதாவின் உம்மாதான்’

முன்னரையும் விடவும் கொஞ்சம் பளபளப்பாய்... புதிய டிஸைன் அபாயா.. ரெப்செய்த சோலுமாய் சிரித்தபடி அருகில் வந்தவள்... “எப்படி சுகமா...” என்றாள்.
‘

“நல்ல சுகம்... நீங்க.. நதாவெல்லாம் எப்படி...”

‘‘நல்லம்டீச்சர்... நீங்க சொன்ன மாதிரியே நைட்டா சென்டர்ல IT கிளாஸ், பிறகு இங்கிஷ் கிளாசுக்கெல்லாம் போறா... மகனையும் இங்கேயே சேர்த்துவிடுவம் என்றுதான் நானும் அவங்களும் வந்த... நிறையத்தரம் ஒங்களுக்கு கோல் எடுத்தேன்... ஆன்சர் இல்லே.. நம்பர் மாத்திட்டிங்களா... நதா ஒங்களுக்கு சலாம் சொல்லச்சொன்னா... மீட்டிங் தொடங்கப்போகுது.. நான் போயிற்று வரவா... ரீச்சர்..” என்று திரும்பியவளிடம்,

கேட்பதா...விடுவதா என்ற சிறிய மனப்போராட்டத்தின் முடிவில் கேட்டே விட்டேன்.

“பிறகு... ஒங்கட familylife எல்லாம் எப்படிம்மா போகுது...”

அதற்குள் அவள் போன் வைப்ரைட்டா கியது. அவள் கணவராகத்தான் இருக்க வேண்டும். ஒருவிதப் பூரிப்போடு விரைந்து அருகில் வந்தவள் முகத்தில் படர்ந்திருந்த வியர்வையைக்கூடப் பொருட் படுத்தாமல் என்னை இறுக அணைத்து கன்னத்தில் ஒரு முத்தமும் வைத்தபடி ''அவங்க கூப்பிடுறாங்க... பிள்ளைகளையும் கூட்டிகிட்டு ஒங்கட ஊட்ட வாரேன்ரீச்சர்...'' என்றபடி விரைந்தாள்.

நதா என்றால் அர்த்தம் பனித்துளியாம்

இருபத்தொரு வருட ஆசிரியப் பணியில் கடந்துவந்த பனித்துளிகளின் பலவகைமைகளை என்னவென்பது...

'நாம் எவ்வளவோ முயற்சிகள் செய் தும் போராடியும் பெற்றவர்களின் அலட்சியப் போக்குகளால், பொறுப் பற்ற செயல்களால்... மோசமான குடும்பச் சூழ்நிலைகளால்... பெரும் எதிர்பார்ப்புகளோடு மண்ணில் விழுந்த மறுகணமே வற்றி வரண்டு காய்ந்துபோன பனித்துளிகளும்...

சூழல் வெப்பநிலைக்குத் தகுந்த மாதிரி தன் உடல்வெப்பநிலையை மாற்றி வாழப் பழகிக்கொண்ட ஈருடகவாழிகளாய்... இவள் போன்று தான் பெற்றவைகளுக்காய்... தன சுயம், பிடிவாதம், தன்மானம் அனைத்தை யுமே துறந்த தாய்மையின் அர்ப்பணிப்பு களால் வற்றாத நதியாகி சமூகத்துக்குப் பெரும்பயன்தரக் காத்திருக்கும் பனித்துளி களுமாய்.... என நான் நனைந்து கரைந்த வைரத்துளிகள்தான் எத்தனை... எத்தனை...?'.

மெதுவாய் கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொள்கிறேன்... நிறைந்த மனசோடு.

# துளிப்பா

1

வசந்தகால மரத்தடியில்
கணித வகுப்பெடுக்கும் ஆசிரியர்
பூக்கள் எண்ணும் மழலை

2

அம்மாவின் பிறந்தநாள்
செல்லமாய் அடிக்கும் பிள்ளைகள்
குரைக்கும் வளர்ப்புநாய்

3

நிலவொளியில் கடற்கரை
சிறுமி கட்டிய மணல்வீட்டில்
ஓடு கழற்றும் நண்டு

4

ஆற்றிலோடும் மழைநீர்
உறிஞ்சி வாழும் கரையோரமரங்கள்
மௌனம்... மௌனம்...

5

பங்குக்கிணறு உழவன்
சுகவீனமடைந்து வீட்டில் முடக்கம்
கழனியில் பொழியும் மழை..!

**ஸ்ரீவி.முத்துவேல்**
துபாய்



## கொடுத்துச் செல்வோமே நாம் பாரில்!

கலிகாலம் என்றாலே போதும்
கண்முன்னே தோன்றிடுமே சோகம்!
நலிவடைந்த மக்களினம் கண்டால்
நம்முள்ளம் பதறிடுமே தன்னால்!
பலிகடாவாய் ஆக்குகின்ற காலம்!
பரிதவிப்பில் ஏழைகளின் கோலம்!
சலியாத மனம்கொண்டு வென்று
சத்தியத்தை நிலைநாட்ட வேண்டும் !

அரசியலும் கல்வியுமாய்ச் சந்தை!
அத்தனையும் மாறியதே விந்தை!
இரக்கமில்லா வன்முறையும் சேர்ந்தே
இழிநிலைக்குக் கொண்டுசெல்லும் கோரம்!
கரங்களைநாம் இணைத்திடவே வேண்டும்!
கருணையுள்ள மனிதத்தைக் காப்போம்!
வரமாகும் வாழ்வதனை மீட்போம்!
வடித்திடுவோம் பொற்காலம் நாட்டில்!

பண்பாட்டைச் சிதைத்ததுவே தாக்கம் !
பழங்கால மரபென்றால் ஏக்கம்!
எண்ணங்கள் செயல்களிலே வேகம்!
எஞ்ஞான்றும் பரபரப்பாய் ஓட்டம்!
கண்ணான உறவுகளைப் பேண
கலிகாலம் இடமளிக்க வில்லை!
கொண்டுவந்த தெதுவுமில்லை பாரீர்!
கொடுத்துச்செல் வோமேநாம் பாரில்!

ஓசூர் மணிமேகலை



## குறுங்கவிதைகள்

1.
கீரை விற்பவள்
காசுகளை பத்திரமாக
வைக்கிறாள் சுருக்குப்பைக்குள்.
2.
அறுவடை நாள்
வீட்டு வாசலில் நிற்கும்
கடன் தந்தவர்கள்.
3.
மரவெட்டியான்
கோடரியால் வெட்டுகிறான்
கனிகள் தரையில்...
4.
மண்டபத்தில் நுழைவாயில்
எல்லாரையும் சமமாக வரவேற்கும்
நெகிழிப் பொம்மைகள் .
5.
பஞ்சப்பத்திரங்கள்
பஞ்ச காலத்தில் உதவுகின்றது
மூத்த மகள் திருமணம் .
6.
தெருவில் ஓவியம்
வரைந்தவன் ஓரமாக உட்கார்ந்தபடி
சில்லறைகளை கவனிக்கிறான்
7.
களத்து மேட்டில்
விவசாயப்பெண்கள் உழைப்பு
சொற்பக்கூலி.

8.
காற்றாக வந்தது
புயலாகி விடுவதால் மக்கள்
அவதிப் படுகின்றார்கள்.
9.
புத்தாண்டு பிறந்தது
மனித மனமெல்லாம் மகிழ்வுடன்
இனிதே கொண்டாட்டம் .

R.S.பாலகுமார்.M.A.,
சென்னை-600073

## மன வலிமை வேண்டும்

வாழ்விலே வறுமை வந்து
   வாட்டியே அழித்த போதும்
தாழ்வுமே தினமும் வந்து
   துரத்தியே நின்ற போதும்
பாழ்படுத்தும் துன்பம் வந்து
   பாடாய்ப் படுத்தும் போதும்
வீழ்ந்திடாதே மண்ணில் நீயும்
   வலிமையோடு வாழ்ந்து காட்டு

தோல்விகள் தொடர்ந்து வந்து
   தொல்லைகள் தந்த போதும்
நோய்நொடி நெருங்கி வந்து
   நெஞ்சத்தை யழித்த போதும்
வான்மழை எனவே சதிகள்
   வசந்தத்தைச் சிதைத்த போதும்
வாடி நீயும் வீழ்ந்திடாதே
   வலிமையோடு வாழ்ந்து காட்டு

சூழ்ச்சிகள் சதிகள் சேர்ந்து
   சுற்றியே வதைத்த போதும்
தாழ்ச்சியும் தேடி வந்து
   தலைகுனிவைத் தந்த போதும்
காழ்ப்புகள் கடிதே வந்து
   கலங்கிட வைத்த போதும்
வாழ்வில் என்றும் வீழ்ந்திடாதே
   வலிமையோடு வாழ்ந்து காட்டு

உற்றவர் உறவு கொண்டோர்
   உதறியே நின்ற போதும்
மற்றவர் பெரியோர் உந்தன்
   பெறுமதி மறந்த போதும்
சுற்றியே உன்னைச் சூழ்ந்தோர்
   தூற்றுதல் செய்த போதும்
சற்றும் நீ வீழ்ந்திடாதே
   வலிமையோடு வாழ்ந்து காட்டு

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி

**அதிகாரம்**

அரவணைப்பு என்கிற
பேராயுதம் இருப்பது
தெரியாமல்
அனைவரையும் அடிமைகளாக்கி
தோற்றுப் போகிறது
அதிகாரம்.

**பயம்**

பாம்பைக் கண்டால்
படையும் நடுங்குமாம்
பாம்புக்குத் தானே தெரியும்
படையைக் கண்ட
பயம்.

**இறப்புக்குப் பின்**

வாழ்க்கை முழுவதும்
நடந்தே திரிந்தவனுக்கு
இறுதிப் பயணம்
மட்டும்
வாகனத்தில்.

**விலை**

ஏறிக்கொண்டே இருக்கும்
தங்கத்தின் விலை
திடீரென்று இறங்குகிறது
தேர்தல் நேரத்து
அரசியல்வாதிகளைப் போல.

**முட்டாள்**

எல்லாம் தெரிந்த
அறிவாளி
தனது இறப்புத்தேதி
தெரியாமல்
முட்டாளாகவே
இருக்கிறான்.



**கவிஞர் எம் சோலை**
அம்பத்தூர்.
சென்னை



# உளி பேசும் மொழி

## 13


**நெல்லை க. சோமசுந்தரி**

(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),

சென்னை, தமிழ்நாடு

புவியில் வாழும் மனித ஜீவராசிகளின் வாழ்க்கைக்கு இன்றியமையாததான பஞ்சபூதங்கள் மட்டுமன்றி உணவு, உடை, உறைவிடம் ஆகியவையும் மிகவும் முக்கியமானது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இவ்வுலகில் தோன்றிய பழமையான நாகரீகங்கள் யாவும் ஆற்றங்கரையொட்டியே உருவாகியுள்ளது. அதன் முதன்மையான காரணம் யாதெனில் மனித வாழ்வின் அடிப்படையான ஆதாரம் நீர் ஆகும். மனித நாகரீகமானது, ஆதி மனிதர்களால், பல நூற்றாண்டுகள் கடந்து, மனித உடல் சக்தியைப் பெறுவதற்கான பல்வேறு விதமானசுவையானஉணவுவகைகளுக்குத் தேவையான தானிய உற்பத்தி, அவர்கள் அணிவதற்கான ஆடைகள், மற்றும் உறைவிடத்திற்கான கட்டிடங்கள் உருவாக்கப்பட்டு சமூக கட்டமைப்பானது வளர்ச்சியடைந்துள்ளது.

மனிதர்கள் ஆடைகளைத் தயாரித்து அணிந்தது மனித நாகரீகத்தின் ஒரு மைல் கல் என்பது நம் அனைவராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். அவ்வகையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஏறத்தாழ சங்க காலங்களிலேயே நம் மூதாதையர்கள் கண்கவர் வண்ணங்களில் ஆடைகளை நெய்து அணிந்து வாழ்ந்துள்ளனர். இதற்கு ஆதாரமாகச் சிலப்பதிகார புகார் காண்டத்தில் கூறும் வரிகளின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

‘பட்டினும், மயிரினும்,
பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக்
காருகர் இருக்கையும்‘

இப்பாடலின் விளக்கமானது, பட்டு மற்றும் பருத்தி ஆகியவற்றில் நூல்களை நூற்று ஆடையாக நெய்யும் காருகர் (நெசவாளிகள்) வாழும் இருப்பிடங்கள் மருவூர் பாக்கத்தில் இருந்ததாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

மேலும், கீழடியில் கிடைக்கப்பெற்ற ஆய்வுகளின் படி 2000 வருடங்களுக்கு முன்பே, நெசவுத் தொழிலின் நுட்பத்தை அங்குக் கண்டு எடுக்கப்பெற்ற தக்ளி (ஸ்பிண்டில்), தங்க ஊசி போன்ற கருவிகளின் மூலம் நம்மால் அறிய முடிகிறது. அது மட்டுமன்றி, பொன்னால் செய்யப்பட்ட பலவகை யான அணிகலன்களும் இந்த அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்றுள்ளது. அவ்வழியே, பழங்கால தமிழர்களின் கலைகளின் நுட்பத்தை இன்றும் கீழடியில் கிடைக்கப் பெற்ற கலைநயமிக்க பொருள் களின் மூலம் நம்மால் அறிந்திட முடியும்.

அன்றைய காலத்திலேயே, ஆடைகளானது ஆண்கள், பெண்கள் மற்றும்











கைத்தறி நெசவுக் கூடம்

சிறுவர், சிறுமியர்களுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றில் பெண்களுக்கான ஆடைகளில், புடவையானது முதன்மை பெற்று விளங்கியது. அதிலும் பட்டுப் புடவைகளானது பெண்களுக்கான ஆடைகளில் சிறப்பு சேர்ப்பது மட்டுமின்றி அவை பெண்களின் அழகுக்குக் கூடுதல் அழகு சேர்ப்பதாகக் கருதப்படுகிறது. பட்டுப் புடவைகளில் சிறந்ததும் கலை நயமிக்கதுமான காஞ்சிப் பட்டுப்புடவையானது பட்டுப் புடவைகளின் முன்னோடியாகக் கொள்ளலாம். பண்டைய காலங்களில் பட்டுப்புடவையானது கைத்தறி நெசவின் மூலம் நெய்யப்பட்டுப் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வழியே காஞ்சிப் பட்டானது, பழங்கால கிரேக்க ரோமானிய நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்பதன் மூலம் அவை எத்தகைய புகழ்பெற்று விளங்கியது என்பதை நம்மால் உணர முடிகிறது. ஒவ்வொரு பட்டுப் புடவையிலும் அழகு மிளிர்ந்த மலர்கள், அன்னங்கள், மயில் மற்றும் சிற்ப ஓவியங்கள் எனப் பல்வேறு கலை நுணுக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய நவீனத் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள நிலையிலும்

புதுப்புது வடிவிலான கலைநயமிக்க பட்டுப் புடவைகளானது தற்போதைய தலைமுறையினராலும் அதிகளவில் வரவேற்கப்படுகிறது என்பதை அறிவதன் மூலம், பல நூற்றாண்டுகள் கடந்தும், இன்றும் காஞ்சி பட்டுப்புடவைகளானது தனக்கே உரியத் தனிச்சிறப்புடன் விளங்குகிறது என்பது நமக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது.

கைத்தறி பட்டு உற்பத்தியானது, இன்றும் கைதேர்ந்த பட்டு உருவாவதற்கான நுணுக்கங்களை நன்கு அறிந்த பட்டு நெசவாளர்களால் மட்டுமே தொடர்ந்து நெய்யப்பட்டு வருகிறது. பட்டு நெசவானது இந்தியாவின் பல பகுதிகளில் செய்தாலும் காஞ்சிப் பட்டானது அதில் தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது. அவ்வகையில், கைத்தறியில் உருவாக்கப்பட்ட காஞ்சிப் பட்டுப்புடவையானது கண்கவர் வண்ணங்களுடனும், மிகப் பொலிவாகக் காணப்படுவதுடன் காலத்திற்கும் அதன் பொலிவு குன்றாமல் நீடித்து நிற்கும் தன்மையையும் பெற்றுள்ளது. மேலும் தட்ப வெப்ப நிலைக்கேற்ப, குளிர் காலத்தில்ஒருவித கதகதப்பாகவும், வெயில் காலங்களில் வெப்பத்தைத் தணிக்கக் கூடியதாகவும் இருக்கும். இவ்வளவு சிறப்புகள் பொருந்திய உண்மையான காஞ்சிப் பட்டுப் புடவைகளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது என்பதனை காணும்போது அதன் தனித்தன்மையை நம்மால் அறிய முடிகிறதல்லவா?.

ஒரு பட்டுப்புடவை நெய்வதற்கான அடிப்படைத் தேவையான பட்டு நூலானது, காஞ்சிப் பட்டுப் புடவையில் சிறப்பானதான 'மல்பாரி' பட்டு நூல் மூலம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தூய்மையான தங்கம் மற்றும் வெள்ளி ஜரிகை நூலானது அதில் பயன்படுத்தப்படுகிறது. இதன் காரணமாகவே மற்ற பட்டுப் புடவைகளிலிருந்து காஞ்சி பட்டுப் புடவைகள் சற்றுகனம்பொருந்தியதாகவேஇருக்கிறது. அதனாலேயே காஞ்சிப்பட்டானது மற்ற பட்டுகளிலிருந்து தனித்து மேன்மையுடன் மிளிர்கிறது.



கீழடியில் கிடைத்த நூல் நூற்கும் தக்களி

ஒரு பட்டுப் புடவை கைத்தறியால் நெய்வதற்கு இரண்டிலிருந்து மூன்று பேர் சேர்ந்து வேலை செய்தால் அதனை உருவாக்கப் பன்னிரண்டு முதல் பதினைந்து நாட்கள் வரை ஆகும். அதாவது வெண்பட்டு நூலானது மிகச்சிறிய அளவிலான நிறமியை வெந்நீரில் கலந்து உருவாக்கிய கலவையில் அமிழ்ந்தெடுத்து அதனை நன்றாகப் பிழிந்து உலர வைத்து தனித்தனியாகப் பகுத்து சிறிய நூற்கண்டுகளாகப் பிரிக்கப்படுகிறது. இந்த நூலானது கோரா நூல் என அழைக்கப்படுகிறது. கோரா நூலில் சாயம் ஏறியதும் சாயமேற்றப்பட்ட நூல்கள் அறை வெப்ப நிலையில் குளிர்ந்த நீரில் மீண்டும் மீண்டும் அமிழ்த்தி எடுக்கப்பட்டு அதிகப்படியான நிறமியானது வெளியேற்றப்படுகிறது. பின் ஈரமானது உலர்த்தப்பட்டு நிறங்களுக்கேற்ப 'சார்க்காவில்' உருளை வடிவ தனித்தனி

நூற்கண்டுகளாக 'கார்டுபோர்டு'களில் 'ஸ்பிண்டில்'களாகச் சுற்றப்படுகிறது. இந்த நூற்கண்டுகளே தறியில் ஏற்றப்பட்டு பட்டுப்புடவைகளாக நெய்யப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் பட்டுப் புடவைகளானது 'அடை' என்ற தொழிற் நுட்பத்தைப் பயன்படுத்தி நெய்யப் படுகிறது. இத்தொழிற்நுட்பம் ஆனது புடவையின் உடல் பகுதி தனியாகவும் 'பல்லு' எனப்படும் முந்தானைப் பகுதி தனியாகவும், புடவையின் கீழ்ப் பகுதியுள்ள கரையின் ஜரிகைப் பகுதி தனியாகவும் நெய்யப்பட்டு மூன்றும் பிறகு இணைத்து பட்டுப்புடவையாக உருவாக்கப்படுகிறது.

சமீப காலங்களில் திருமண பட்டு புடவைகளில் மணமகன் மற்றும் மண

பட்டு நூல் சுற்றப்பட்ட தக்களி (ஸ்பிண்டல்)



மகளின் படங்களைக் கொண்டு வடிவமைக்கப்படுகிறது. மேலும் அவரவர் தேவைக்கேற்ப பலவிதமான கலை நயமிக்க ஓவியங்களைக் கொண்டு வடிவமைத்த பட்டுப் புடவைகளும் நெய்யப்படுகிறது. இவ்வளவு அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய ஒரு புடவையானது உருவாக் கப்படுவதற்குப் பலவிதமான மெனக் கெடல்களும், மனமானது செயலில் ஒன்றிணைந்து செய்யப்படுவதனால்தான் ஒரு கலைநயமிக்க பட்டுப் புடவையானது உருவாகிறது. இன்றைய நவீன தொழிற் நுட்பத்தில் உருவாகும் ஆடைகளில் அமைக்கப்படும் ஓவியங்களோ மற்ற பலவிதமான படங்களோ நகல் எடுக்கப் பட்டு ஆடைகளின் மேல் பகுதியில் பொறிக்கப்படுகிறது. ஆனால் காஞ்சிப் பட்டின் புடவைகளில் அமைக்கப்படும் உருவங்களோ, ஓவியங்களோ புடவை யின் நூலினோடு ஒன்றிணைந்து நெய்யப்பட்டு வடிவமைக்கப்படுகிறது. இதிலிருந்தே ஒரு பட்டுப் புடவையைக் கைத்தறியினால் நெய்வதன் நுட்பத்தை நம்மால் உணர முடியும். கலை என்பது மனம் ஒன்றி வாழ்வியலின் அழகியல்களை வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாகும். அவ்வகையில் காஞ்சிபுர கைத்தறி பட்டுப்புடவைகளை உருவாக்கும் பட்டு நெசவாளர்கள் அதனை ஒரு கலையாகவே அர்ப்பணிப்புடன் இன்றும் செய்து வருகிறார்கள். இவர்களும் ஒரு வகையில் கலைச் சிற்பிகளே. இச் சிற்பிகளின் பழங்கால வழித்தோன்றல்களின் பங்களிப் பினாலேயே, சிற்பங்களின் ஆரம்பம் துவங்கியிருக்கும் என்பதனை நம்மால் அறிய முடியும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பல நூற்றாண்டுகள் மற்றும் பல்வேறு தலைமுறைகளைக் கடந்து இன்றும் தனிச்சிறப்புடன் விளங்கும் பட்டினை உடுத்தியவாறு அமைக்கப்பட்டுள்ள



சிற்பங்களை ஆலயங்களில் காணும் போது காஞ்சிபுரத்தில் பழங்காலந் தொட்டு வாழ்ந்த மக்களின் கலையின் தாகத்தையும் அதன் தாக்கமானது காஞ்சிபுரத்தில் உள்ள ஒவ்வொரு ஆலயங்களிலும் அமைந்துள்ள ஒவ்வொரு சிற்பத்திலும் வெளிப்படுகிறது. இதன் வழியே, பன்னெடுங் காலந்தொட்டு கலையானது வெவ்வேறு பரிமாணங்களில், வெவ்வேறு காலகட்டங்களில் தொடர்ந்து தனது பரிணாமத்தின் மாற்றங்களால் மேன்மையடைந்துள்ளது. ஆயினும் கலைகளின் நுட்பமானது இன்றும் அதன் தன்மை மாறாமல் தற்போதைய மக்களின் வாழ்வியல் அடிப்படைகளைக் கொண்டு வெவ்வேறு நிலைகளில் தொடர்ந்து வெளிப்படுத்தப்படுகிறது.

அப்படிப்பட்ட கலைநயமிக்க சிற்பங்களைக் கொண்டுள்ள பல நூற்றுக் கணக்கான ஆலயங்கள் காஞ்சியில் எழுப்பப்பட்டிருப்பினும் ஏகாம்பரேஸ்வரர் ஆலயமானது சிற்ப வேலைப்பாடுகள் மட்டுமின்றி பலவித மான தனித்தன்மையுடன் இன்றும் தொன்மை மாறாமல் திகழும் பல சிறப்பு களைப் பற்றி நாம் அறிய உளியின் மொழியினைத் தொடர்ந்து கேளுங்கள்!!

உளியின் மொழி தொடரும்.

தமிழ்நெஞ்சம்

## இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்திற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படியானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தய வாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

மின்னஞ்சல் : editor@tamilnenjam.com

# வெண்பா போட்டி (பயணம்) – 27

## காலம் 01 - 12 மார்ச் 2024

## தலைப்பு - வேலையில்லா திண்டாட்டம்

ஓடி களச்சநா ஓலப்பா யில்படுத்துங்
கோடி பணத்தயுங் கொட்டணும் - வாடியும்
நாடினேன் கந்துவட்டி நாட்டுல வேலயில்ல
மூடிடுங் கம்பெனிகள் முட்டு.

சரஸ்வதி பாஸ்கரன்

.

காராம் பசுவிற்று கற்றேனே டாக்டருக்கு
ஈராண்டாய் இல்லை பலனுமே - தீராதோ
திண்டாட்டம் சோற்றுக்கே தேம்புகிறேன் பொய்யில்லை
என்றெனெக்கு வேலை வரும்!

பொன்மணி தாசன்

.

நன்றாய்ப் படித்துவந்து நல்ல பணிசெய்தல்
என்றும் இளைஞர்தம் எண்ணமெலாம் - என்றாலும்
ஒன்றும் அமையாமல் உள்ளமும் வாடிவிட
குன்றி விடுவார் குமைந்து.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

ஏடு படிக்காத எங்கப்பன் ஏர்பிடித்து
வீடுநிலம் விற்று படிக்கவைத்தான் - நாடோ
குலத்தொழில் கற்றென்னை கும்பிடச் சொல்லி
மலப்புத்தி காட்டுவது ஏன்

ஞால ரவிச்சந்திரன்

.

இன்ஜினி யர்வேலை இன்னும் கிடைக்கலனு
பன்ஜர ஒட்டுறேன் கார்களுக்கு - என்னத்தச்
சொல்ல எதைநானும் சொல்ல, படிச்சதுக்கு
இல்லையப்பா வேலைக ளின்று.

லோகநாதன் குருசாமி

.

கொட்டி யளந்ததோ கோடிபணம்என்றிருக்கக்
கிட்டுகிற ஊதியமோ கேட்டவர்க்குப் பட்டென்று
எகத்தாளம் செய்ய இடமாச்சே என்னை
முகம்பார்க்க என்ன மொழி.

அன்புவல்லி தங்கவேலன்

.

பட்டமும் வாங்கிப் பரிதவிச்சி நிக்கேன்நான்
எட்டிய கல்வியோ ஏட்டளவில் - துட்டுக்கும்
நட்டமாய் தூக்கமும் நாசமாய் எம்பொழப்பு
கிட்டாத வேலைக்குக் கெட்டு

ஆனந்த் சுந்தரராமன்

.

கவர்மென்டு வேலையென்று கண்டபடி பேசும்
எவரும் அறியாரெம் துன்பம்... அவரவர்
வேலையிலே என்னென்ன வேதனையோ....? செந்தமிழே...!
மூலையிலாப் பேர்க்கு முழங்கு.

பாவலர் தென்பசியார்

.

கற்றேன் தமிழதனில் காதலுடன் பல்பட்டம்
பெற்றேன்; பயன்பிறிது யாதுற்றேன்? - மற்றவர்
ஏளனமாய்ப் பேசி இழிவாய் நடாத்துகின்ற
ஆளாய்த்தான் வாழ்ந்தேன் அறி.

ஜாய் சத்தியா

.

வேலை கிடைத்து விரைவாய் மணமுடிக்கப்
பாலை மனத்திற் பயிர்வளர்த்தேன் - நாளுந்தான்
ஓடிக் கரைந்துவிட ஒன்றும் நடக்கவில்லை
வேடிக்கை காட்டும் விதி

இரா அழகர்சாமி

.

இஞ்சினியர் பட்டம் இளிச்சிகிட்டே வாங்கினேன்நான்
கொஞ்சமும் நாதியில்ல கொத்தனாரா - கெஞ்சுறேன்நான்
செஞ்சதப்ப வேறயாரும் செய்யா(து) திருங்கய்யா
பஞ்சத்தில் பாடுறேனே பாட்டு!

இரா.சத்தியநாராயணன், சத்தியமங்கலம்

.

மாடுகன்று விற்றே மகராசன் எங்கப்பா
காடுமலை தாண்டியே கல்லூரி - தேடிப்
படிக்கவுமே வைத்தார் பலனேது மில்லை
துடிக்கின்றேன் மேசைத் துடைத்து .

கவிஞர்.அ.முத்துசாமி, தாரமங்கலம் .

.

நல்ல பணியிலே நானும்தான் சேர்ந்திட
வெல்லவழி தேடினேன் வேங்கையானேன் - மெல்ல
அரசுவேலை என்றே அகமலர்ந்தேன் ஏனோ
நரகமாக நாட்கூலி நான்.

வா.சண்முகம்

.

உழைக்கின்ற மக்கள் உயர்வின்றி நொந்து
பிழைக்கின்ற தென்ன பிழைப்பு? - விழிப்பின்றி
துன்பப் படுமேழை தூயவர்க்குப் பொற்காலம்
என்று விடியு மினி?

சிமா இளங்கோ மலேசியா

.

இஞ்சிடீ வித்திருந்தா இன்றுநான் அம்பானி
இஞ்சினியர் பட்டத்தால் இங்கழிஞ்சேன் - மிஞ்சியின்று
நிற்பதெல்லாம் ஏக்கந்தான்; நேரமந்த மோடிக்குக்
கற்றவென் காதுலபூக் காண்

விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

பட்டப் படிப்புப் படித்ததில் கிட்டியது
பட்டகடன் மட்டும்தான் பட்டறையில் - தட்டியும்
கொட்டியும் பாடுபட்டுக் கையிருப்பு வைத்திருந்தால்
வட்டிலில் வந்திருக்கும் வாகு.

வானதி சந்திரசேகரன்

.

தேர்வு எழுத திசையெங்கும் போனேன்நான்
பார்வைகள் என்மேல் படவில்லை - வேர்வையால்
சோர்ந்து விழுந்தாலும் சொந்தம் உதவவில்லை
யார்உதவி இல்லை எனக்கு

கண்ணன் நடராசன்

.

நெட்டுழல் நாட்பட நீடித்ததன் வேலையின்மை
பட்டுடல் கன்றிட பாய்ந்தேதன் - வெட்கமற
கொண்டான் மனத்துள்நல் கொள்கையாய்ச் சொந்தமாய்த்
துண்டென்றும் செய்வோர்த் தொழில்.

பாலா மணி

.

இல்லாப் பணந்திரட்ட எங்கேநான் போவேனோ
நல்லா யிருக்கிறது நாட்டிலே - கல்வியுந்தான்
கற்றாலும் வீணாகக் காலம் கழிப்பதால்
வெற்றுடல் போகுதே வெந்து.

மலர்மைந்தன்

.

காடு கழனிவித்து கல்வி படித்தீங்கே
மாடுகளை மேய்த்திட்ட மாமனவன் - வீடுவாசல்
வாங்கிக் குடும்பமா வாழுகிறான் பார்த்தாயோ
பாங்காப் பிழைக்கவே பற்று.

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

பள்ளிக்கு போனபோது பத்துரூபா காசில்ல
உள்ளிருந்து  தள்ளிவிட்டான் உண்மையிது கொள்ளுங்க
பட்டியலும் போட்டுயிங்கு பாவியாக்கி போயிட்டான்
விட்டிடல இன்னுமிங்கு வேட்டு

எழுத்தாளர் நாகா

.

இஞ்சினிய ராகியும் எவ்வித வேலையும்
வஞ்சனையாய் இல்லாமல் வாடுகிறேன் - நஞ்சான
வாழ்க்கையினால் நாளும் வறுமை புடைசூழ
பாழ்க்கிணற்றைத் தேடுகிறேன் பார்.

மாலதி திரு

.

கல்லூரிப் பட்டம் கணிதத்தில்; வேலையில்லை
புல்லறுத்து மாட்டுக்குப் போடுவதும் - அல்லும்
பகலும் பயிர்செய்துப் பாருக்குச் சோறு
புகட்டுவதும் போதுமே பொன்.

தன்ராஜ் பாப்பணன்

.

பட்டப் படிப்புக்குப் பட்டோலை வந்தது!
பெட்டையே,என்ன பெரும்படிப்பு - விட்டிடு
துட்டில்லை யிப்போ! தொடராதே என்றுனைத்
திட்டிய தாயைத் திருத்து !

கிண்ணியா சபீனா

.

மெத்த படிச்சாலும் மேவலயே என்னபண்ண
உத்தமனா வாழ்ந்தாலும் ஊருலதான் - பத்துகாசு
தேடுயின்னு சொல்லுறாங்க தேடினாலும் வேலையில்ல
சாடுதுங்க சொந்தமெலாம் சேந்து!

.

அ.வள்ளிபாபு

.

பட்டம் முடிச்சுப் பலவருடம் போயாச்சு
நட்டவிதை பாலையிலே நானானேன் - விட்டகன்றாள்
மாமா எனக்கொஞ்சும் மைவிழியாள் வேலையில்லை…!
நாமேதான் ஆறுதல் ந..மக்கு…!

வள்ளி முத்து

.

காட்டைவிற்று வீட்டைவிற்று கல்விகற்றுச் சோர்ந்தாரே;
வீட்டிலெங்கும் சூழ்ந்ததம்மா வேதனையே; - பாட்டெழுதிப்
போற்றுகிறார் கல்வியைப் பொய்யில்லை; நல்லுழைப்பின்
ஆற்றல் இழந்தார் அலைந்து…!

ஐ.க.நாகப்பன்

.

ஓடியோடி ஓய்ந்தேனே தேடித்தான் தேய்ந்தேனே
வாடித்தான் போனதே வாழ்க்கையின்று - பேடியாய்ப்
போவேனோ அன்றியும் பேதையாய் ஆவேனோ
சாவேனோ? வேலையொன்று தா!

பசுங்கிளி மணியன்

.

இஞ்சினியர் கல்வியதை இன்பமெனக் கற்றிடவே
தஞ்சமென வாழ்நாளில் தாங்கியே - கெஞ்சிநிதம்
வேலைதேடிக் கேட்டேன் விரும்பிப் பலரிடம்
காலை வருந்தித்தான் காண்.

பா.இந்திரன்

.

கடிச்ச கரும்பாட்டம் கல்வி இனிக்கும்
அடிச்சுத்தான் சொன்னாங்க ஆங்கு - துடிப்பாய்ப்
படித்த படிப்புக்குப் பால்மாடு மேய்க்க
முடிவாகப் போகுமோ முன்.

கு. கமலசரஸ்வதி *(ஒரு விகற்ப நேரிசை வெண்பா)*

.

பகலிரவுச் சாப்பாடு பாதியுண்டு காய்ந்தே
அகங்கொண்டேன் பட்டம் அதனை - சிகரமாம்
கல்வியைக் கற்றும்நான் கால்மிதிதான் என்செய்வேன்?
சொல்ல எதுவுமில்லை சொல்.

த.கி.ஷர்மிதன்

.

காட்டை அடகுவைத்தே கல்லூரி சேர்ந்தேன்யான்
ஆட்டையே விற்றுத்தான் ஆஸ்டல்பீஸ் - வீட்டுடைய
பத்திரத்தை வைத்தும் படித்துவிட்டேன், வேலைதான்
எத்திசையு மில்லை எமக்கு.

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூரு

.

அம்மா நகையை அடமானம் வைத்துதான்
இம்மாம் பெரியதாய் இஞ்சினியர் பட்டம்தான் - சும்மா
அலைகின்றேன் வேலைதேடி ஆங்காங்கே ஓடிக்
கலைந்த கனவுகள் காண்.

ஓசூர் மணிமேகலை

.

வங்கிக் கடன்வாங்கி வாங்கிய பட்டத்தால்
வங்கிக் கடனடைக்க வந்துவிட்டேன் - வங்கிக்கே..
இப்பணி ஆற்றிடவா இன்ஜினியர் பட்டமென
எப்போதும் கேட்பர் இனி!

செ. இராசா

.

வீதியில நின்னாலும் வீதிக்கோர் வக்கீலு
வாதிட்டே வாழ்க்கையை ஓட்டாமல் - மீதியெல்லாம்
இஞ்சினியர் ஆகிடலாம் என்றெண்ணி போராடி
மிஞ்சியதோ பட்டமொன்று தான்.

வான்மதி

படிக்காத தற்குறிதான் பாவங்கள் செய்வர்
படித்தவரும் பாவத்திற் போக - படித்துநான்
பெற்றுவிட்ட பட்டம் பரிகாசம் செய்கிறதே
கற்றதனா லாயபயன் என்..?

மு. மதனகோபால், சென்னை

பட்டதாரி என்றாலே என்னே மரியாதை
எட்டாத ஓரிடமும் உண்டல்லோ - கிட்டாதே
அக்காலத் தில்நாமும் பெற்றநற் பேர்இனி
இக்காலப் பட்டங்கள் வீண்.

மன்மதன், ஒசூர்

---

தமிழ்நெஞ்சம் அமினார் வாழியவே !

அழகாய்ச் சான்று வடிவமைத்து
அமினார் நெஞ்சம் இதில்சேர்த்துப்
பழகும் தமிழில் பாட்டெழுத
பயிற்சித் தந்தே உயர்த்திடுவார்
சுழலும் பூமி எங்கெங்கும்
சுற்றிச் சுற்றித் தமிழ்வளர்ப்பார்
தலைக்கும் இவரின் தமிழ்ப்பணியாம்
தரணி ஆள வேண்டுமாமே...

தமிழ்ப்பேரொளி.பாவலர் தென்பசியார்

# வெண்பா போட்டி (பயணம்) - 28

## போட்டியின் கால அளவு : 01 - 12 ஏப்ரல் 2024

வணக்கம் பாவலர்களே...
இம்மாத போட்டியின் விதிகள்....

நீங்கள் ஒரு நல்ல புத்தகம் வாங்குவதற்கு ஒரு புத்தகக் கடைக்குச் சென்றுள்ளீர்....

அதற்கு அந்த கடைக்காரர் ஒரு புத்தகத்தைக் காட்டி அதன் சிறப்பு அம்சங்களைப் பற்றி சொல்வதையும்..... புத்தகத்தின் விலையைச் சொல்வதையும் ஒரே வெண்பாவாவில் எழுதுவதே

இம்மாதப் போட்டியின் விதி.

அது என்ன புத்தகம் என்பதும்..... தன் விலை எவ்வளவு என்பதும்.....
உங்களின் கற்பனைக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளலாம்......

நீங்கள் எழுதும் பாடலின் தலைப்பு...இதனைப் படிப்பீர் இனி. என வைத்துக் கொள்ளவும்....

இது தலைப்புதானே அன்றி ஈற்றடி இல்லை.....
.
இதோ எ-கா வெண்பா.....
.

நல்ல சுவையும் நயமும் அணியழகும்
எல்லாம் திருக்குறள்தான் என்பேன்நான் - சொல்லில்
முழுவதுமே வாழ்வியல் முற்றும் இருக்கும்
எழுபதுரூ பாய்தான் இது..... .

பொதுவான விதிகள் : -
நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். ***வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.***

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...


தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

ஆசிரியர் தமிழ்நெஞ்சம், மற்றும் ஆசிரியர் குழு.

https://www.facebook.com/profile.php?id=100030084520602

## மதிப்புரை




# தமிழமின்

பிரான்சு

இலக்கியக் கடல் தன் ஆழத்தில் உதித்த சிப்பிக்குள் முத்தாக, இன்னுமொரு கவிதை நூலை கரையொதுக்கி நம் சிந்தைக்கு விருந்து படைத்திருக்கிறது. கவிஞர் ஷிபானியா பௌசுலின் கன்னிப் படைப்பாக மிளிரும் அந்திக்கரை, அறுபது இலக்கணக் கவிதைகளுடன் மன்றமெங்கும் மணம் வீசுகிறது. இந்த கவிதைத் தொகுப்பில், நேர்த்தியாக புனையப்பட்டுள்ள கவிதைகள் எதுகை மோனையுடன் இதமாக மனதை தாலாட்டுகின்றன. சின்னஞ் சிறு கவிதைக் குள்ளும் அழகியல் ஆட்சி புரிவதைக் காணமுடிகிறது. கவிதைகளின் சிறப்பே கையாளும் சொல்லாடல்களில் தான் தங்கியுள்ளது. அந்தவகையில் இக்கவி ஞரின் மொழியாளுமையை வரிகள் பறைசாற்ற, அவை வாசிக்கும் வாசகரின் மனதுக்குள்ளும் நர்த்தனமிட்டு உலாப் போவதையும் உணர முடிகிறது. எல்லாக் கவிதைகளும் மனதில் பதியும் வண்ணம் சிறப்பாக புனையப்பட்டுள்ளன.

செம்புலப் பெயல்நீராய் இங்கு இலக்கணமும் கவிநயமும் ஒன்றிக் கலந்து மனதை வசீகரித்து நம்மைக் கட்டிப் போட, தான் தமிழை நேசிக்கும் ஒரு தமிழாசிரியை என்பதையும் சொல்லாடல்களில் சூசகமாக உணர்த்திப் போகிறார் கவிஞர்.

இதில் எல்லாக் கவிதைகளுமே ரசிக்கும் படியாக அமைந்திருப்பது சிறப்பு!

வேண்டுகிறேன் என்ற தலைப்பிலான கவிதையில்

' சொல்லும் செயலும் நமக்குள்ளே
சுழன்றே வாய்மை பெறவேண்டும்'

எனும் வரிகள் நம்மை நாமே புடம் போட உறுதுணையாய் நிற்கும்.

'ஓடும் நதியின் கால்களுக்கு
உரசும் கடலைத் தெரிவதில்லை
பாடும் காற்றின் உதடுகளை
பார்த்தே ரசிக்க எவருமில்லை

வாடும் பூக்கள் புன்னகையை
வண்டு கண்டும் தொடுவதில்லை
தேடும் நிலவின் ஒளியினிலே
தென்றல் சொட்டும் மடிவதில்லை'

அற்புதமாய் கோர்த்த வரிகளின் அழகை என்னென்பேன்!

இவரின் சொந்த ஊரின் அழகை மொத்தமாய் வாரியெடுத்து வரிகளில் சேர்த்திருக்கிறார் 'எழில் கொஞ்சும் நேகம' எனும் கவிதையில்.

மரபுக்கு இசைவாய், மனதுக்கு இதமாய் எண்ணத்தில் ஓவியங்களாக விரிகின்றன இவரின் கவிதைகள் எனலாம்.

தமிழ் இலக்கியத்துக்கு மற்றுமொரு பொக்கிஷமாகத் தடம் பதிக்கிறது கவிஞர் ஷிபானியா பௌசுல் எழுதிய 'அந்திக்கரை'. அவருக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவிக்கிறேன்.

84 பக்கங்களுடன் விடியல் காணும் இந்நூலின் விலை இலங்கை ரூபா 600/= . நூல் தேவைகளுக்கு.. .**+94 71 611 6574**

# சிவப்பிரகாசர் எழுதியநன்னெறி வெண்பாக்களும் தன்முனை இயைபுக்கவிதைகளும்

வெண்பா (5)
நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்,
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமை போல்
புல்லினும் திண்மைநிலை போம்.

பொருள் : *நெல்லில் உமியை சிறிது நீக்கி மறுபடியும் இணைத்தாலும் முளைக்காது. நண்பர்களில் கருத்து வேறுபட்டு பின்னர் சேர்ந்தாலும் முன்போல நெருக்கம் இருக்காது.*

தன்முனை இயைபுக்கவிதை

நெல்லில் உமி நகர,
இணைத்தாலும் முளைக்காது/
பிரிந்தபின் நட்பும்
இணைந்தாலும் சிறக்காது

வெண்பா (6)
காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் ,
தீதில் ஒரு கருமம் செய்பவே - ஓதுகலை
எண்ணிரண்டும்ஒன்றுமதிஎன்முகத்தாய்நோக்கல்தான்,
கண்ணிரண்டும் ஒன்றையே காண்

பொருள் : *இரண்டுகண்கள் சேர்ந்து ஒரு பொருளை நோக்குவது போல, அன்பான கணவன், மனைவி இருவரும் வேற்றுமையின்றி ஒன்றிய செயல்கள் செய்வர்.*

தன்முனை இயைபுக்கவிதை

இரண்டு கண்கள் பார்வையில்,
வேறு வேறு நோக்குமோ?
அன்பு இணையர் உள்ளமோ,
மாற்றுச் செயல்கள் செய்யுமோ!

வெண்பா (16)
தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்துயர்ந்தோர்,
தம்மை மதியார் தமை யடைந்தோர் - தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல்

பொருள் : *பெருங்கடல்நீர் சிறு உப்பங்கழிகளிலும் பாயும். மேன்மக்கள் எளியோர் இருப்பிடம் சென்றே உதவிகள் செய்வார்கள்.*

தன்முனை இயைபுக்கவிதை.

பேராழி பெரிதெனினும்,
உப்பங்கழியில் சேரும்
பேரன்பு மிக்கோரால்,
எளியோர் இடர்தீரும்


வெண்பா (18)
இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்,
வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய்! பொங்காது அழல்கதிரால் தண்என்
கதிர்வரவால் பொங்கும் கடல்

பொருள் : *வெப்பம் மிகுத்த சூரியன் வருகையால் கடல் பொங்காது, குளிர்ச்சி பொருந்திய சந்திரன் வரவால் பொங்கும், இன்சொற்களே மகிழ்ச்சி தரும். வன்சொற்கள் என்றும் மகிழ்வைத் தாரா.*

தன்முனை இயைபுக் கவிதை

வெப்பத்தால் பொங்காக் கடல்,
குளிர்ச்சி கண்டு பொங்கும்
வன்சொலால் தங்கா இன்பம்,
இன்சொலில் என்றும் தங்கும்

திருமதி. இரா.இராஜாமணி, ஈரோடு




# நூற்றாண்டு கடந்த தூரிகைக் கலைஞன்

ஆதி மனிதன் இனக்குழுக்களாக வாழ்வதற்கு முன்பே, அவன் வசிக்கும் குகைகளிலும், கற்பாறைகளிலும் தான் நினைக்கும் எண்ணங்களையும், உணர்வுகளையும் பிறருக்குத் தெரிவிக்கும் பொருட்டு, குறியீடுகளாகவோ, கோட்டோவியங்களாகவோ வரைந்து வெளிப்படுத்தியுள்ளான். கண்ணால் கண்ட ஒரு காட்சியைத் தனது மனதில் பதிய வைத்திருப்பதைப் பிறரின் மனதிற்குக் கடத்தும் வகையில் எழுதிக் காட்டும் முயற்சியே ஓவியக்கலையின் தோற்றமாகக் கருதப்படுகிறது. ஓவியக்கலையின் தொடக்க வரலாறாக அமையும் பாறை ஓவியங்களே இதற்குச் சான்றுகளாக நமக்குக் கிடைத்தும் உள்ளது. பேச்சு மற்றும் மொழி உருவாவதற்கு முன்பே ஒருவர் மற்றவருடன் இந்த விதமாகத் தகவல் தொடர்பிலிருந்துள்ளனர். ஓவியக் கலையின் ஆதிமூலம் என்பது இவ்வாறாகத் தொடங்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

'ஓவியம் என்பது மனிதனின் சுய வெளிப்பாட்டை உணர்த்துவதாகவும், மனிதனின் அகச்சிந்தனையான உள்நோக்கிய ஆன்மாவுடன் நேரடித் தொடர்புடையதாகவும் உள்ளது. பொதுவாகவே, ஓவியம் என்பது நாம் காணும் கண்களுக்கு இருபரிமாண தோற்றமாகக் காட்சியளிக்கிறது. ஒரு ஓவியமானது ஒரு நிஜத்தை நிழல் பிம்பமாக நமக்குக் கொடுக்க வல்லது. ஓவியம் தீட்டும் போது ஓவியரின்




மன ஓட்டம் என்பது, கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இணைத்துப் பயணிக்கும் நிலையில் இருக்கவேண்டும். அப்போது தான் அந்த ஓவியம் உயிரோட்டமானதாக அமையப்பெறும். அப்படி உயிரோட்டமாக வரையப்பெற்ற ஓவியங்களானது, ஒரு சரித்திர சாம்ராஜ்ஜியத்தை ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு, நம் கண் முன்னே காட்சிகளாக விரித்து நம்முடன் உலவ வைத்தது என்று கூறினால் மிகையாகாது. 'பொன்னியின் செல்வன்' என்னும் மாபெரும் சரித்திர படைப்பானது காலங்கடந்தும், இன்றளவும் கதாபாத்திரங்களாக உயிர் பெறுவதற்கு முக்கிய காரணம் அதில் வரையப்பட்ட உயிரோவியமே ஆகும். அத்தகைய உயிரோவியங்களைத் தந்தவர் தாம் நூற்றாண்டு காணும் ஓவியமேதை அமரர். மணியம் அவர்கள். (1924-2024).



வந்தியத்தேவன்

சோழ சரித்திரத்தின் ஈடில்லா அரசன் அருண்மொழி வர்மன் எனும் இயற்பெயர் கொண்ட இராசராச சோழனைக் கொண்டு கல்கி. கிருஷ்ணமூர்த்தியால் எழுதப்பட்ட வரலாற்றுப் புதினம் பொன்னியின் செல்வன் எனும் புகழ் பெற்ற நூலாகும். அந்நூலின் முன்னுரையில், இராஜாஜி அவர்கள்,

‘ஓவியர் மணியத்தின் ஓவியங்கள் நல்லவர்களையும் திருடத் தூண்டும் அளவு சிறப்பாக உள்ளதால், நூல்களைப் பத்திர மாகப் பாதுகாக்கும் படி நூல்களையும், புத்தகத்தைத் திருப்பித் தர வாடகைக்குக் கொடுப்பவர்களுக்கும் நகைச்சுவையாக அறிவுறுத்தும் பெருமை பெற்றவை இவரது ஓவியங்கள் என்று அவர் குறிப்பிட்டிருப்பது மணியம் அவர்களுக்குக் கிடைத்த பெரிய சான்றிதழ் அல்லவா? என இதனைப் படிக்கும் போது நம்மால் உணரமுடிகிறது.

அப்படிப் பட்ட தூரிகை மேதை 1924 ஆம் ஆண்டு ஜனவரி 26 ம் நாள் ஸ்ரீ உமாபதி - ஸ்ரீ மதி ஞானாம்பாளுக்கு மகனாகப் பிறந்தவர். சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட அவர், இளம் வயதிலேயே ஓவியம் வரைவதில் ஆர்வம் கொண்டிருந்தார். சென்னை ஓவியக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த போது, அதனை முழுவதும் முடிக்கும் முன்பே, கல்கி இதழின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களால் அடையாளம் காணப்பட்டு கல்கி இதழுக்குப் படம் வரைய ஆரம்பித்தார். பொன்னியின் செல்வன் என்னும் மாபெரும் சரித்திர சாம்ராஜ்ஜியத்தை அதன் ஆசிரியர், புதினம் நடந்த இடத்திற்கே சென்று அச்சூழலை அனுபவித்து எழுதியதைப்போல, மணியம் அவர்களும், அவர் சென்ற எல்லா சரித்திர இடங்களுக்கும் கல்கியுடன் சென்று ‘ஸ்பாட்‘ ஓவியங்களை வரையும் வல்லுநராகத் திகழ்ந்தார். ( ‘ஸ்பாட் ‘ ஓவியம் என்பது ஒரு பொருளை அது இருக்கும் இடத்திற்கே சென்று அருகிலிருந்து பார்த்து வரைவது என்பதாகும்).

ஓவியர் மணியம






பொன்னியின் செல்வனில் வரும் கதாபாத்திரங்களில் சில

பொன்னியின் செல்வனில் வரும் 37 கதாபாத்திரங்களுக்கும் தனித்தனியே முக பாவனை, சிகை அலங்காரம், நகை, நடை, உடை, உடல்மொழி என வேறுபடுத்திக் காட்டி உயிரோவியங்களாகப் புதினத்தின் வழியே உலவ விட்டிருப்பது இன்றளவும் நம்மிடையே பிரமிக்க வைக்கிறது. அதிலும் குறிப்பாக, நந்தினியின் கொண்டையும், குந்தவையின் ஐந்தடுக்கு முடி அலங்காரமும் இன்றளவும் அனைவராலும் பேசப்பட்டு வருகிறது. வந்தியத்தேவனின் நடுவகிடு முடி அலங்காரம் அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களிடையே பிரசித்தப் பெற்றது. ஆழ்வார்க்கடியானின் தோற்றம், மீனவப்பெண் பூங்குழலியின் தோற்றம், ரவிதாசனின் அரேபியக் கொள்ளையர் முகத்தோற்றம், அமைதி பொங்கும் அருண்மொழி வர்மன் தோற்றம், வானதி, மணிமேகலை, பெரிய பழுவேட்டரையர், சின்ன பழுவேட்டரையர் என ஒவ்வொரு பாத்திர படைப்பிற்கும் சித்திரம் தீட்டும் அவரின் மெனக்கெடல் அசாத்தியமான ஒன்றாகவே இருந்திருக்கிறது. ஓவியர். மணியம் அவர்கள் ஒரு தனித்துவமான தனக்கே உரியப் பாணியுடன் சித்திரங்களை வரைந்து, அதற்கு உயிர் கொடுத்து, வரலாற்று நாவலை நம் கண் முன்னே, காட்சிகளாக உலவவிட்டவர்.

ஒரு வரலாற்று நாவலை உற்று நோக்கினால், படிக்கும் வாசகர்களிடையே அதன் எழுத்துக்கள் சுவாரசியத்தை ஏற்படுத்

எழுத்தாளர் சிவசங்கரி, நடிகர் சிவகுமார் ஆகியோருடன் ஓவியர் மணியன் செல்வம்





ஓவியர் மணியன் செல்வம்

தும். ஆனால் ஒரு ஓவியம் வாசகர்களிடையே இத்தகைய தாக்கத்தைத் ஏற்படுத்துமா? எனும் கேள்விற்கு, அவரின் ஆழ்மன அர்ப்பணிப்பே அதற்குக் காரணமாக அமைகிறது.

வரலாற்றுப் புதினத்தில் வரையும் ஓவியன், பல நூற்றாண்டுகள் பின்னோக்கி சென்று கடந்த காலத்தில் தன் மனதோடு உள் முக மனதில் பயணப்பட்டு, ரசிப்புத் தன்மையுடன் அக்காலத்திற்குள் சென்று வாழ்ந்தாக வேண்டும். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஒரு நிஜமானது மனதில் வரைந்த இந்த நிழல் படத்தின் மூலமாகக் கதாபாத்திரமாகக் காட்சிகள் அமைத்து நம்மிடம் உலா வந்துள்ளது என்றால் எப்படிப்பட்ட ரசனையும், பிரயத்தனங்களும், அதற்குரிய அர்ப்பணிப்புகளும் அவருக்குள் பொதிந்து இருக்க வேண்டும்.

ஒரு நூற்றாண்டு கடந்தும் அத்தூரிகைத் தடம் காலத்தை வென்ற, உயிர்ச் சித்திரங்களை கலைப்படைப்பாக்கி எக்காலத்திலும் பிரதி பலிக்கும் காலக்கண்ணாடியாக நம்மிடம் விட்டுச் சென்றுள்ளது. அவரின் கலைத்திறன் சரித்திர மணத்தையும், பழந்தமிழரின் கலை யையும், நம்மிடையே ஓவியத் தீற்றலாக இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. பொன்னியின் செல்வன் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் கடந்தும் கடந்து பேசப் பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு இருப்பதற்குக் காரணம் அதன் வசீகர எழுத்து நடையும் அசாத்தியமான ஓவிய வடிவமைப்புமே என்றால் மிகையாகாது. இன்றளவும் புத்தகக் கண்காட்சியில், அதிக அளவில் வாங்கப்படுவது 'பொன்னியின் செல்வன்' என்ற வரலாற்றுப் புதின நூல் என்பது அனைவரும் அறிந்தது. ஒரு படைப்பாளியின் மன எண்ணம் பழைய காலத்துடன் வாழ்ந்து வரைந்ததற்கான அத்தாட்சியாகவே இது திகழ்கிறது.

நாற்பத்தி நான்கு ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்த அமரர். மணியம் அவர்கள், அதில் 28 ஆண்டுகள் தம்முடைய வாழ்வைச் சித்திரங்கள் தீட்டுவதிலேயே கலைக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். வாழ்ந்த காலகட்டம் குறுகியதாக இருந்தாலும், ஓவியத்துறையில் அவருடைய பங்களிப்பு இக்குறுகிய காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட அளப்பரிய சாதனையாகவே நம்மைப் பிரமிக்க வைக்கிறது. இவரது நூற்றாண்டு விழாவில், நினைவு கூறும்

ஓவியர் மணியன் செல்வத்துடன் கட்டுரையாளர்





வகையில் சுமார் 82 ஆண்டுகளுக்கு முன்பு இவர் வரைந்த பல ஓவியங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. கலையை ரசிக்கும் கண்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இவரது மகனும் பிரபல ஓவியருமான ம. செ என அழைக்கப்படும் மணியம் செல்வம் அவர்கள் நூற்றாண்டு விழாவை 'மணியம் 100 சரித்திரம் படைத்த சித்திரங்கள்' என அவர் வாழ்ந்த ,வரைந்த சித்திரங்களைத் தொகுப்பாக்கி நூலாக வெளியிட்டு தனது தந்தைக்கு பெருமை சேர்த்து உள்ளார். ஓவியக்கலைஞர்களுக்கு இந்நூல் ஒரு வழி காட்டியாக இருக்கும் என்பது உண்மை.மேலும், இவர் அஜந்தா, மாமல்லபுரம், வாதாபி, போன்ற பல வரலாற்று இடங்களுக்குச் சென்று ஓவியம் தீட்டும் போது, தன்னுடைய ஓவியங்களில் என்றுமே உடைந்த சிற்பங்களையோ, அல்லது சிதிலமடைந்த சிற்பங்களையோ அப்படியே வரைந்தது கிடையாது. அவற்றை தமது கற்பனையாலும், மனவளத்தாலும் அந்த காலத்தில் எப்படி பூர்த்தி செய்திருப்பார்கள் என்று யோசித்து முழுமையான வடிவத்தைக் கொடுப்பார் என. 'மணியம் 100 சரித்திரம் படைத்த சித்திரங்கள்' எனும் இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது எப்பேர்ப்பட்ட கலைஞனாக இருந் திருக்கிறார் என்பதை உணர்த்துகிறது.




இக்கண்காட்சியில் அமரர் மணியம் அவர்களின் ஓவியத்தைத் தாண்டி மணியன் செல்வம் அவர்களின் ஓவியமும் இடம்பெற்றிருந்தது மிகவும் சிறப்பாக இருந்தது. இக்கண்காட்சியானது சென்னையில் உள்ள லலித் அகாடமியில் நடைபெற்றது. அவரின் நூற்றாண்டின் நினைவில் அவ்வோவியங்களை மக்கள் அனைவரும் கண்டு களிப்புறும் வாய்ப்பாக மட்டுமின்றி அடுத்த தலைமுறையினருக்கு இத்தகைய விடயங்களைக் கடத்தும் விதமாக இந்த நிகழ்வு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைத் தொடர்ந்து இவரது அடுத் தடுத்த தலைமுறையினரும், இக்கலையினை தொடர்வதனையும் அவர்களின் பங்களிப் பானது இலக்கிய உலகில் பல்வேறு தளங்களில் பிரதிபலிப்பதனை, சமீபத்தில் ஓவியர் திரு. மணியம் அவர்களின் நூற்றாண்டில், 'மணியம் 100 சரித்திரம் படைத்த சித்திரங்கள்' என்ற தலைப்பில் நிகழ்ந்த கண்காட்சியில் நம்மால் காண முடிந்தது மட்டுமின்றி அதனை உணரவும்முடிந்தது. அவ்வழியே, இக்கலைக்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்பானது மேலும் தொடரவும் மற்றும் இத்தளத்தில் இயங்கும் மற்ற கலைஞர்களும் புதிய சிந்தனைகளுக்கு உருவம் கொடுத்து இவ்வோவியக் கலையின் புதிய பரிமாணத்தை வழங்கவேண்டும் என்பதனை கூறி நூற்றாண்டு கலைஞனைப் போல் வரும் இளைய தலைமுறையும், பல நூற்றாண்டுகள் கண்ட ஓவியக்கலையினைப் போல் தழைத்தோங்க வேண்டும் என்பதே நம் அனைவரின் ஆவலாக உள்ளது.

**நெல்லை. க.சோமசுந்தரி**
*(கவிஞர், எழுத்தாளர், தொல்லியல் ஆர்வலர்)*
*சென்னை -122.*

# வாழ்க்கையில் தோல்வி

தோல்விகள் வாழ்வில் நீர்க்குமிழி போல் வந்து உடைபவை.

தோல்விகள் வந்துவிட்டதே எனக் கலங்குகிறீர்களா?

அதே தோல்விதான் உங்களை சிந்திக்கவும் கற்றுக்கொடுக்கிறது. ஆயிரம் முறை தோற்ற விஞ்ஞானிகள்தான் புதிய கண்டுபிடிப்புகளை தனதாக்கிக் கொண்டவர்கள். ஏன் என்ற கேள்வியை எழுப்ப வைப்பவை தோல்விகள்தான்!!

வெற்றி கிடைத்தால் ஏற்றுக்கொள் வோம். தோல்வி வந்தால் புதிய திருப்பம் காண்போம். சிந்திக்க, புதியவற்றை படைக்க, ஒருவகையில் தோல்வி உதவி செய்கிறது.

நம்புவீர்களா??

நம்பிக்கை நாற்றுகளை நடுவதற்கு சிந்திக்க வைக்கும் திறப்பு தோல்வியால் ஏற்படுகிறது.

நேர்முகப்பரீட்சைக்கு போகும் மாணவனுக்கு வரும் கேள்விகள் படிக்காத பக்கம் வருகிறதே என கவலைப் படுகிறான். அதனால் தனக்கு அந்த வேலை கிடைக்காமல் போகிறதே என ஏங்குகிறான். அதனால் தோல்வி அடைகிறான்.

நினைத்துப்பார்த்தால் வாழ்வியல் அத்தியாயம் வானளாவ தெரிய வேண்டும்.

படிப்பும் வாழ்க்கைப் பட்டறிவும் வேறு வேறானவை. ஆனால் சாதாரண வாழ்வின் நடைமுறைகள் புரியவேண்டும்.

உதாரணத்திற்கு தெருவில் வளர்ந் திருக்கும் மரத்தின் வேருக்குப் பாதிப்பு ஏற்படாமல் ஒரு பாதையை அமைக்க வேண்டுமெனக் கேட்டால் ஏதோ ஒரு பதில் உனக்குள் வரவேண்டும். மாறாக தெரியாது என சொல்லக்கூடாது. அங்கு முயற்சி செய்யாமல் இருக்கிறீர்கள் என எண்ணிக்கொள்ளலாம். இது தோல்விக்கான பின்னடைவுதான். இந்த வினாவை நினைத்துப் பாருங்கள். ஏதோ ஒரு விடை எல்லோருக்கும் வரும். முறை பிழையாக இருந்தாலும் முனைப்பு சரியாக அமையவேணும்.

இல்லையேல் அன்றாட தொழிலிலும் உயரமுடியாது போகிறது.


ஆகவே தோல்வியால் துவண்டுவிடா மல் சவாலாகும் பல விடயங்களை அறிய உங்கள் மனதை திடப்படுத்தி புதிய பக்கங்களில் சிந்தனையைத் திருப்புங்கள்.

ஒருநாள் வெற்றி உங்களுக்கும் காத்திருக்கும்.

**தமிழ்மணி – நகுலா சிவநாதன்**
யேர்மனி







தமிழ்மணி நகுலா சிவநாதன் எழுதிய

# விருத்த மழை

**வெளியீடு டோட்முண்ட் தமிழர் அரங்கில் 04.02.24 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது**

இளையோர்களை முன்னிலைப்படுத்தி இந்த நூல் வெளியீடு நடைபெற்றது.

குத்து விளக்கேற்றி இளையோர்களும் பெரியோர்களும் ஆரம்பித்து வைக்க, வரவேற்புரையுடன் விழா ஆரம்பம் கண்டது. அதனைத்தொடர்ந்து, நூலா சிரியர் பற்றி மண் ஆசிரியர் திரு சிவராசா சிறப்பாகப் பேசினார். பல்துறை வல்லனராக, ஆசிரியராய், கவிஞராய், எழுத்தாளராய், பட்டிமன்ற நடுவராய், கவியரங்கதலைமையாய் பல பரிணா மங்களுடாக பயணிப்பது யேர்மனி யில் முதலாவது பெண்ணாளுமை என்பதை பாராட்டிப் பேசினார். அதிக நூல் எழுதிய பெண்ணாகவும் இவர் போற்றுதற்குரியது என்றார். அதனைத் தொடர்ந்து மாணவர்களின் பார்வையில் கவிஆய்வு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து சிறப்புரையை திரு தமிழர் அரங்க நிறுவனர் திரு சபேசன் அவர்கள் ஆற்றினார். பாவலராய் பார்க்கும் மிகச்சிறந்த பெண் ஆசிரியர் இவர் என்பதை பாராட்டிப் பேசினார் .அதனைத் தொடர்ந்து விருத்தமழைத் திறனாய்வை கவிவாணன் இரா சம்பந்தன் சிறப்பாக எடுத்துரைத்தார்.



நூலாசிரியரின் கவிதைத்திறனை வியந்து பாராட்டினார். காலத்திற்கு ஏற்ப சிறந்த நூலை எதுகை மோனை சந்தம் தொனிக்க இவர் எழுதிய கவிநடை பிரமிக்க வைக்கிறது எனப் பாராட்டிப் பேசினார். அதனைத் தொடர்ந்து வெளியீட்டுரையை திரு வ.மனோகரன் ஆற்றினார். அதனைத்தொடர்ந்து நூல் வெளியீடு நடைபெற்றது. முதற்பிரதியை Orientalisch Textilien உரிமையாளர் திரு

ஜெகதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். இரண்டாம்பிரதியை TTS உரிமையாளர் திரு தவம் அவர்கள் பெற்றுக்கொண்டார். 3வது பிரதியை பொறியலாளர் திரு சிவசிவகுருநாதன் பெற்றுக்கொண்டார். சிறப்பு விருந்தினர் மருத்துவர் சதுர்சா ஆசிரியரைப் பாராட்டிப் பேசினார். தொடர்ந்து வாழ்த்துரைகளை திரு திருக்குமார் ஏலையா முருகதாசன் ஊடகவியலாளர் முல்லைமோகன் திரு மணியம் இயக்குனர் சிபோ சிவக்குமார் நடன ஆசிரியை சாந்தினி துரயைரங்கன் ஆற்றினர். பின்னர் நூலாசிரியரை திரு அன்னராசா வாழ்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.









நூல் வெளியிட்ட பின்னர் ஆர்வமுடன் இளையோர்கள் தங்களுக்குப் பிடித்த கவிதையை வாசித்து பெருமை சேர்த்ததும் மகிழ்வாக அமைந்தது. சுவைபட இந்த நிகழ்வை ஷறீகா சிவநாதன் மிக சுவாரசியமாகத் தொகுத்து வழங்கினார்.

நூலாசிரியரின் பிறந்தநாளும் அந்தநாள் என்பதால் பலருடைய வாழ்த்தோடும் பாராட்டுடனும் இவ்விழா இனிது நிறைவு பெற்றது.







**கழனிக் கடனே பக்தி!**

தண்பெயல் பாரினில்  தாய்நிகர் அமுதாய்ச் சொரிந்திடுமே
மண்வயல் வாழ்வினில் மாண்பென என்றுமே விளங்கிடுமே
கண்ணெனப் பயிரைக் காப்பவன் தேவனே அறிந்திடுவீர்
ஒண்கொடை உலகில் ஓங்கிடும் தருவே வளர்த்திடுவீர்!

வேங்கை மார்பன் சையத் யாகூப்,  பவானி

**பருவம்**

விண்ணிலே கண்டது வெண்ணிலா தானடி வெகுதொலைவோ?
கண்ணிலே வெட்கமோ காதலும் பக்கமோ கனவிதுவோ?
மண்ணிலே துள்ளிடும் மானிவள் மல்லிகை மலரிதழோ?
பண்ணிலே பாவிலே பைங்கொடி யாடிடும் பருவமிதோ?

பாவலர் மணி மரு. செல்வக் கடுங்கோ வாழியாதன் மதுரை

**தண்ணீர்**

அந்தமில் ஞாலம தாக்கமாய்க் காத்திடு மரும்புனலும்
சந்தையில் விற்பனைச் சில்லறைச் சான்றுடன் சுகம்மிகுக்கும்
பந்தமாய் வந்தவர் பண்புகள் ஏற்றநன் பரம்பரையால்
விந்தையின் செய்கையில் என்றுநற் றோழனாய் வளந்தருமே.

சுப.சாவி. திருவிடைமருதூர்

**கல்வி**

மானிடர் வாழ்விலே மாற்றமும் வேண்டியே படித்திடுவோம்
ஞானியர் நூல்களில் ஞாலமே உள்ளதை யுணர்ந்திடுவோம்
தேனினை மிஞ்சிடும் தென்னவன் முத்தமிழ் சுவைத்திடுவோம்
நானிலம் போற்றிடும் நன்னெறிக் கல்வியால் பயன்பெறுவோம்

ம.பழனிச்சாமி , கிருஷ்ணகிரி

# கலித்துறை

**கற்போம் - நிற்போம்**

நற்றமிழ் நூல்களை நாளுமே கற்கவே பழகிடுவோம்
கற்பதை வாழ்க்கையாய் வாழ்ந்திட நிச்சயம்  முயன்றிடுவோம்
அற்பமாய் வாழவா ஆண்டவன் நம்மையேபடைத்தளித்தான்
சொற்பமே வாழ்வென அர்த்தமாய் வாழ்ந்திட பயனுறுவோம்

முு.வா.பாலாஜி, ஓசூர்.

**தனித்திறன்**

நாவினில் கூர்மையை நாம்பெற வேண்டுதல் நறுமணச்சொல்
ஓவியம் சீர்பெறும் ஓர்மையின் சிந்தனை ஒழுங்குகளால்
காவியம் யாத்திட கற்பனைச் சீர்படல் கடவுளருள்
தாவிடும் உள்ளமும் தன்னிலை கொள்ளுதல் தனித்திறனே

கவியன்பன் கலாம், தமிழ்நாடு

**அன்னை**

அன்னையைப் போலவே அற்புதச் சீவனும் இருந்திடுமோ
அன்பினால் எம்மையே அள்ளியே  வார்த்திடும் உயிரதுவே
மென்மையே தன்மையாய் மேதினி தன்னிலே உலவிடுவாள்
தன்னலம் பேணிடாத் தாயவள் தங்கமே நிகருளதோ

குலா கிருஷ்ணா,  ரொறொன்ரோ / கனடா

**என் கண்மணி - காதலி**

கண்மணி அன்பினால் கண்ணய ராதுநான் வருந்துகிறேன்
பொன்மணி துன்பினால் காதலைத் தேடிநான் துயரடைந்தேன்
திண்ணமாய்ச் சொல்கிறேன் என்னித யத்தினை கொடுத்திடுவாய்
பண்புடன் கூறினால் புன்னகை செய்தெனைப் பழிப்பதுமேன்?

தமிழ்நெஞ்சம் அமின்,   பிரான்சு





# கலித்துறை

**செந்தமிழ்**

செந்தமிழ் ஆனசீர் செம்மொழிக் கீடொரு மொழியுமில்லை
சுந்தரத் தாயவள் சூழ்கடல் மோதியும் அழியவில்லை
முந்தையோர் காத்ததெம் முத்தமிழ் எங்களின் விழியெனவே
சிந்தையில் வைத்ததைச் சீர்கெடாக் காத்திடும் பணியெமதே

வில்லூர்ப்பாரதி, இலங்கை

**தமிழிசை**

பூக்களைக் கண்டிடும் பூவையர் நெஞ்சினை  நினைத்திடவே
பாக்களை மீட்டிடும் பாவையென் நெஞ்சினில் மகிழ்வொலியே!
நோக்கிடும் காலமே நுட்பமாய்க் கேட்டிடும் தமிழிசையே!
வாக்கினில் மாறிடா வாய்மையால் ஓங்கிடும் தமிழ்மொழியே!

ரூபா அன்ரன்  சுவிஸ்

## இவளும் புதுமைப் பெண் தானே.

கடலோரம் நடக்கிறாள் அருமை
காற்றினை நுகர்கிறாள்
கால் போன த்  திசைகளில்
கவனமுடன் நடக்கின்றாள்
மனதில் உறுதிப்படைத்தவளிவள்
புதுமைப்பெண்ணானவள்
மடியில் கனமில்லை வழியில்
பயமில்லை இவளுக்கு
கள்ளம் கபடம் துளியு
மில்லாதவள் தைரியமானவள்
துணிவு மனம்படைத்தவளிவள்
ஒய்யார  நடையுடையாள்
கோபம் கொஞ்சமும் கொள்ளாதவள்
கருணை கொண்டவளிவள்
நானிலம் போற்றிடும் தங்க
மங்கை என்றால் மிகையாகாது

**- பாலா**

# மனக்கவலை



ஆறுதலுக்காக அவன் காதலின் வலியை கூறிக்கொண்டு இருந்தான் அத்தனையும் காதுகொடுத்து கேட்டு ஆறுதல் பெற வேண்டும் என்பதே அவனின் அவா..

காதல் பிரிவை தாங்கிக்கொள்ள முடியாமல் இரண்டு உளவியலாளர்களை சந்தித்துவிட்டு தான் என்னோடு கதைத்தான். கண்ணீருக்கு வார்த்தை மட்டும்தான் மருந்து என்பது இந்த சம்பவத்தையும் இலகுவாக கையாள எடுத்தது அதுமட்டும்தான்..

எல்லாவற்றையும் கூறிக்கொண்டு இருந்தான் சில சிந்திக்க வைத்த விடயங்களை மட்டும் பகிர்கின்றேன்.

அவன் கூட ஈமான் உள்ள ஆண்தான் பேசிக்கொண்டே போகும் போது கூறினான்

நான் இத்தனை வருடங்கள் விபச்சாரம் செய்து விட்டேன். அது ஹராம் என்று தெட்டத் தெளிவாக அவனாகவே விளங்கி கூறினான். மாஷா அல்லாஹ் அவனே உணர்ந்து விட்டான் செய்தது விபச்சாரம் என்று . அதுவே முதல் திருப்தியாக இருந்தது.

நான் இடையிடையே சில கேள்வி களை மட்டும் தான் கொடுத்தேன் அள்ளி வீசும் நீர் போல் அவன் கவலைகள் பீறிட்டு வார்த்தைகளய் வந்துக்கொட்டியது.

அவள் சுபஹ் தொழ வேண்டும் என்பதற்காக என்னை அவளுக்கு எழுப்ப சொல்லுவேன் என்றான் அவன்.

உண்மையிலே காதலில் இவ்வளவும் ஓர் ஆண் ஈமானோடு செய்கிறான் என்பதை நினைக்கும் போது மெய் சிலிர்க வைத்தது. இப்படியும் ஆண்கள் இருக்கிறார்கள் என்பது அரிது .

காரணம் காதலில் இருக்கும் போது ஈமானை வழி கெடுக்க ஷைத்தான் நம்முடன் இருக்கின்றான் என்பதே.

மனக்கவலை எல்லாம் மொழிந்து விட்டான்.

கடைசியாக என்னிடம் கூறியது நான் இனி யாரையாவது விரும்பினால் நிகாஹ் செய்துவிட்டு தான் காதல் செய்வேன் என்றால்.

அவனின் கவலைகளுக்கு அத்தனை ஒத்தடமும் தஹஜ்ஜத் தொழுகை மாத்திரம் ஆகும்.

- பஹ்ரியாபாயிஸ்

# ஓடுதலும் தேடுதலும்



ஓடுதல் தேடுதலுக்காக எனில்
ஓடுதல் சுகம்!

தேவைகள் தான் தேடுதலையும்
தேடுதல்கள் தான் ஓடுதலையும்
தீர்மானிக்கின்றன!

தேடுதலில் சுகம் காண்பவர்கள்
ஓடுதலின் களைப்பைப்
பொருட்படுத்துவதில்லை!
தேடுதல் இல்லா ஓட்டங்கள்
வெற்றியளித்ததில்லை!

ஓடுதல் இல்லா நாட்கள் வெறுமை!
தேடுதல் இல்லா நொடிகள் வீண்!

முந்துபவருக்கே முன்னுரிமை.
ஆனால்
ஓடுபவனுக்கே முதலிடம்.
பந்தியில் மட்டுமல்ல...
வாழ்க்கைக்கான தேடுதலிலும்
இதுவே நியதி!

தேடுதலுக்கான ஓடுதலில்
எடுத்து வைக்கப்படும் முதல் அடி
முன்னேற்றத்துக்கான முதல் படி!

இலக்குகள் இல்லா ஓட்டம்
களைப்பு தரும்!
ஓட்டங்கள் இல்லா தேடுதல்
சலிப்புறும்!

ஓடுதல் முக்கியம்..
அறிவுடன் இணைந்த தேடுதல்
அதைவிட முக்கியம்.

ஓடுதலும் தேடுதலும்
ஆயுளை அதிகரிக்கும்
அறிவீரா?

அறிவைத் தேடச் சொல்லி
தன் வாழ்நாளெல்லாம்
மக்களைத் தேடித் தேடி ஓடினார் பெரியார்
ஆயுள் அதிகரித்தது.

பெரியாரின் கசப்பு மருந்தை
தேன் குழைத்து
மக்களிடம் ஓடி ஓடி ஊட்டினார்
அண்ணா.
அணையா விளக்காக நிற்கிறார்.

உறக்கம் அறியா உழைப்பு...
ஓய்வறியா ஓட்டம்
எமனையே எட்டி நிற்க வைத்தார்
கலைஞர்.

'பராசக்தி' கண்களைத் திறக்காததால்
வாழ்வைத் தேடி கல்யாணிகளும்,
கல்யாணிகளைத் தேடி பூசாரிகளும்
இன்னும் ஓடிக் கொண்டு தான்
இருக்கிறார்கள்!

இரையைத் தேடி
மான் ஓடுகிறது.
மானையே இரையாக்க
புலியும் ஓடுகிறது!

கொலம்பஸின் தேடுதல்
புதிய உலகில் முடிந்தது!

புத்தனின் தேடுதல்
ஞானத்தில் முடிந்தது!

'உன்னையே நீ அறிவாய்..' என்று
நமக்குள்ளேயே நம்மைத் தேடச்
சொன்னார் சாக்ரடீஸ்.

திரைகடலோடி
திரவியம் தேடச் சொன்னார்
ஔவை பிராட்டியார்

வாருங்கள்...
நாமும் ஓடலாம்.
ஓடுதலில் அறிவைத் தேடலாம்.
தேடுதலில் வெற்றி காணலாம்.

**– கி. இரகுநாதன்,** பெங்களூர்

# நதிக்கரை நாகரீகம்

வாழ்வியலை விதைத்தபடி நகர்ந்து சென்ற
நதிகளின் போராட்டம் களவாடப்படுகிறது.

பொருநை வழித் தமிழைக் கருணை இன்றிப்
புறந்தள்ளும் உலக வழித் தெருக்களின்
குடியிருப்புகளில் வௌவால்கள் சிறகடித்துக்
குதூகலிக்கின்றன.

உயிர்வாயுவை நிராகரித்த நீர்ப் படுக்கைகளில்
உறைந்திருக்கும் உதிரத் துணிக்கைகள்
விடுதலைக் கவிதைகளை வீரியமாகக் கிறுக்கியபடி
காலத்தை நகர்த்துகிறது.

80களின் பிற்பகுதியில் களனி கங்கையில்....
மாற்றம் வேண்டிக் களமாடிய
தனது இளைஞர்களை கொன்று வீசிய
சிங்களக் காவலர்கள்
முள்ளிவாய்க்கால் பெரு நெருப்பில்
புத்தசாசனத்தை புனிதமாக்குகிறார்கள்.

மண்ணுள் வேரோடுகின்ற செங்காந்தச் செடிகள்
நந்திக் கடல் உதிரத்தை உள்ளிழுத்தபடி
உறங்கிக் கிடக்கிறது
ஒரு கார்த்திகை நாளின் மழைக்காக.....

தடயங்கள் அழித்துச் செல்லும் பேரரசு
அலைகளின் புனிதப் புரட்டுகளையும்;
துரோகப் பூசாரிகளின் சுயநல
ஆராதனைகளையும் நம்பியபடி
ஏமாந்து கொண்டிருக்கிறார்கள்
நதிக்கரை நாடோடிகள்.

உருக்குலைந்த உடலங்களின் சிதைவுகளை
நினைவுறுத்திப் பயணித்துக் கொண்டிருக்கிறது
காலங் கடந்த நதி.

**கனகசபாபதி செல்வநேசன்**
அல்வாய், இலங்கை.



# மலைக்க வைக்கும் மலேசியா

**பகுதி – 11**

**மருத்துவர்.க.கலைவேந்தன்**

கடாரம் கொண்டான் என்று கேடா மாநிலத்தில் மலேசியாவில் இருக்கின்ற அந்த மாநகரை நோக்கி எங்களுடைய பயணத்தை தொடங்கினோம்... உண்மை யில் மெய்சிலிர்ப்பான ஒரு அனுபவமாக அது இருந்தது... சென்ற வருடம் ராஜராஜன் கால் பதித்த இலங்கையிலும் அதற்கு முன்பாகவே ராஜேந்திர சோழன் கால் பதித்த மலேசியாவிலும் என்னுடைய காலடித்தடங்களை நான் பதித்தது தமிழன்னை எனக்கு கொடுத்த மாபெரும் கருணை... இறைவன் எனக்கு கொடுத்த மாபெரும் வரம்... அந்த வகையில் மலேசியாவில் கேடா மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற கடாரம் கொண்டான் என்கின்ற பகுதி இப்பொழுது சிதலமடைந்து காணப்பட்டாலும் ஒரு காலத்தில் நமது ராஜேந்திர சோழன் காலடித்தடத்தை பதித்து வெற்றி கொண்ட இடம் பல்வேறு திருத்தலங்களை அந்த இடத்தில் நிர்மா ணித்து தெய்வ வழிபாடு செய்த இடம் என்பதை நினைத்து பார்க்கும் பொழுது எப்பொழுது அந்த இடத்திற்கு செல்வோம் என்ற எதிர்பார்ப்பும் ஆர்வமும் மேலோங்கி நின்றது... லங்காவியில் இருந்து புறப்பட்டு கேடாவில் உள்ள அந்த சுங்கப்பட்டாய் என்கின்ற அந்த இடத்திற்கு ராஜேந்திர சோழன் கால் பதித்த கடாரம் கொண்ட என்ற இடத்திற்கு உள்ளே சென்று காலடித்தடத்தை வைத்தவுடன் மிகுந்த மெய் சிலிர்ப்பு ஏற்பட்டது... பெரும்பாலான இடங்கள் சிதலமடைந்து காணப்பட்டாலும் கூட இன்றும் அந்தக் கோயிலின் பல்வேறு பகுதிகளை கோயிலின் அமைப்பை நம்மால் அழகாக காணமுடிகின்றது... அந்த அளவுக்கு அற்புதமாக எப்படி தஞ்சை ராஜராஜ சோழன் கோயில் கட்டி இருக்கிறாரோ அதைப்போல ராஜேந்திர சோழன் எப்படி கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டி இருக்கிறாரோ அதே மாதிரி தான் ஒரு கோயிலை கேடா மாநிலத்தில் கடாரம் கொண்டான் என்ற பகுதியில் நமது ராஜேந்திர சோழன் கட்டிருக்கின்றார்.. ராஜராஜசோழன் என்பவர் மிகச்சிறந்த ஒரு தலைவராக இருந்தாலும் கூட அவரைத் தாண்டி நமது ராஜேந்திர சோழன் மிகச்சிறந்த கப்பற்படையை வைத்திருந்த ஒரு மகா பெரும் அரசனாக வரலாற்றால் அறியப்படுகிறது. குறிப்பாக தமிழ் வரலாறு ராஜேந்திர சோழனின் திறமையையும் வீரத்தையும் ஆன்மிகத்தையும் மிகப் பெரும் அளவு பாராட்டுகின்றது பல்வேறு விதமான ஓலைச்சுவடிகளும் செப்பேடுகளும் அவருடைய வீரத்தையும் அவருடைய ஆன்மீக அருளையும் நமக்கு காட்டுகின்றன அந்த வகையில் ராஜேந்திர சோழனை பற்றி நாம் அறிந்து கொள்வது மிக மிக அவசியம்....

இராசேந்திர சோழன் (Rajendra Chola) சோழர்களின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவரும் தஞ்சை பெரிய கோவிலை கட்டியவருமான இராசராச சோழனின் மகனும், தென்னிந்தியாவின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவருமாவார். விசயாலய

சோழன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசு இராசேந்திரன் காலத்தில் அதன் பொற்காலத்தை அடைந்தது. சோழ மன்னர்களில்இராசேந்திரனுக்குஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற பெருமை வாய்ந்தவர். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் இராசேந்திர சோழன் ஏற்கனவே பரந்து விரிந்திருந்த சோழப் பேரரசின் பரப்பை மேலும் விரிவுபடுத்தினார். இவர் ஆட்சி செய்த பகுதிகள் தென் இந்தியா பகுதிகள் ஆன தற்போதைய தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கருநாடகா, கேரளம், தெலுங்கானா, சத்தீசுகர், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளும், தென் கிழக்கு ஆசியா நாடுகள் அனைத்தும் இவர் ஆட்சி காலத்தில் இருந்தது.

முதலாம் இராசேந்திர சோழன்
ஆட்சிக்காலம்
பொ.ஊ. 1012 - பொ.ஊ. 1044

பட்டம்
கோப்பரகேசரி வர்மன், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான்

தலைநகரம்
தஞ்சாவூர்
கங்கைகொண்ட சோழபுரம்

அரசி
திருபுவன மகாதேவியார்
முக்கோக்கிலான்
பஞ்சவன் மாதேவியார்
வீரமாதேவி
பிள்ளைகள்
இராசாதிராச சோழன்
இராசேந்திர சோழன் ஹுறு
வீர ராசேந்திர சோழன்
அருள்மொழிநங்கையார்
அம்மங்காதேவி
முன்னவன்
இராசராச சோழன்
பின்னவன்
இராசாதிராச சோழன்

தந்தை
இராசராச சோழன்
பிறப்பு
ஆடி மாதம் திருவாதிரை நட்சத்திரம்
இறப்பு
பொ.ஊ. 1044

மலேசியா காந்தி மண்டபம் முன்பு






கடாரம் கொண்டான் நினைவு மண்டபம்

இளவரசன் : இராசராசன் தன் தந்தையான இரண்டாம் பராந்தகன், தமையனான ஆதித்தன், சிற்றப்பனான மதுராந்தகன் ஆகிய மூவரும் ஆண்டு இறந்த பிறகு பட்டம் பெற்றவன் ஆதலின், அவன், தான் பட்டம் பெற்ற கி.பி. 985-லேயே முதியவனாக இருந்திருத்தல் வேண்டும். அதனால், அவன் பட்டம் பெற்ற காலத் திற்றானே அவன் மகனான இராசேந்திரன் வயது வந்த இளைஞனாக இருத்தல் கூடியதே ஆம். அதனாற்றான் இராசராசன் நான்காம் ஆண்டுக் கல்வெட்டில் (கி.பி. 988) 'இராசேந்திர சோழ தேவன்' குறிப்பிடப்பட்டுள்ளான்...

இராசராசன் ஏறத்தாழ 30 ஆண்டுகள் அரசாட்சி செய்துள்ளான். இராசேந்திரன் அந்தக் காலம் முழுவதும் தந்தையுடன் இருந்து பல போர்களில் ஈடுபட்டிருந்தான். எனவே, இராசேந்திரன் பட்டம் பெற்ற காலத்தில் ஏறத்தாழ 50 வயது உடையவனாக இருந்தானாதல் வேண்டும்.

சென்ற பகுதியிற் கூறப்பட்ட இராசராசன் ஆட்சியில் நடந்த போர் களில் எல்லாம் இளவரசனாக இருந்த இராசேந்திரற்குப் பங்குண்டு என்பது முன்னரே கூறப்பட்டதன்றோ? இராசேந்திரன் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் போர்த்திறத்திலும் அரசியலிலும் நன்கு பண்பட்டிருந்தான். இராசராசன் தன் ஒப்பற்ற மகனான இராசேந்திரனிடமே தனது முதுமைப்பருவத்தில் அரசியலை ஒப்புவித்தான். அவன் உயிருடன் இருந்த போதே கி.பி.1912-இல் இராசேந்திரற்கு முடிசூட்டினான் என்பது ஐயமற விளங்குகிறது. என்னை? இராசராசன், தன் மகனான இராசேந்திரனது மூன்றாம் ஆட்சி ஆண்டில் ஒரு தேவதானம் கொடுத்தான் என்று திருமுக்கூடல் கல்வெட்டுன்கூறுதலால் என்க.

நாட்டு நிலை : இராசேந்திரன் பட்டம் பெற்ற காலத்தில் (கி.பி. 1012-ல்) சோழப் பேரரசு வடக்கே கிருஷ்ணைதுங்கபத்திரை வரை பரவி இருந்தது. சோழநாடு போகப் புதிதாக வென்ற நாடுகளைத் திறமுற ஆள நம்பிக்கையுடைய அதிகாரிகள் இருந்தனர். சில நாடுகளில் பழைய அரசர்களே ஆட்சி புரிய விடப்பட்டிருந்தனர். நன்றாகப் பயிற்சி பெற்ற 'தெரிந்த' படையினர் ஆங்காங்கு நிறுத்தப்பட்டிருந்தனர். இங்ஙனம் புதிய நாடுகளைப் படைப் பலமும் அரசியல் அறிவும் பெற்ற அதிகாரிகள் ஆண்டு வந்தமையின், பேரரசன் கவலை இன்றிப் பிற நாடுகளை வெல்ல வசதி பெற்றிருந்தான்; பேரரசிலும் அமைதி நிலவி இருந்தது.

இளவரசன் - இராசாதிராசன் : இராசராசன் தன் ஆட்சியின் இறுதி யிற்றான் இராசேந்திரற்கு முடிசூட்டி னான். ஆனால், இராசேந்திரன் தன் ஆட்சியின் ஏழாம் ஆண்டிலேயே (கி.பி.1018-இல்) தன் மகனான இராசகேசரி என்பாற்கு முடிசூட்டி வைத்தான். அது முதல் தந்தையும் மைந்தனும் ஏறத்தாழ 25 ஆண்டுகள் சேர்ந்தே அரசு புரிந்து வந்தனர் என்பது, இராசாதிராசன் மெய்ப் புகழால் நன்குணரலாம். இப் பழக்கம்

போற்றத்தக்கதும் புதியதும் ஆகுமன்றோ? நாட்டின் பெரும் பகுதியை இராதிராசனே ஆண்டு வந்தான். திரு மழபாடியில் கிடைத்த இராசாதிராசனது 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 'தன் தந்தையின் வெண் கொற்றக்குடை நிழலைப்போல இராசாதிராசன் குடை இருந்தது. வடக்கே கங்கையையும் தெற்கே ஈழத்தையும் மேற்கே மகோதையையும் கிழக்கே கடாரத்தையும் கொண்ட இராசேந்திரன் பேரரசை இராசாதிராசனே ஆண்டுவந்தான்,' என்று கூறுகிறது.. மகன் தன் தந்தையின் ஆட்சியிலேயே முடிசூடப் பெற்றது சிறப்பு: அதனுடன் தந்தையுடனே இருந்து ஏறத்தாழ 26 ஆண்டுகள் ஆட்சி அறிவு சிறக்கப்பெற்றமை மிக்க சிறப்பு. இவ்வரிய செயல், இராசேந்திரன் இந்திய அரசர் எவரும் செய்யாத பெரியதொரு அரசியல் நுட்பம் வாய்ந்த வேலை செய்தான் - சிறந்த அரசியல் அறிஞன் என்பதை மெய்ப்பித்துவிட்டது. இராசாதி ராசன் முதல் மகனல்லன். இராசேந்திரன் அவனை இளவரசன் ஆக்கிப் பேரரசை ஆளும் பொறுப்பை ஒப்படைத்தான் எனின், இந்த இளவல் ஏனைய மக்களினும் பல்லாற்றானும் சிறப்புப் பெற்றவனாக இருந்திருத்தல் வேண்டும் அன்றோ? இங்ஙனம் அவரவர் ஆற்றல் அறிந்து அவரவர்க்கேற்ற அரசப் பதவி அளித்த பெருமை இராசேந்திரன் ஒருவர்க்கே உரியதாகும், என்னல் மிகையாகாது. தென் இந்திய வரலாற்றிலே இது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இப்படி, மண்டலங்களை ஆண்டவர் தம் பேரரசன் மெய்ப்புகழைக் கூறியே தம் பெயரில் கல்வெட்டுகள் விடுதல் மரபு. ஆயின் ஆட்சி ஆண்டு அவரதாகவே இருக்கும். இராசேந்திரன் தன் மக்களிடமும் தன் நம்பிக்கைக்குரிய பிற அரசியல் தலைவர்களிடமுமே மண்டலம் ஆளும் பொறுப்பை விட்டிருந்தான். பேரரசன் தன் மக்களையே மண்டலத் தலைவர்கள் ஆக்கி வைத்தமையால், பேரரசு குழப்பம் இன்றிச் செவ்வனே நடைபெற்று வந்தது.

போர்ச் செயல்கள் : இராசேந்திரன் காலத்துப் போர்ச் செயல்கள் மூன்று வகையின. அவை (1) இவன் இளவரசனாக இருந்து நடத்தியவை, (2) அரசனாக இருந்து நடத்தியவை, (2) இவன் காலத்தில் இளவரசனான இராசாதிராசன் நடத்தியவை எனப்படும். முதற் பிரிவு இராசராசன் வரலாறு கூறும் பகுதியிற் காணலாம். இரண்டாம் பகுதியை இங்கு விளக்குவோம்.

இடைதுறை நாடு : இது கிருஷ்ணைக் கும் துங்க பத்திரைக்கும் இடைப்பட்ட சமவெளி. அஃதாவது இப்போது 'ரெய்ச்சூர்' எனப்படும் கோட்டம் என்னலாம். இஃது 'எடதொறே இரண்டா யிரம்' என்று கன்னடர் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது.

சோழப் பேரரசின் கடல் பயணத்தடங்கள்





கடாரம் கொண்டான் கோவில்

கொள்ளிப் பாக்கை : இஃது ஐதரா பாத்துக்கு நாற்பத்தைந்து கல் வடகிழக்கே உள்ளது. இதன் இன்றைய பெயர் ‘கூல்பாக்’ என்பது. இது ‘கொள்ளிப் பாக்கை ஏழாயிரம்’ எனப்படும். இந்நாடு 13-ஆம் நூற்றாண்டுவரை சிறப்புற்றிருந்தது.இதன் மதில் சுள்ளிமரங்கள் நிறைந்தது. இஃது ஆறாம் விக்கிரமாதித்தனின் காலத்தில் அவனுடைய மகனான மூன்றாம் சோமேசுவரனால் ஆளப்பட்டு வந்தது.

மண்ணைக் கடக்கம் : இஃது இராட்டிர கூடர்க்குக் கோநகராக இருந்த இடம். இது, பிறகு வந்த மேலைச் சாளுக்கியர்க்கும் சிறிதுகாலம் தலை நகரமாக இருந்தது. வடக்கே பரமார அரசரும் தெற்கே சோழரும் இதனைத் தாக்கத் தாக்க, சாளுக்கியர் தமது தலைநகரைக் கலியான புரத்துக்கு மாற்றிக் கொண்டனர். மண்ணைக்கடக்கம் இப்பொழுது மான்ய கேடம் எனப்படும். இதன் மதி: கடக்க முடியாத வன்மை உடையது.

இந்நாடுகளை இராசேந்திரன் வென்றான் என்று இவனது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. திருவொற்றியூர் மண்டபம் ஒன்றுக்கு ‘மண்ணை கொண்ட சோழன்’ என்னும் பெயர் இடப்பட்டது.

ஈழப்போர் : இராசராசன் காலத்தில் நடந்த ஈழப்போரில் தோற்றோடி ஒளிந்த ஐந்தாம் மஹிந்தன் என்னும் ஈழ அரசன், சில ஆண்டுகள் கழித்துப் பெரும் படை

பேராசிரியர் மொரிசியசு உமா அழகிரி உடன் கடாரம் கொண்டானில்



திரட்டிச் சோழர் ஆட்சிக்குட்பட்ட ஈழப்பகுதியை மீட்க முயன்றான். அதைக் கேள்வியுற்ற இராசேந்திரன் பெரும்படையுடன் சென்றான்; போரில் வெற்றி கொண்டான். ஈழத்து அரசனுக்கும் அவன் மனைவியர்க்கும் உரிய முடிகளையும் அணிகலன்களையும் பொன் மணிகளையும் பிற சின்னங்களையும் கைப்பற்றி மீண்டான்; இவற்றுடன் ஒரு நூற்றாண்டுக்கு முன் இராசசிம்ம பாண்டியன் விட்டிருந்த மணிமுடி முதலியவற்றையும் கைப்பற்றினான். இப்போர் நிகழ்ச்சி கி.பி. 1017-18-இல் நடைபெற்றதாதல் வேண்டும். சோழ சேனைகள் இலங்கையைச் சூறையாடின, தோல்வியுற்ற மஹிந்தன் மீட்டும் காட்டிற்கு ஓடிவிட்டான்' என்று மகாவம்சம் கூறுகிறது. ஆயினும், அவன் எவ்வாறோ சோணாட்டிற்குப் பிடித்துச் செல்லப்பட்டான். அங்கு அவன் சோழர்க்கு முற்றும் பணிந்துவிட்டான் அவன் சோழ நாட்டிலே கி.பி. 1029-இல் இறந்தான். இப்போரினால் ஈழநாடு முற்றிலும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டு விட்டது. இராசேந்திரன் கல்வெட்டுகள் இலங்கையிற் கிடைத்துள்ளன



சோழர்கால அடுப்பு



கடாரம் கொண்டான் யாகசாலை

கங்கை கொண்டான் : இராசேந்திரனது 41-ஆம் ஆண்டில் இவனது வட நாட்டுப் படையெடுப்புக் கூறப்பட்டுள்ளது. எனவே, இவன் கி.பி.1023-இல் வடநாடு நோக்கிச் சென்று மீண்டிருத்தல் வேண்டும். இப் படையெடுப்பில் இராசேந்திரனது சேனைத் தலைவன் பல நாடுகளை வென்றான்; இராசேந்திரன் அத்தலைவனைக் கோதாவரிக்கரையில் சந்தித்தான். சேனைத் தலைவன் முதலில் சக்கரக் கோட்டத்தை வென்றான். அந்த இடம் 'மத்திய பிரதேசத்தில்' உள்ள பஸ்தர் சமஸ்தானத்தின் தலைநகரமான இராசபுரத்திற்கு 12 கிமீ தொலைவில் உள்ள 'சித்திரகோடா' என்னும் ஊராகும்... இந்தப் பகுதியிற்றான் மதுரமண்டலம் (ஒரிஸ்ஸாவில் உள்ள 'மதுபன்' என்பது), நாமனைக்கோலம், பஞ்சப் பள்ளி ஆகிய இடங்களும் இருந்திருத்தல் வேண்டும். (ஆதிநகரில் இந்திராதனை வென்று கோசல நாட்டையும் காடுகள் செறிந்த ஒட்டரதேசத்தையும் கைக் கொண்டான். திருவாலங்காட்டுச் செப்பேடுகள், இராசேந்திரன் ஒட்டர தேசத்து அரசனைக்கொன்று, அவன் தம்பியிடம் பன்மணிக்குவியலைத் திறை கொண்டான் என்று குறிக்கின்றன. பிறகு, இவன், தன்மபாலனது தண்டபுத்தி இரணசூரன் ஆண்ட தென்லாடம்,

கோவிந்தசந்திரன் ஆண்ட கிழக்கு வங்காளம் இவற்றை முறையே அடைந்தான். தண்டபுத்தி என்பது ஒட்டர தேசத்துக்கும் வங்காளத்துக்கும் நடுவில், சுவர்ணரேகையாற்றுக்கு இருகரையிலும் உள்ள நாடு. இது படைகாப்பாக ஒரு தலைவனுக்குக் கொடுக்கப்பட்டு அவனால் நுகரப்பட்ட நிலம்' எனக் கொள்ளலாம். வங்காளத்தில் ஒரு பகுதி ராடா எனப்பட்டது. அதுவே கல்வெட்டு குறிக்கும் லாட தேசம் ஆகும். இம்மூன்று நாடுகளையும் ஆண்ட அரசர்கள் ஏறத்தாழ வரலாற்றில் இடம்பெற்றவரே ஆவர். ஆதலின், இவர்கள் பெயர்கள் பொய்ப்பெயர்கள் அல்ல. மகிபாலன் வங்க நாட்டை ஆண்டுவந்தான். அவன் சோழர் தானைத் தலைவனது சங்கொலிக்கு அஞ்சிப்போர்க்களம்விட்டுஓடிவிட்டான். உடனே சோழர் சேனைத் தலைவன் அவ்வரசனுடைய யானைகளையும் பெண்டிர் பண்டாரங்களையும் பற்றிக் கொண்டு கங்கைக்கரையை அடைந்தான்.

தோல்வியுற்றவேந்தர்தலைகளில்கங்கைநீர் கொண்டுவரப்பட்டது இது மிகைபடக் கூறலோ, உண்மையோ, தெரியவில்லை. பெருமகிழ்ச்சியோடு திரும்பிவந்த சேனைத் தலைவனை இராசேந்திரன் கோதாவரி யாற்றங்கரையிற் சந்தித்து மகிழ்ந்தான்.இந்த வட நாட்டுப் படையெடுப்பில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கழிந்திருக்கலாம். இராசேந்திரன் தான் வென்ற வட நாடுகளை ஆள விரும்பவில்லை. அதற்காக அவன் படையெடுத்திலன்; தான் புதிதாக அமைத்த கங்கை கொண்ட சோழபுரத்தையும் சோழகங்கம் என்னும் ஏரியையும் கங்கை நீரால் தூய்மை ஆக்க விரும்பியே படைகளை வடக்கே அனுப்பிக் கங்கை நீரைக் கொண்டுவர முயன்றான். வேற்றரசன் படை தன் நாட்டு வழியே செல்லப் புதிய நாட்டினர் இடந்தரார் ஆதலாலும், வடவரை வென்ற புகழ் தனக்கு இருக்கட்டுமே என இராசேந்திரன் எண்ணியதாலுமே இப்போர்கள் நிகழ்ந்தனவாதல் வேண்டும்.

இராசேந்திர சோழர் போரில், கோலராமமா கோயில், கோலார் இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில் சோழ நாடு; இந்தியா இலங்கை, மாலத்தீவு, கடாரம், சிரீவிசயம், மலேயா (சிங்கப்பூர்-மலேசியா), சுமத்ரா, கம்போடியா, இந்தோனேசியா, மியான்மர், வங்க தேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப் பெரிய நிலப்பரப்பாக இருந்தது. இராசேந்திர சோழனே முதன் முதலில் அயல்நாட்டிற்குப் பெரும் படை எடுத்துச் சென்ற முதல் தமிழ் மன்னன் ஆவார். மகிபாலனை வென்று வங்காள தேசத்தை சோழநாட்டுடன் இணைத்தவர்; அதன் வெற்றியைச் சிறப்பிக்கவே கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதிய தலைநகரத்தை உருவாக்கித் தன்னுடைய ஆட்சியை அங்கிருந்து நிர்வகித்தார்.அங்கே சிவபெருமானுக்காக இராசேந்திரன் கட்டிய கற்கோயில் சோழர் காலக் கட்டிடக்கலைக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இன்றளவும் விளங்கி வருகிறது. இந்தியாவில் வாயு கடவுளுக்கு கட்டப்பட்ட ஒரே கோயிலான, ஆந்திரா வின் சித்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காளகத்தி கோயில் இராசேந்திர சோழ னால் கட்டப்பட்டது.

சோழப் படைத்தலைவன் இராசேந் திரன். இராசேந்திரன் இளவரசனாக இருந்த பொழுதே சோழர் படைகளுக்குத் தலைமை வகித்து மேற்குப் பகுதிகளில் போர்களை நடத்தியவன். தொடர்ந்து வேங்கி, கங்கை மண்டலங்களுக்கு மாதண்ட நாயகனாக அமர்த்தப்பட்டான். 'பஞ்சவன் மாராயன்' என்ற பட்டமும் இவனுக்குக்கொடுக்கப்பட்டது.'மும்முடிச் சோழனின் களிறு' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றிருந்த இராசேந்திரன்,

கொங்கணம், துளுவம் முதலான நாடுகளை வென்று கைப்பற்றியதோடு, சேரனை அவனுடைய மலை நாட்டை விட்டு ஓடும்படி செய்து, தெலுங்கரையும் இராட்டிரரையும் வென்றான்.

இணை அரசனாக நிர்வகித்தல்

இராசராச சோழரின் ஆட்சிக் காலத்திலேயே (பொ.ஊ. 1012), இராசேந்திர சோழன் இணை அரசனாகப் பொறுப்பேற்றுக் கொண்டான். இராசராசரின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வேங்கி மற்றும் கலிங்கப் போர்களில் இராசேந்திர சோழன், இராசராச சோழனின் படைகளுக்குப் பொறுப்பேற்று வெற்றியைத் தேடித் தந்தான்.

ஆனால், நம் தமிழகத்தை ஆண்ட மாமன்னர்கள் மீது மாறாத அன்பு கொண்ட தகைசால் சான்றோர் பெருமக்கள் மட்டுமே என்றும் அவரைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். ‘ராஜேந்திரன்’ என்னும் அம்மாமன்னரின் பெயரை இன்றும் தமிழ்நாட்டு மக்கள், தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்வதில் பெருமிதம் கொண்டுள்ளது பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

இவரது காலத்தில் ‘கங்கை கொண்ட சோழபுரம்’ கிழக்கு ஆசியாவின் முக்கியத் தலைநகராக விளங்கி, இத்துணைக்கண்டத்தின் அமைதியையும் போரையும் இந்த ஊர் தான் முடிவு செய்தது என்பதை நினைக்கும்போது ஏற்படும் பெருமையால் நம் மனம் குதூகலிக்கின்றது.

ராஜேந்திர சோழ மன்னர் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள நாட்டேரி பிரம்மதேசம் என்ற ஊரில் இறந்தார் என்பதை இந்த ஊரிலுள்ள ‘ரீசந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள அவருடைய மகன் ராஜாதிராஜனின் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. (தெ.இ.க.ம. 30 எண் 184)

ராஜேந்திர சோழரின் இறுதிக் காலத்தில் அவருடைய 32 ஆம் ஆட்சியாண்டில் ஒரு கல்வெட்டு எடுக்கப்பட்டுள்ளது. திருவாமாத்தூரிலுள்ள இக் கல்வெட்டு 9.8.1044 வரை இவர் உயிரோடு இருந்துள்ளதைத் தெரிவிக்கின்றது.

ராஜேந்திரன் இறந்தவுடன் இவருடைய சிதையில் இவரது மனைவி வீரமாதேவியார் உடன்கட்டை ஏறி உயிர் துறந்தார் என்பதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் நீங்கலாக எஞ்சிய இடங்கள் தற்போது அகழ்வாராய்ச் சிக்குரிய இடமாக மட்டுமே உள்ளது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் கங்கைகொண்ட சோழபுரம் மாளிகையின் கற்கள் காவிரிக் கரைகளைப் பலப்படுத்தவும் படித்துறையாகவும் பயன்படுத்தப்பட்டு நம் பாரம்பரியங்களையும் சேர்த்துப் புதைத்துவிட்டனர். கல்லினால் வடிக்கப்பட்ட இந்த ஆவணங்கள் காவிரி நீர் மோதும் படிகளாக மாறியது மிகப்பெரிய வரலாற்று அவலம்!

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் வந்த விஜயநகர மன்னர்களும் சோழப் பேரரசின் வரலாற்றுத் தொடர்பினைத் துண்டித்து தங்களது சாம்ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்வதில் அக்கறை காட்டியதால் அழிந்த கருவூலங்கள் ஏராளம்.

ஆனாலும், எஞ்சியிருக்கும் கல்வெட்டுகளே மாமன்னர் ராஜேந்திரரின்



மலேசியாவில் மகாத்மா காந்தியுடன்

பெருமைகளை நமக்கு எடுத்துக் கூறும் ஆவணங்களாக உள்ளன. நம் மாமன்னர் ராஜேந்திரரை அனைவரும் படித்து உணர வேண்டியது அவசியமென்பதோடு நம் வருங்கால சந்ததியினரும் இவரது பெருமைகளை உணரும் வண்ணம் ராஜேந்திர சோழர் குறித்த செய்திகள் பாடநூல்களில் அதிகமாக இடம் பெறச் செய்யவேண்டும்.

இவரது அழிந்த வரலாற்றின் எஞ்சிய பகுதிகளை மீட்டெடுத்தால் சைவ சமயத்தின் பெருமையையும் சோழ மன்னகளின் ஆளுமையையும் மேலும் நம்மால் அறிய முடியும்.

கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பர கேசரிவமன் ராஜேந்திர சோழரின் பிறந்த நாளினை இச்சோழ மன்னர் திருப்பணி செய்துள்ள அனைத்து சிவாலயங்களிலும், தமிழக அரசு கொண்டாட வேண்டும் என்பது அனைவரது உள்ளக் கிடக்கையாகும்.

நம் எண்ணம் நிறைவேற கங்கை கொண்ட சோழபுரம் பிரக தீஸ்வரப் பெருமானும் மாமன்னர் ராஜேந்திரரும் அருள்பாலிப்பார் கள் என்பது உறுதி!....

கடாரம் கொண்டானில் ராஜேந்திர சோழனுடைய நினைவுகளை ஆரவார்த்துக் கொண்டே அந்த பகுதிகளை சுற்றிப் பார்த்துவிட்டு அங்கே இருக்கின்ற அருங்காட்சியகத்தில் அந்த காலத்து பல்வேறுவிதமான பொருட்களை எல்லாம் பார்வையிட்டு விட்டு ராஜேந்திர சோழனின் வரலாறு பற்றி சற்று சிந்தித்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து எங்கள் பயணத்தை தொடங்கினோம்... அந்தப் பகுதியிலேயே எப்படி தமிழ் மன்னனாக நம் உள்ளங்களில் இடம் பிடித்த ராஜேந்திர சோழனுடைய நினைவிடம் இருக்கின்றதோ, அப்படி இந்த தேசத்தின் தந்தையாக இந்திய தேசத்தின் தந்தையாக இருக்கக்கூடிய மகாத்மா காந்தி அவர்களுக்கான ஒரு நினைவு சிலை அங்கு எழுப்பப்பட்டிருக்கின்றது.. அங்கு நம்முடைய தமிழ் ஆர்வலர்கள் ஒரு அமைப்பை ஏற்படுத்தி பல்வேறு விதமான நிகழ்வுகளை செய்து கொண்டி

ருக்கின்றார்கள்... அந்த இடத்திற்கு சென்று மகாத்மா காந்தி சிலை முன்பாக நின்று அவருக்கு நம்முடைய வணக்கத்தை செலுத்தி அங்கே புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம்...

மலேசியாவில் உள்ள சுங்கை பெட்டானி நகரம், மகாத்மா காந்தியின் நினைவாக ஒரு சமுதாயக் கூடத்தை அதன் ஆரம்ப கட்டுமானத்திற்குப் பிறகு 68 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கட்டியுள்ளது. காந்தியின் அகிம்சைத் தத்துவத்தை நினைவு கூறும் வகையில் 1955 ஆம் ஆண்டு சுங்கைப்பேட்டையில் உள்ள தமிழ் பேசும் மக்களால் இந்த மண்டபம் முதன்முதலில் கட்டப்பட்டது. கெடா மன்னரால் திறக்கப்பட்ட புதிய காந்தி நினைவு மண்டபத்தில் 26 அடி உயர வெண்கலப் பூசப்பட்ட காந்தியின் சிலை தென்கிழக்கு ஆசியாவிலேயே மகாத்மாவின் மிக உயரமான சிலையாக உள்ளது. இந்த திட்டம் மலேசியா மற்றும் இந்திய அரசாங்கங்களின் கூட்டு முயற்சியாகும்...

ராஜேந்திர சோழனின் கடாரம் கொண்டானையும் மகாத்மா காந்தியின் நினைவிடத்தையும் பார்த்துவிட்டு மன திருப்தியோடு மலேசியாவின் மிக முக்கிய மான அடையாளமாக இருக்கின்ற கோலாலம்பூர் இரட்டை கோபுரத்தையும் பத்து மலை முருகன் கோவிலிலும் பார்ப்பதற்காக எங்களுடைய பயணத்தை தொடங்கினோம்....

(தொடரும்)



## உன்னதப் பெருநாள் ரமலான்!

மதங்களைக் கடந்து மனிதம் தழைக்க
மாநிலம் முழுதும் நோன்பு
அதனதன் உரிமை அழியா வகையில்
ஆருயிர் பெறுகிற மாண்பு!

உலகம் முழுதும் உதவும் நிகழ்வே
உன்னத பெருநாள் ரமலான்
நிலவும் அன்பை நித்தியம் போற்ற
நீயும் கூட வரலாம்!

கொடுக்கும் கலைகள் குவலய மழியா
கொடைநாள் போற்ற வாரீர்
படைத்த இறையை பணிவுடன் வணங்கி
பங்களிப் பதனைத் தாரீர்!

இஸ்லாம் இந்து ஏசு கிறிஸ்து
எல்லா மதமும் ஒன்று
அஸ்லாம் என்றால் அரபு மொழியே
அதுவும் விகற்ப மன்று!

பொன்மணிதாசன்

## ஐக்கூ கவிதையும் அமுதபாரதியும் : சிறு குறிப்பு

***போர்***
***வென்றது விதை***
***மண்ணைப் பிளக்கும் முளை***

*அமுதபாரதி*
*('ஐக்கூ அந்தாதி' (1992) நூலில் இருந்து)*

*இந்தக் கவிதையில் கவிஞர் மண்ணுக்கும் விதைக்கும் இடையிலான தொடர்பைப் 'போர் ' என்கிறார்.*

*அந்தப் போரிலே வென்றது 'விதை' என்கிறார்.*

*மண்ணைப் பிளந்து வரும் முளையை 'வெற்றி 'என்கிறார்.*

*கவிஞரின் அற்புதமான சிந்தனை.*

***காற்றைப் பிடிக்க***
***கைகளை இறுக்கி மூடினேன்***
***அடடே! காற்றுக்குள் கை!***

*அடடே ! அமுத பாரதியின் அற்புதமான கவித்துவம்.*

*தமிழில் ஹைக்கூ கவிதை எழுதும் வடிவம் தற்போது மாறினாலும் கவிஞர் அமுதபாரதியின் ஹைக்கூ கவிதைகள் தமிழ் ஹைக்கூ கவிதை வரலாற்றில் முதலிடம் வகிக்கின்றன.*

*தமிழில் முதல் முதலில் 'புள்ளிப் பூக்கள்' என்ற ஹைக்கூ தொகுப்பை 1984 ஆம் ஆண்டு வெளியிட்டார்.*

*அதனைத் தொடர்ந்து ' காற்றின் கைகள்' என்ற ஹைக்கூ தொகுப்பு நூலையும் வெளியிட்டார்.*

*'புள்ளிப் பூக்கள்' என்ற தொகுப்பில் இடம் பெற்ற கவிஞர் அமுதபாரதியின்*

***அந்தக் காட்டில்***
***எந்த மூங்கில்***
***புல்லாங்குழல்?***

*என்ற கவிதை எல்லோராலும் வியந்து பாராட்டப்பட்ட கவிதையாகும்.*

*தமிழ் ஹைக்கூ கவிதை வரலாற்றில் உதாரண ஹைக்கூ கவிதையாகவும் இந்தக் கவிதை அமைந்துள்ளது.*

*ஹைக்கூ என்பதை தமிழில் ஐக்கூ*

*என்று கூறுவது தொடர்பிலும் அவர் ஒரு விளக்கத்தை தந்துள்ளார்.*

*சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் கருத்தை உள்ளடக்கியப் பெயரே 'ஐக்கூ' என்கிறார்.*

*ஐக்கூ என்பதில் பகுதியாகிய 'ஐ' கடுகையும் , விகுதியாகிய 'கூ' பூமியையும் குறிக்கும் என்கிறார்.*

*'க்' என்னும் ககர ஒற்று மிகுந்து 'ஐக்கூ ' ஆயிற்று என்கிறார்.*

*அதாவது கடுகளவு உள்ள சிறிய பாடலில் நிலத்தளவு பெரிய பொருளைக் காண முடியும் என்பதால் 'ஐக்கூ' என்கிறார் கவிஞர் அமுத பாரதி.*

*தமிழில் சிற்றிலக்கிய வடிவங்களில் ஒன்றான அந்தாதி வடிவத்தையும் ஐக்கூவையும் இணைத்து நூறு கவிதைகள் கொண்ட 'ஐக்கூ அந்தாதி' என்ற நூலை தமிழில் முதன் முறையாக வெளியிட்டவர் அமுதபாரதியாவார்.*

*அந்தாதி தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. ஒரு பாடலின் இறுதி எழுத்தோ ,அசையோ ,சீரோ,சொல்லோ, அடியோ அடுத்த பாடலின் தொடக்கமாக அமையும்படிப் பாடுவது அந்தாதி எனப்படும். கடைசிப் பாடலின் முடிவு முதல் பாடலின் தொடக்கமாக இருக்கும்.*

*அந்த அடிப்படையில் கவிஞர் அமுத பாரதியின் ஐக்கூ அந்தாதியில்*

*முதல் கவிதை*

**உலகம் மகிழ்ந்தது**
**‘உயிரினம் என்னுள்‘ என்று**
**‘உம்‘மென்று பார்த்திருக்கும் விண்**

*நூறாவது கவிதையான இறுதிக்கவிதை*

**கிளைப் பரப்பும் பெண்மை**
**கோடியாய் நலம் கொடு**
**உன்னைச் சுற்றி வாழ்த்தும் உலகு**

*‘உலகம் ‘என்று ஆரம்பித்து ‘உலகு‘ என்று முடிக்கிறார்.*

*தமிழில் மரபுக் கவிதைகள் புதுக்கவிதைகள் என்று ஏராளமான கவிதைகளை எழுதிய கவிஞர் அமுத பாரதி அவர்கள் அண்மையில் இடம் பெற்ற முகநூல் கவியரங்கம் ஒன்றில் ‘நான் பல வகையான கவிதைகள் எழுதி உள்ள போதும் எனக்கு ஹைக்கூ கவிதைகள் எழுதுவதே பெரும் விருப்பம்‘ என்று கூறினார்.*

*அண்மைக்காலமாக அமுத பாரதி எழுதும் ஹைக்கூ கவிதைகள் ஆரம்ப கால அவரின் ஹைக்கூ கவிதை வடிவத்தை விட தற்போது செம்மைப்படுத்தப்பட்ட வடிவத்தில் எழுதி வருகிறார்.*

*அத்தகைய கவிதைகளில் சில:*

**குடிக்க முடியாமல்**
**பறக்கும் குருவி**
**கொட்டும் அருவி**

**மழையின் காரணம் புரிகிறது**
**மரக்கிளைகள் யாவிலும்**
**பறவை எச்சம்**

**அலைகளில் நனைந்து**
**திரும்பியப் பாதங்களில்**
**ஒட்டிக் கொள்கிறது மணல்**

**மின்மினிகள் உலவும் இரவு**
**படுத்தபடி கவனிக்கும்**
**கூட்டுக்குள் குருவிகள்**

**பனிக்குளிரில் தண்டவாளங்கள்**
**சூடேற்றிச் செல்லும்**
**தொடர் வண்டி**

**குறையுமா கடவுள் உயரம்**
**படக்கடையில்**
**பேரம் பேசும் பக்தர்**

*இவரின் இத்தகைய கவிதைகள் தற்போது தமிழில் ஹைக்கூ கவிதைகளை எழுதி வருகின்ற கவிஞர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்துகின்றன.*

*ஓவியக் கவிஞர் அமுத பாரதியிடமிருந்து மேலும் பல ஹைக்கூ கவிதைகளை எதிர்பார்க்கின்றோம்*

**சோ. ஸ்ரீதரன்**
இலங்கை



# அகம் தொடும் அமுதம்

அகத்தைத் தொட்ட அமுதம் எதுவோ
அழகுத் தமிழைக் கூறிடுவேன்
இகத்தில் சிறந்தே விளங்கி நிற்கும்
என்றும் உயர்வாம் எந்தமிழே
வகையாய்ப் பாட்டும் தொகையும் வழங்க
மகிழ்ந்தேன் சங்கத் தமிழமுதைத்
தகைசால் அகமும் புறமும் இயம்ப
சகலோர் வியக்கும் தேமதுரம்

என்னைக் கவர்ந்த எழிலாம் தமிழும்
எங்கும் பரவி மணக்குதம்மா
இன்றும் படிக்கத் திகட்டா அமுதம்
இனிய மொழியாய் வழங்குதம்மா
நன்றாய் நிறுத்தி நகரா தென்றும்
நானி லத்தை ஆளுதம்மா
பொன்றாப் புகழாய்ப் புதுமை கண்டே
பொன்னாய் மிளிர்ந்தே ஒளிருதம்மா

வண்டாய்ச் சுற்றி மனமும் விரும்பும்
மணக்கும் பக்தித் தேவாரம்
செண்டாய் மலர்ந்த பனுவல் கேட்கச்
செவியும் இனிக்கும் தேனாகப்
பண்டு தொட்டே படிக்க வைக்கும்
பாடப் பாட வாய்மணக்கும்
கண்டார் கேட்டார் வசியம் செய்யும்
கண்கள் கசிய மனம் நெகிழும்

சைவம் வைண வமும்தாம் தழைக்கத்
தனித்தே எழுந்த ஆரங்கள்
மெய்யை உருக்கி நின்ற தம்மா
மேன்மை கொண்டே இலங்குதம்மா
கைகள் கூப்பி வணங்கு தம்மா
கருணை பூக்கச் செய்யுதம்மா
தைக்கும் பக்திப் பாசு ரங்கள்
தமிழைப் பாட உருகுதம்மா



பாப்பாப் பாடல் பாடிச் சென்றான்
பாங்காய் மனத்தில் வந்தமர்ந்தான்
தோப்பாய்ச் செறிந்த பாக்கள் தந்தான்
தொழுது வணங்கி அகம் மகிழ்ந்தேன்
யாப்பாம் சிந்து மயக்க வைக்கும்
யாரும் கேட்கத் தமைமறக்கும்
கோப்பாய் அளித்தான் கொண்டான் விரட்டி
குடிமை காத்தான் திறம்படத்தான்

குடும்ப விளக்கை அமுதம் என்பேன்
குழந்தை குட்டி பேணிடுவாள்
இடும்பை இல்லா இவளின் வாழ்வும்
இங்கோர் புரட்சிக் காவியமாம்
அடுப்பு ஏற்றும் அழகும் அதையே
அழகாய் விளக்கும் காட்சிகளும்
துடுப்பாய் மனத்தின் கடலில் ஆட
துயரும் நீங்கி இன்புறுமே

இதயம் தொட்டார் வைர முத்து
இதுவ ரைநான் இன்னமுதாம்
உதயம் கண்ட தண்ணீர் தேசம்
உலகின் உண்மை உரைத்திடுமே
நதியின் ஓடம் எல்லார் மனத்திலும்
நகரா தென்னை இழுத்திடுதே
பதித்த முத்தாம் கவிரா சனையும்
பாதம் தொட்டே வணங்கிடுவேன்

எதையும் நானும் சொல்ல எதைத்தான்
இங்கே நானும் விட்டுவிட
அதையும் இதையும் கூற விழைந்தேன்
அகத்தில் தமிழும் இனிக்குதம் மா
சதையாம் பழத்தின் சாறைப் போலச்
சலிக்கா வண்ணம் சுவைக்குதம்மா
விதைத்த மணியாய் விளைந்து நிற்க
விரைந்தே எடுத்து நிறைக்குதம்மா

**பாவலர்மணி தென்றல் கவி**

# கொதிக்கும் நட்சத்திரங்கள்

காம இச்சையை
கொடூரமாய் கக்கும்
அவர்களின் குறிகளிடமிருந்து
தப்ப முடியாமல் தத்தளிக்கிறது

கள்ளிப்பாலிடம் இருந்து
தப்பிப் பிழைத்த
அந்தக் கூட்டம்

பொம்மைக் கரங்களோடு
வீதி உலாப் போகும்
பிஞ்சு தேவதைகளின்

முதுகின் பின்னே
மிக நுண்ணியதாய்
முளைக்கத் தொடங்கியிருந்த
கனவுச் சிறகுகள்

காரணமறியாமலேயே
அவர்களின் காமத் தீக்குள்
கருகிய பிறகு

நிகழ்வது என்ன என்று
எதுவும் புரியாமல்

உயிரோடு அடிவயிற்றைக் கிழித்தெடுத்திடும்
மரண வலியை அனுபவித்த

குட்டிப் பாப்பாக்களின்
கதறல்கள் காற்றோடு
வெறும் காற்றாகவே
கலந்திருந்த பிறகு

மொத்தமாய் அடங்கியிருந்த
பிஞ்சு தேவதைகளை

கையறு நிலையாய்
கலங்கிய கண்களோடு
வாய்க்கரிசி இட்டு
அனுப்பி வைத்தோம்
வானத்து தேவதைகளாய்...

மெழுகுவர்த்தி கரங்களோடு
கண்ணீர் அஞ்சலி
செலுத்தும் கூட்டத்தால்

இன்னமும் அந்த அரக்கர்களை
நோக்கி வீசப்படாத
எரிதழல் நினைத்தே...

மண்ணை விட்டு
மேல் எழும்பியிருந்த
உயிர்ப்பறவைகளைச் சுற்றி

அவைகளின்
கண்ணீர்த் துளிகள் மட்டும்
மின்னிக் கொண்டிருக்கின்றன

அந்த வானத்தின்
கொதிக்கும் நட்சத்திரங்களாய்

பி. ஹேமா முசிறி



# சிறுவர்கள் சங்கமம்

## கடம்பவனத்து முயல் குடும்பம்

கடம்பவனத்துல அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணா, அக்கா, குட்டி என்று அழகானதொரு முயல் குடும்பம் வசித்து வந்தது. இதில் குட்டி முயல் அனைவருக்கும் மிகவும் செல்லம்.

அன்று காலையில் அம்மா முயல் கேரட் சாறு எடுத்து அனைவருக்கும் குடிக்கத் தந்தது. அப்போதுதான் தூங்கி விழித்த குட்டி முயல் 'அம்மா, எனக்கும் கேரட் சாறு தாருங்கள்' என்றது


'நீ இன்னும் காலைக்கடன்களை முடிக்கவில்லையே... முதலில் எழுந்திரி, போய் பல் துலக்கி, குளித்துவிட்டு வா' என்றது அம்மா முயல்.

'அம்மா... எனக்கு மிகவும் பசிக்கிறது மா, தயவுசெய்து அந்த சாறைத் தாருங்கள். குடித்தவுடன் முதல் வேளையாக குளிக்கிறேன் ' என்றது குட்டி முயல்.

'அம்மா... அம்மா... பசிக்கிறது ம்மா' குட்டி முயல் சொல்லிக்கொண்டு இருக்கும் பொழுதே அம்மா முயல் அடுக்களைக்குள் போய்விட்டது.

எழுந்திரிக்காமல் அதே இடத்தில் படுத்துக் கொண்டு இருந்தது குட்டி முயல். அப்போது அங்கு வந்த பாட்டி முயல் 'என்னாச்சு என் செல்வத்திற்கு...' என்று கேட்கவும் 'பசிக்கிறது பாட்டி, அம்மாவிடம் கேரட் சாறு கேட்டால் பல் துலக்க சொல்றாங்க' சிணுங்கியபடி சொன்னது குட்டி முயல்.

'அப்படியா... என் செல்வத்திற்கு பசிக்கிறதா? இன்று ஒருநாள் பாட்டி கேரட் சாறு தருகிறேன். குடிச்சிடுங்க... ஆனால் நாளையிலிருந்து அம்மா சொன்ன பேச்சுக் கேட்கணும், அவங்க உங்களின் நல்லதுக்குத்தான் சொல்வாங்க ' சொல்லியபடியே பாட்டி கேரட் சாறை எடுத்து வந்தார்.



அதற்குள் அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்த அம்மா' உங்களால் தான் குட்டி இவ்வளவு அடமாக இருக்கிறான். நீங்கள் அவன் கேட்பதை எல்லாம் தட்டாமல் தருவது தவறு' என்று தடுத்தார்.

'ஒருநாள் தானேமா' பாட்டி சொல்ல வும் 'குட்டியோட அம்மா சொல்வது சரிதான், நீ அமைதியாக இரு' தாத்தா முயல் எடுத்துக் கூறினார்.

தன்னால் தான் இந்த வாக்குவாதம் என்று உணர்ந்த குட்டி முயல் வேகமாக எழுந்து காலைக்கடன்களை முடிக்க ஓடியது. அதனைப் பார்த்த அப்பா முயல்' இன்று ஒருநாள் மட்டுமல்ல, நாள்தோறும் காலையில் உன் கடமைகளை சரிவர நிறைவேற்று. அன்றைய பொழுதே நலமாக இருக்கும் ' என்றார்.

'சரிங்கப்பா' என்றவாறே ஓடியது குட்டி முயல்.

'அதற்குள் பக்கத்து அறைக்குள் இருந்து ஒரே சத்தம். என்னவென்று எல்லோரும் ஓடிச் சென்று பார்த்தால் அக்கா முயலும், அண்ணா முயலும் தொலைக்காட்சியில் எந்த நிகழ்ச்சி பார்ப்பது என்று வாக்குவாதம். அக்கா முயல் 'டோராபுச்சி' பார்க்க வேண்டும் என்று சொல்ல, அண்ணாவோ 'சின்சான்' பார்க்க வேண்டும் என்று சொல்ல இருவருக்கும் வாக்குவாதம் ஆரம்பமானது.

'காலையில் யாராவது தொலைக் காட்சி பார்ப்பார்களா... எழுந்ததும் சிறிது நேரம் உடற்பயிற்சி செய்யலாம் இல்லையா?' அப்பா சொல்லவும் 'தொலைக்காட்சியையும், அலைபேசி யையும் அதிகம் பயன்படுத்து வதால் கண்களுக்கு பாதிப்பு அதிகம் ஆகிறது. நரம்புகள் பாதிக்கப்பட்டு உடல்நலம் கெடுகிறது. அதனால் அவசியத் தேவைக்கு மட்டும் பாருங்கள் என்று எத்தனை தரம் சொல்லுவது?' தாத்தா முயல் சத்தமிடவும் 'சரிங்க தாத்தா' என்றவாறே உடற்பயிற்சி செய்யத் தொடங்கினார்கள்.

அதைப் பார்த்த குட்டி முயலும் நான் காலைக்கடன்களை முடித்து விட்டேன் என்றவாறே வேகமாக ஓடிவந்து உடற் பயிற்சி செய்தது.

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை

# விடுகதை

1.

**நான் இன்றி**
**யாரும் இல்லை**
**நூல் அன்றி**
**எதுவம் இல்லை**

2.

**மண் தாங்கும்**
**கூந்தல் அவன்**
**விண் ஓங்க**
**மண் சென்றவன்**

3.

**அழகான ஓர்**
**வெள்ளை பந்து**
**என்றும் விளையாட**
**முடியாத பந்து**

**இந்துமதி.ப**

விடைகள்





1. ஆடை
2. வேர்
3. நிலா





எழிலி (எ) ச.ஞா.எழிலரசி
1ஆம் வகுப்பு தமிழ் வழி
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்





க.கோகுலஸ்ரீ 5ஆம்வகுப்பு ஊ ஒ
நடுநிலைப்பள்ளி சின்னவேங்காவயல்
காரைக்குடி



பா.நித்யா



# எறும்பு

**ஜீ.மைத்ரேயி**
வந்தவாசி



பாபு திருச்சியில் வசித்து வந்தான். மூன்றாம் வகுப்பு படித்து வந்தான். அவனின் அப்பா குமார், அம்மா உமா இருவரும் ஆசிரியராக உள்ளனர். உயர்நிலைப் பள்ளியில் அப்பாவும், தொடக்கப் பள்ளியில் அம்மாவும் பணிபுரிகின்றனர்.

பாபு முழு நேரமும் தனியாக வீட்டிலேயே இருப்பான். நண்பர்கள் யாரும் இல்லை யாரிடமும் பேச மாட்டான். ஊரிலிருந்து தாத்தா பாட்டி வந்தாலும் சிறிது நேரம் பேசிவிட்டு தனியாக அறைக்குச் சென்று விடுவான்.

இந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டும் என பாட்டி கூறினார்கள். ‘சரி... சரி இப்போது எதுவும் பேசாத மே மாதம் விடுமுறைக்கு ஊருக்கு வரட்டும். அப்போது அவனுக்குச் சொல்லிப் புரிய வைக்கலாம்‘ எனத் தாத்தா கூறினார்.

பாபுவின் அப்பாவும் ‘ஆமாம் அப்பா அவனுக்கு நட்பின் மகிழ்ச்சி குறித்து அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். தனியாக இருந்தால் மகிழ்ச்சி சிறிது நேரம் மட்டுமே இருக்கும். அதுவே நண்பர்களோடு சேர்ந்து நேரம் கழித்தால் நினைக்கும் போதெல்லாம் இனிமையாக இருக்கும் எனப் புரிய வைக்க வேண்டும்‘ என்றார்.

தேர்வு முடிந்தது கோடை விடுமுறையும் வந்தது. தாத்தா ஊரான பில்லூருக்கு அனைவரும் சென்றனர்.

அது ஒரு அழகிய கிராமம். கிராமத்தில் தோட்டம், வீடு, பறவைகள் கீச் கீச் சத்தம், வயல்களில் இருந்து வரும் இளங்காற்று, வண்டுகளின் ரீங்காரம் என கிராமத்தின் அழகைக் கூறிக் கொண்டே போகலாம்.

அதிகாலை எழுந்தவுடன் பாபுவின் தாத்தாவை அழைத்து போக அவரின் நண்பர் வந்து இருந்தார். ‘இன்று சந்தை வா போகலாம்‘ என்று கூறினார். ‘ஆமாம் ஊரிலிருந்து மகன், பேரன் எல்லாம் வந்திருக்கிறார்கள். வா போகலாம் நிறைய வாங்க வேண்டும்‘ என்று தாத்தா சொன்னார்.

அடுத்ததாக பாட்டியும், பக்கத்து வீட்டு அத்தையும் குளத்துக்குத் தண்ணீர் எடுத்து வரச் சென்றனர். இன்னும் சிலர் கூடச் சென்றனர்.

அப்பாவிடம் பாபு கேட்டான் ‘நீங்கள் காய்கள், பழங்கள் வாங்க தனியாகத்தானே திருச்சியில் போவிங்க. அம்மாவும் தனியாகத் தானே கோயிலுக்குப் போவாங்க. ஆனால் இங்கு மட்டும் கும்பல், கும்பலாக ஆலமரத்தடியில் உட்கார்ந்து பேசுகிறார்கள். எங்கே போனாலும் தனியாக செல்லாமல், நிறைய பேர் ஒன்று சேர்ந்து போகிறார்கள். எறும்புகள் சாரை சாரையாக செல்கிறது. காக்கா, குருவிகள்

கூட்டமாக இருக்கிறது .எதுவும் தனியாக இல்லை' என்று கேட்டு முடிக்கும் போது தாத்தா சந்தையிலிருந்து நிறைய வாங்கி வந்திருந்தார்.

'ஏன் தாத்தா இவ்வளவு?' என்றான் பாபு.

'நாளைக்கு ஊரிலிருந்து அத்தை, மாமா அவர்களின் பசங்க இரண்டு பேரும். சித்தப்பாவின் பசங்க இரண்டு பேரும் அனைவரும் விடுமுறைக்கு வருகிறார்கள்' என்றார் தாத்தா.

நாளை முதல் நம் வீடு முழுவதும் ஒரே சவுண்டாக இருக்கும் அப்பா. நாம் ஊருக்கு போகலாம் என்றான் ஏன் என்றால் இங்கு அனைவரும் வருவாங்க ஒரே கூட்டமாக இருந்தால் எனக்கு பிடிக்காது' என்றான்.

பாட்டி உடனே 'வா தோட்டத்திற்குப் போய் தக்காளி, கறிவேப்பிலை, வாழை இலை, எடுத்து வரலாம்' எனப் பாபுவை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றார்.

எறும்பு புற்று பார்த்து கத்தினான் இங்கே இவ்வளவு எறும்பு என்றான். தாத்தா இவன் கத்தியதைப் பார்த்து பாம்பு தான் வந்தது என விரைவாக வந்தார்.

தாத்தா எறும்புகள் எப்போதும் தனியாக இருக்காது. ஒன்றின் பின் ஒன்றாக விரைந்து ஓடிக்கொண்டே இருக்கும். எதிரிகள் யாராவது வந்தால் ஒன்றாக சேர்ந்து கடித்து விரட்டுவார்கள். அயராது உழைத்துக் கொண்டே இருக்கும்.

நண்பர்களாக ஒன்று சேர்ந்து உணவைச் சேமித்து வைக்கும். அனைவரும் ஒன்றாக இணைந்து தான் புற்றைக் கட்டுவார்கள் எனக் கூறிக் கொண்டே போனார். அதன் பக்கத்தில் போகாதே, நம்மை அது ஒன்றாக சேர்ந்து கடிக்கும். ஒற்றுமையாக எப்பொழுதும் இருக்கும்' என்றார்.

அன்று இரவு தூங்கும் போது பாபுவின் கனவில் எறும்பு, காக்கா, குருவி என கூட்டமாக இருப்பது போல மாறி, மாறி வந்து கொண்டே இருந்தது.

மறுநாள் காலை அத்தை மகன்கள் இருவரும் வந்தார்கள். சிறிது நேரம் கழித்து சித்தப்பாவின் குடும்பமும் வந்தது. வீடு கூட்டமாக தென்பட்டது அம்மா, அத்தை, சித்தி, பாட்டி என பேச தொடங்கினார்கள். தாத்தாவும் மிக மகிழ்ச்சியாக காணப்பட்டார். இதைக் கண்ட பாபுவுக்கு புதியதாக இருந்தது. போகப்போக அனைவரிடமும் பேச தொடங்கினான். அனைவரும் பாபுவை புதியதாக பார்த்தார்கள்.

அவன் எறும்பிடம் இருந்து ஒற்றுமையுடன் நட்புடனும் பழக கற்றுக் கொண்டதை ஒரு கதையாக அனைவரிடமும் கூறினான்.

இதைக்கண்டு அவன் வீட்டில் உள்ள அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.





வே. க. ரோஹின் கவீ
திருப்பூர்.

# நண்பர்கள்

சு.பிரவந்திகா
பட்டாபிராம், சென்னை

வீட்டிற்கு ஒரே குழந்தையான எழிலரசன் நன்றாகப் படிப்பான். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் உடனுக்குடன் பதில் சொல்லுவான். ஆனால் அவனுக்கு நண்பர்களே இல்லை... ஒரேயொரு நண்பன் கூட இல்லை. அதனால் விளையாட்டு வகுப்பு, சாப்பிடும் இடைவேளைகளில் கூட எழிலரசன் படித்துக் கொண்டே இருப்பான்.

மாலை பள்ளி விட்டு வீட்டிற்கு வந்ததும் அவனின் அம்மாவிடம் கூடச் சரியாகப் பேசமாட்டான். வீட்டிற்குள் நுழைந்து உடை மாற்றியதும் படிப்பான். இரவு உணவிற்கு அம்மா அழைத்ததும் சாப்பிடுவான். உடனே படிப்பான். கொஞ்ச நேரத்தில் தூங்குவான். இவ்வளவே... வீட்டில் கூட யாரிடமும் சரியாக பேசமாட்டான்.

எழிலரசனின் அம்மா அவனிடம் அடிக்கடி "உனக்கு ஏன் நண்பர்களே இல்லை... வெளியே பார்..எல்லோருக்கும் எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள் என்று... அவங்களோட எல்லாம் போய் பேசிப்பழகு. நீயும் கூடச் சேர்ந்து விளையாடு" என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

ஒரு நாள் அம்மா சொன்னதும் எழிலரசன் ''சரிங்க அம்மா, நான் போகிறேன்" என்றவாறே வெளியே சென்றான். அங்கு விளையாடிக் கொண்டிருந்தவர்களின் அருகில் சென்று ''என் பெயர் எழிலரசன், நானும் உங்களுடன் விளையாடலாமா?" என்று கேட்டான்.

"வா... வா... எழில், என் பெயர் ரவி, இது மீனா, இது தமிழ்" என்று ஒவ்வொருவரையாக அறிமுகம் செய்த ரவி "நீ எப்போது விளையாட வருவாய் என்று ஆவலுடன் காத்திருந்தோம், வா விளையாடலாம் " என்றான் ரவி.

சிறிது நேரம் விளையாடிய பின்னர் "உங்களுடன் விளையாடுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் எங்கள் வீட்டிற்கு வருகிறீர்களா?'' எழில் கேட்டதும் ''நாளைக்கு சாயந்திரம் வருகிறோம் எழில்" என்றாள் மீனா

மறுநாள் மாலை ரவி, மீனா, தமிழ் மூவரும் எழிலரசனின் வீட்டிற்குச் சென்றனர். எழில் அவர்களை வரவேற்று அமரச் செய்தான். எழிலின் அம்மா அனைவரும் சாப்பிட தின்பண்டங்கள் தந்தார்கள்.

சாப்பிட்டுக் கொண்டே வீட்டைச் சுற்றிப் பார்த்தனர். வீடு முழுக்க புத்தகங்களாக நிறைந்து இருந்ததைப் பார்த்த ரவி "என்ன எழில்... நீ நிறைய படிப்பாயா? இவ்வளவு புத்தகங்கள் இருக்கின்றன... எல்லாவற்றையும் படித்து விட்டாயா?" என்று கேட்டான்.

"இல்லை ரவி, இன்னும் சில புத்தகங்கள் படிக்க வேண்டியது உள்ளது"

"ஓஓஓஓ... வாசிப்பு பழக்கம் மிகவும் நல்லதுனு எங்கள் ஆசிரியர் சொல்லியிருக்கிறார், நீ நிறைய புத்தகங்களை தொடர்ந்து வாசிக்கிறாய், நாங்களும் படிக்க முயற்சி பண்ணுகிறோம் எழில்" என்றாள் மீனா.

''சந்தோசம் மீனா, ஆனால் அவ

னுக்கு நண்பர்களே இல்லையே, விளை யாடுவதும் கிடையாது" எழிலின் அம்மா கவலையுடன் சொல்லவும் "என்னங்க அத்தை சொல்றீங்க? எழிலுக்கு நண்பர்கள் இல்லையா?" ஆச்சரியமாகக் கேட்டாள் தமிழ்

"ஆமாம்... நீங்கள் மூவரும்தான் எழிலின் முதல் நண்பர்கள்"

"எங்களுக்கு இன்னும் நிறைய நண்பர் கள் இருக்கிறார்கள். நாங்கள் அவர்களை எழிலுடன் பழகச் சொல்கிறோம். அப் படியே எழிலுக்கும் நிறைய நண்பர்கள் கிடைத்து விடுவார்கள்" ரவி சொன்னான்.

அன்று முதல் எழிலரசனின் நண்பர்கள் எண்ணிக்கை அதிகமாகியது. எழில் வீட்டி லும், வெளியிலும் அனைவருடனும் பேசிப் பழக ஆரம்பித்தான். பள்ளியிலும் விளையாட்டு வகுப்பில் விளையாடத் தொடங்கினான். உணவுஇடைவேளையில் மற்றவர்களுடன் பேசிப் பழகினான்.

ஒருநாள் உணவு இடைவேளையின் பொழுது வகுப்பிலிருந்து வெளியே வந்த எழில், பள்ளி மைதானத்தில் ரவி, மீனா, தமிழைப் பார்த்தான். ''ஏய்... நீங்கள் எல்லோரும் இந்தப் பள்ளியிலா படிக்கிறீர்கள்?" ஆச்சரியமாக கேட்டான்.

"ஆமாம் எழில்... ஆனால் இப்போது தான் உன்னை வகுப்பறைக்கு வெளியே பார்க்கிறோம்" என்றார்கள்

அன்று ஞாயிற்றுக்கிழமை. எழிலரனும் அவனது நண்பர்களும் இணைந்து "கொக்கோ" விளாயாடினார்கள். காலை யில் ஆரம்பித்த விளையாட்டு மதியம் வரை தொடர்ந்தது. மதியம் உணவு இடைவேளை. மீண்டும் விளையாட்டு மாலை வரை தொடர்ந்தது. மாலை எழிலரசன் அம்மா விளையாடியது போதுமென படிக்கச் சொன்னார்கள். எழிலரசனும் படித்தான்.

அடுத்த வாரத்தில் அரையாண்டுத் தேர்வு வந்தது. அதனால் எழிலரசனின் நண்பர்கள் மாலையில் விளையாட வராமல் படித்துக் கொண்டு இருந்தனர். எழிலரசன் அவர்களின் வீட்டிற்குச் சென்று விளையாட்டு மைதா னத்திற்கு அழைத்தான். அனைவரும் படிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

"படிக்கத்தான் உங்களை அழைக்கி றேன். அனைவரும் உங்களின் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வாருங்கள். சேர்ந்து படிப்போம். ஒருவருக்குத் தெரியாததை தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்து படிக்கலாம். கலந்துரையாடி படிப்பதால் பாடம் எளிதாகப் புரியும்" என்றான்.

எழில் கூறியதைக் கேட்ட நண்பர்கள் அனைவரும் புத்தகங்களுடன் மைதானத் திற்கு வந்து இணைந்து படித்தனர். இதனால் அனைத்துப் பாடங்களையும் விரைவில் புரிந்து படித்தனர். இறுதியாக சிறிது நேரம் விளையாடிய பின்னர் வீட்டிற்குச் சென்றனர். நாள்தோறும் இவ்வாறே படிப்பு, விளையாட்டு என்று கழிந்தது.


அரையாண்டுத் தேர்வில் அனைத்து நண்பர்களும் அதிக மதிப்பெண் பெற்ற னர். இதனால் பெரிதும் மகிழ்ந்த அவர்கள் நாள்தோறும் மாலைவேளையில் விளையாடிய பின்னர் சேர்ந்து படிப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டனர்.



## கொடை

இம்மை நிலையில்
பிறரிடம் வேண்டி
வறுமையே இதன் காரணி
உதவிகள் பல பெற்று
பொருள் ஈண்டு
தேவைகளை பூர்த்தி செய்து
நெறிமுறையோடு பின்பற்றி
இகழாமல் இருப்பது
மனதார உதவி புரிந்து
கொடுப்பவரின் குணம் கண்டு
மனமகிழ்வால் மகிழ்ந்து
“இல்லை” என்றுரைக்காது
உதவிடும் மனதினை
மெய்யாக காணப்பட்டு
திகழும் உள்ளமே
கொடையின் வரமே

**ம.லவன்**
சென்னை



## இரவல்

பிறருக்கு உதவி
சுயநலமில்லா பதவி
உதவும் பண்பே இதன் கருவி
ஈதலின் குணமே
வாழ்வதற்கான வரமே
எல்லாவற்றிலும் சிறந்தது அறமே
இரந்து கேட்போரின் மனமே
ஒளிவுமறைவில்லாத உறவே
கொடுப்பதால் கிடைக்கும் மனநிறைவே
இருப்பதை கொடுக்கும் குணநலமே
தேவையற்றதே சுயநலமே
ஈதல் பண்பில்லையேல்
வித்திடும் தலைக்கணமே
சினங்கொள்ளா மனிதநேயமே
இரப்போர்க்கு உதவிடுவோம்
இரக்கக் குணத்தோடு இருந்திடுவோம்


**ம.குசன்**
சென்னை





க. யாழினி,
2ஆம் வகுப்பு





க.ஷரிஷ் ராகவேந்திரன்
7ஆம் வகுப்பு



# ஆண்ட்ராய்டு கோமாளிகள்

## (இரு நண்பர்களின் வீடியோ கால் தொலைபேசி உரையாடல்)

*வினோத் : டே மச்சி எப்படி டா இருக்க ?*

*செபாஸ்டின் : நல்லா இருக்கேன்டா, நல்ல நாளாம் திருநாளாம் இல்லாம எப்பவுமே போன் அடிக்காதவன் இப்ப திடீர்ன்னு அடிக்கிற ?*

*வினோத் : டே மயிரு மாதிரியெல்லாம் பேசாதே நீ என்ன கிழவியாடா பழமொழியெல்லாம் பேசிக்கிட்டு இருக்க இங்க பாருடா நேரா மேட்டருக்கு வரேன், என்னோட வைப் என் ஏ. டி. எம் கார்டுல பின் நம்பர் தப்பா போட்டதால என் கார்டு லாக் ஆயிடிச்சு என் அக்கௌன்ட்ட* 24 HOURS *ஆக்டிவேட் பண்ண முடியாதுடா .*
*மீட்டர்ல ஹீட்டர் வச்ச மாதிரி பேசாம பட்டுன்னு நான் சொல்லுற அக்கௌன்ட் நம்பருக்கு ஒரு பிப்டி தௌசண்ட் அனுப்பி வைடா*

*செபாஸ்டின் : டே மச்சான் அதுவந்து நாளைக்கு ???*
*வினோத் : டே ஏதாவது ரீசன் எல்லாம் சொல்லி அனுப்பாம விட்டிடாதே ரொம்ப அவசரம் அதான் கேட்குறேன்* 24 HOURS *நீ கொடுத்த பணத்தை திருப்பி கொடுத்திடுறேன் என்று சொல்லி ஒரு அக்கௌன்ட் நம்பரையும் அனுப்பி விட்டு போனை கட் செய்தான் வினோத் .*
*(அடுத்த பத்து நிமிடத்தில் வினோத் சொன்ன அக்கௌன்ட் நம்பருக்கு பணத்தை அனுப்பி வைத்தான் செபாஸ்டின் )*

*ட்ரிங் .. ட்ரிங் ..*

*ஹலோ மச்சி செபாஸ்டின் எப்படிடா இருக்க ?*

WHAT A PLEASANT SURPRISE
*இன்னைக்கு எல்லாருக்கும் என்ன ஆச்சுடா .போன் அடிக்காதவன் எல்லாம் என்னைக்கும் இல்லாத திருநாளாம் இன்னைக்கு போன் பண்ணுறீங்க*

*என்ன மச்சி சொல்லுற ?*

*ஆமாம் மச்சி இன்னைக்கு வினோத் கூட போன் பண்ணான்*
*(செபாஸ்டின் அப்படி சொல்லவும் ஷியாம் அதிர்ச்சியானான் )*

*என்ன மச்சி சொல்லுற*
*ஆமாம் மச்சி அவன் ஏ .டி .எம் கார்டு லாக் ஆயிடிச்சுன்னு சொல்லிட்டு ஐம்பதாயிரம் பணம் வேற ஒரு அக்கௌன்ட்க்கு அனுப்ப வச்சான் மச்சி என்னது உன்னையும் அனுப்ப சொன்னானா ?*

*ஆமாம் மச்சி*

*என்னையும் அனுப்ப சொன்னான் மச்சி நானும் அனுப்பி வச்சேன் .*

*இருவரும் சேர்ந்து வினோத்துக்கு கான்பெரென்ஸ் கால் செய்தனர்*
*என்ன மச்சி கான்பெரென்ஸ் கால்*

எல்லாம் பண்ணுறீங்க

மச்சான் காலைல எங்க ரெண்டு
பேர்கிட்டயும் போன் பண்ணி காசு
கேட்டியே ?

வாத் எ பக் என்னடா பேசுறீங்க..
காலையில இருந்து என் பொண்டாட்டி
கூட ஸ்பென்சர்ஸ்ல ஷாப்பிங்
பண்ணிக்கிட்டு இருக்கேன் .நான்
எப்படிடா உங்களுக்கு அந்த நேரத்துல
போன் பண்ணி பணம் கேட்கப்போறேன்
இருவரும் அதிர்ச்சியில் போனை
வைத்தனர் .

டீப் பேக் ஆப் மூலம் தமன்னா பாடலுக்கு
ஏ .ஐ உதவியால் சிம்ரனாக மாறி
நடனமாடி கொண்டிருந்தார்

ரா ஏன் ராவெல்லாம்
லாங் ஆவுதே
ராப்பரிக்கு ராவே ராவே
ரா நீ பாத்தலே
தீ ஆவுதே
தீ பிடிக்க ராவைய்யாவே
மச்சத்த மொறச்சா
அச்சத்த கொரச்சா
இச்சத்த மறச்சா
மிச்சம் இல்லாம
மச்சமே நுவ்வைய்யா
அச்சமே லேதைய்யா
இச்சமே நேனைய்யா
மிச்சோம் ஏமைய்யா
வா நு காவலையா
நு காவாலி
ரா ரா ரா ரா ரா ரா ரா ரா
வா நு காவலையா
நு காவாலி
ரா ரா ரா ரா ரா ரா ரா ரா

என்ற பாடல் அவர்களின் காதுக்குள்
வேகமாக கேட்டு கொண்டிருந்தது

மறுநாள் செய்தியில்

குமுதம் வலையொளி செய்தி சேனலில்
இனிமேல் ஏ .ஐ .மூலம் செய்தி வாசிக்க
படும் என்பதை பெருமையுடன் சொல்லி
கொள்கிறோம் .

வருங்கால உலகம் ஏ .ஐ தான்..
பிற்காலத்தில் மனிதன் கூட ஏ .ஐ .க்கு கீழ்
பணி செய்ய கூடிய நிலைமை வந்தாலும்
ஆச்சரியப்படுவதற்கில்லைன்னு செய்தி
பெருமையுடன் நிறைவுற்றது .

எண்ணமும் - எழுத்தும்

**நௌஷாத் கான் .லி**

## பழைய புத்தகம்

கிழிந்த பக்கங்களில்
அடிக்கோடிட்ட விரல் தடங்கள்
கடைசியாக புரட்டிய
பக்கத்தில் புதைந்திருக்கும்
நினைவுக் கயிறு
இலட்சிய வசனங்களோடு
தூசியேறிய முகப்பு
காதுமுனை மடங்கிய
கவிதைகளுக்கான பக்கங்கள்

இவற்றோடு பழைய
புத்தகமொன்றில்
கிழிந்துவிட்ட கடைசி பக்கமும்
டயல் செய்யவியலாத
தொலைபேசி எண்ணும்!

**ரகுநாத் வ**
மதுரை

# ஹைக்கூக்கள்

பருவத்திற்கு ஏற்ற பயிர்
மண்ணின் வளம் கெடாது இருக்க
முன்னோர் வளர்த்த உயிர்

பாட்டி வைத்திய திறம்
பக்க விளைவில்லாது பக்குவத்தோடு
பாரம்பரியமாய் காத்த திரம்

வேட்டி சட்டை தரி
தரணியிற் சிறந்த தமிழன் அடையாளம்
அழியாது நெசவுத் தறி

ஒரே நாள்தான் விருந்து
தொடர்ந்து ஆணியடிக்க முயல
ஆகுமே கசப்பு மருந்து

புளிய மரத்தடி கிலி
பேயில்லை பிசாசுமில்லை நச்சுக் காற்றே
மூட நம்பிக்கையை கிழி

கரிகாலன் கட்டிய கல்லணை
தொழில் நுட்பம் வளரா காலத்தே
அசாத்திய தமிழனின் படிப்பினை

***ராஜூ ஆரோக்கியசாமி.***



***ஹைக்கூ என்றால் என்ன?***

ஒரு ஹைக்கூ என்பது மூன்று வரிகளில், பதினேழு எழுத்துக்கள் கொண்ட வடிவத்தைக் கடைப்பிடிக்கும் ஒரு குறுகிய, சந்தம் இல்லாத கவிதையாகும் .

ஹைக்கூ என்பது நீண்டதல்ல.

ஆனால் எழுதுவதற்கு அவ்வளவு எளிதான வடிவமல்ல.

பயிற்சியும், முயற்சியும் இருக்க ஹைக்கூ எழுதல் வேடிக்கையாகவும் கூட இருக்கிறது!

இந்த வடிவம் ஜப்பானில் உருவானது, ஆனால் இன்று உலகெங்கிலும் உள்ள மக்கள் பல்வேறு மொழிகளில் ஹைக்கூவைப் படிக்கிறார்கள் மற்றும் எழுதுகிறார்கள். வெவ்வேறு மொழிகளின் தனித்துவமான பாடத்திட்டங்கள் மற்றும் இலக்கண அமைப்புகளின் காரணமாக, ஹைக்கூ மொழிக்கு மொழிக்கு சற்று வித்தியாசமான வடிவங்களைக் கொண்டுள்ளது.

பாரம்பரியமாக, ஒரு ஹைக்கூ ஒரு சிறிய தருணத்தை சித்தரிக்கிறது மற்றும் ஒரு இடைநிறுத்தம் அல்லது மூடல் உணர்வை உருவாக்கும் கிரேஜி (ஒரு "வெட்டு வார்த்தை") உள்ளடக்கியது.

***பொதுவான ஹைக்கூ கருப்பொருள்கள் என்ன?***

பாரம்பரியமாக, ஹைக்கூ பெரும் பாலும் இயற்கை மற்றும் பருவகால மாற்றங்கள் பற்றியது. காலப்போக்கில், கவிஞர்கள் ஹைக்கூவில் உள்ள பிற கருப்பொருள்களை ஆராயத் தொடங்கினர். பாரம்பரிய மற்றும் நவீன ஹைக்கூ இரண்டிலும்,

கவிதை ஒரு சிறிய தருணத்தில் கவனம் செலுத்துவது மற்றும் வியத்தகு விளைவுக்காக தனித்துவமான படங்களை இணைப்பது பொதுவானது.

**ஹைக்கூவை அமைப்பதற்கான விதிகள் என்ன?**

பாரம்பரியமாக, ஒரு ஹைக்கூ பின் வரும் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது:

- இது மூன்று வரிகள் கொண்டது.
- இது முதல் மற்றும் மூன்றாவது வரிகளில் ஐந்து அசைகளைக் கொண்டுள்ளது.
- இது இரண்டாவது வரியில் ஏழு அசைகளைக் கொண்டுள்ளது.
- அதன் வரிகள் சந்தம் இல்லை.
- இது ஒரு கிரிஜி அல்லது வெட்டு வார்த்தை அடங்கும்.
- இது ஒரு கிகோ, ஒரு பருவகால குறிப்பை உள்ளடக்கியது.

**மற்ற கவிதைகளிலிருந்து ஹைக்கூ எவ்வாறு வேறுபடுகிறது?**

பாரம்பரியமாக, ஹைக்கூ என்பது இயற்கையைப் பற்றியது. வரலாற்று மற்றும் நவீன ஹைக்கூ கவிஞர்களால் ஆராயப்பட்ட ஒரு பொதுவான கருப்பொருள் பருவகால மாற்றங்கள். பெரும்பாலும், ஒரு ஹைக்கூ ஒரு நேரத்தில் ஒரு கணத்தில் கவனம் செலுத்துகிறது மற்றும் பல சந்தர்ப்பங்களில், இரண்டு காட்சிகளை இணைக்கிறது.

மாட்சுவோ பாஷோவின் ஹைக்கூவின் இந்த எடுத்துக்காட்டைப் பாருங்கள், ஹைக்கூ ஒரு தீவிர கவிதை வடிவமாக அங்கீகரிக்கப்படுவதில் அவரது பணி குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது:

ஒரு பழைய அமைதியான குளம். . .
ஒரு தவளை குளத்தில் குதிக்கிறது,
தெறிக்க! மீண்டும் மௌனம்.

மற்ற கவிதை மற்றும் இலக்கிய வடிவங்களைப் போலவே, ஹைக்கூவும் பல நூற்றாண்டுகளாக உருவாகி வருகிறது. பாரம்பரிய ஹைக்கூ ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத் தேவைகளை கடைபிடிக்கும் போது-கீழே உள்ள பிரிவில்-நவீன ஹைக்கூ பெரும்பாலும் இந்த விதிகளிலிருந்து விலகி புதிய வடிவங்களை பரிசோதிக்கவும் புதிய விஷயத்தை ஆராயவும் செய்கிறது.

**ஹைக்கூ எழுத 4 படிகள்**

ஒரு ஹைக்கூ எழுதுவது வேறு எந்த வகையான கவிதை அல்லது பிற உரையை எழுதுவதைப் போன்றதே: இது கீழ்க்காணும் எழுதும் செயல்முறையைப் பின்பற்றுகிறது.

**1 கருத்துதிர்ப்பு**

யோசனைகளை உருவாக்க மூளைச் சலவை செய்வது முதல் படி. நீங்கள் எதைப் பற்றி எழுத விரும்புகிறீர்கள்? மாறும் பருவங்கள் மற்றும் இயற்கையின் பிற பகுதிகள் போன்ற பாரம்பரிய தலைப்புகளை உங்கள் ஹைக்கூவில் ஆராய விரும்புகிறீர்களா? அல்லது உடன் பிறந்தோருடனான உங்கள் உறவு, டிரெண்டிங் கதை அல்லது உங்களின் பொழுதுபோக்குகளில் ஒன்று போன்ற நவீனமான ஒன்றை ஆராய விரும்பு கிறீர்களா?

**2 முன் எழுதுதல்**

உங்கள் எல்லா யோசனைகளையும் எழுதுங்கள். செயல்முறையின் இந்த பகுதி முன் எழுதுதல் என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது உங்கள் மூளைச்சலவை மற்றும் வெளிப்புறத்தை உருவாக்குவதை உள்ளடக்கியது. ஒரு ஹைக்கூ மூலம், நீங்கள் ஒரு முழு நீள குறிப்பை எழுதப் போவதில்லை, ஆனால் உங்கள் ஹைக்கூவை எவ்வாறு ஒழுங்கமைக்க விரும்புகிறீர்கள் அல்லது இலக்கண அமைப்புக்கு ஏற்றவாறு வெவ்வேறு வார்த்தை சேர்க்கைகளுடன் விளையாடுவதை நீங்கள் கவனிக்கலாம். மேலும், கவிதை எழுதுவதற்கான பொதுவான விதிகளைப் பற்றி சிந்தியுங்கள். இவை உங்கள் ஹைக்கூவுக்கான தேவைகள் அல்ல, ஆனால் அவை பயனுள்ள வழிகாட்டுதல்களாக இருக்கலாம்.

முன் எழுதும் கட்டத்தில், நிறுவப்பட்ட ஹைக்கூ கட்டமைப்பை நீங்கள் கடைப் பிடிப்பீர்களா அல்லது இலக்கண வடிவற்ற ஹைக்கூவை எழுதுவீர்களா என்பதை முடிவு செய்யுங்கள். நீங்கள் எழுதும் வரிகள் ஐந்து-ஏழு-ஐந்து வடிவத்தில் சரியாகப் பொருந்தவில்லை என்றால், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் மனதை மாற்றிக்கொள்ளலாம், ஆனால் ஆரம்பத்தில் இருந்தே உங்கள் வடிவமைப்பைப் பற்றிய யோசனையைப் பெற இது உதவியாக இருக்கும்.

**3 எழுதும் நேரம்**

நீங்கள் ஐந்து - ஏழு - ஐந்து வடி வமைப்பைப் பின்பற்றுகிறீர்களோ இல்லை யோ, வார்த்தைகளுடன் விளையாட உங்களுக்கு இடமளிக்கவும். சொற்களின் எண்ணிக்கையின்படி வார்த்தைகளைக் கூட்டி, அவை எவ்வாறு ஒன்றாக ஒலிக்கின்றன என்பதைக் கேட்க சத்தமாகச் சொல்லுங்கள். உங்கள் ஹைக்கூவை நீங்கள் சத்தமாக இசைக்கத் திட்டமிட்டாலும் இல்லாவிட்டாலும் இதைச் செய்யுங்கள் - எந்தவொரு கவிதையின் முக்கிய பகுதியும் அதன் தாளமும் ஓட்டமும் ஆகும், எனவே உங்கள் சொற்களையும் விஷயத்தையும் பூர்த்தி செய்யும் துடிப்பு உங்களுக்கு கிடைத்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு வரைவை எழுதியவுடன், அதை சிறப்பாக சிறிது நேரம் கொடுங்கள். புதிய கண்களுடன் உங்கள் வேலையை மறுபரிசீலனை செய்யும் போது நீங்கள் சிறந்த எடிட்டராக இருப்பீர்கள், எனவே உங்கள் முதல் வரைவு முடிந்ததும், வேறு ஏதாவது செய்ய சிறிது நேரம் ஒதுக்குங்கள்.

**4 திருத்துதல்**

சுமார் இருபத்தி நான்கு மணிநேரம் கழித்து, உங்கள் ஹைக்கூவுக்கு மீண்டும் வாருங்கள். அதை மீண்டும் உரக்கப் படித்து, அது எப்படி ஒலிக்கிறது என்பதைக் கேளுங்கள். நீங்கள் ஒரு மோசமான எழுத்துக்களை அல்லது வரைவை முடித்த பிறகு நீங்கள் கவனிக்காத வலுவான வார்த்தையை மாற்றக்கூடிய இடத்தைப் பிடிக்கலாம். உங்கள் ஹைக்கூவை வலுவான இரண்டாவது வரைவாக வடிவமைக்க இந்த மாற்றங்களைச் செய்யுங்கள்.

இந்த கட்டத்தில், நீங்கள் முடிக்க முடியும். ஹைக்கூவை எழுதுவதே உங்கள் நம்பிக்கையாக இருந்தால், திருத்தப்பட்ட இரண்டாவது வரைவை முடித்ததன் மூலம் உங்கள் இலக்கை அடைந்துவிட்டீர்கள். ஆனால் உங்கள் வேலையை வெளியிடுவதே உங்கள் இலக்காக இருந்தால், அதுவே கடைசி படியாகும். உங்கள் ஹைக்கூவை நீங்களே ஒரு வலைப்பதிவில் வெளியிட லாம் அல்லது உங்கள் குழுக்களில்

பகிர்ந்து கொள்ளலாம் அல்லது அதை வெளியிடுவதற்காக ஒரு பத்திரிகை அல்லது புத்தகத்தில் சமர்ப்பிக்கலாம்.

பயிற்சியும், முயற்சியுமே எதையும் அயற்சியின்றி தொடருழைப்பில் வெற்றி களைக் குவிக்கும். அதுவே ஹைக்கூ எழுதலுக்கும் பொருந்தும். ஹைக்கூ எழுதத் தெரியாவிட்டால் கவிஞரே இல்லை எனும் நிலை தற்போது. எனவே கற்றுக் கொள்வோம்... கட்டாயம் வெற்றி கொள்வோம்!

- லிண்ட்சே கிரமெர் (Lindsay Kramer) http://www.grammarly.com/blog/how-to-write-haiku/

- தமிழில் : **ராஜ் ஆரோக்கியசாமி**

# ஆன்மாவின் தம்புரா

கொட்டிக் கிடக்கும் கோடி அன்பைத்
தட்டித்திறக்க வேணும்
திருவுளமாதல் வேண்டாமா?

தோன்றாமலிருப்பது எவ்விதத்தில் கூடும்?
நேசத்தினவெடுத்த உள்ளங்களில்
பெருஞ்சத்தமிடுமே இந்த மௌனம்?

நாணமின்றிக் கூச்சமின்றி
நேசக்காற்று புயலாய் உயர்ந்து கிடக்கும்..
ஒரு விரலின் உன்மத்தப் பிடிமானத்திற்காய்
செஞ்சலித்தே ஏங்கும்

நங்கணத்தின் சிறகுகளில் சூழ்ந்த
பிரபஞ்ச வளியாகவும்
கடலின் ஆழம் வரை
சேர்ந்த ஈரலிப்பாகவும்
அடர்ந்து வியாபித்திருக்கும்
நேசத்தை எப்படி இறக்கி வைப்பது?

இந்நேசத்துயரத்தைக் கூட்டாக
சுமந்து வருகையில்
வெறுமையின் சாளரத்தை திறந்து வைக்கிறாய்
அயர்ச்சியிலும் சலனமின்றி
யாசிக்கும் பித்தி நானாகிறேன்

பேதலிக்கும் சூட்சுமங்கள்
பலநூறில் பாண்டித்தியம்
பெற வேண்டுமா உன் ஆன்மாவின்
தம்புராவை உயிர்ப்பிக்க?
உன் பாதையில் ரோஜாக்களாய்ப்
பதியமானதும்
உன் போதையில் கவித்துவ
ஜீவநாதத்தில் பீற்றிக்கிடந்ததும் அறிவாயா?

உன் நேசத்தின் மந்திர உச்சாடனங்களை
மனனம் செய்யும் மழலையானதும்
அதிமேதகு அன்பின் துளிக்காய்
விரதமிருந்து மூர்ச்சித்ததும்
அணுக்கள் தோறும் பலகோடி மடங்கு
ஞாபகித்து தேகயாகம் பண்ணும்

செவிமடுக்கும் புன்னகைக்காக
சின்னஞ்சிறு வேண்டுதல்களின் பதில்களுக்காக
கேள்விச் சிறகுகள் வட்டமிடும்
ஆகாயவெளியில் காத்திருக்கிறேன்.
விழிப்புறும் நாள் வரையில்
தீராது தீராது என் தனிமையின் உரையாடல்கள்...

தீரும் வரை
ஒளித்து வைக்க முடியாத இரகசியங்களோடு
வாழ்வை நகர்த்த வேண்டும்...
அதுவரை
நேசத்தின் தாளலயத்தில் லயித்துப்
பிழைத்திருப்பேன்.



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

# தாய்மை

இருகை தட்டி
வருபவரிடம் யாசகம்
கரகரத்த குரலில்
தாய்மையின் பாசம்

ஒக்கத்தில் நழுவும்
குழவியை ஆரத்தழுவினான்
குழையும் சொல்லுடன்
தாய்மையின் இழைவு

வேலையின் அயர்வு
பேருந்து பயணம்
எதிர்கொள்ளும்
காந்தனின் குரல்

தாய்மையின் அன்பு
மணிப் பிரம்பு கையில்,;
கண்ணில் கண்டிப்பு.
எண்ணத்தில் சிறந்து
வார்த்தையில் தாய்மை
இனிமை

துரத்தும் பருந்து
பறக்கும் கிளி
கையில் தங்க
தாய்மையின் களி

சக்தி சிவமாக
சிவம் சக்தியாகும்
சந்நதம் கொண்டு ஆடும்
சக்தியின் தாய்மை

மண்ணில் கன்னன்
யாசகத்தில் கண்ணன்
குருதியில் கொடை
தாய்மையின் கனிவு

கையில் காசின்றி
இருக்கையில் முதியவள்
நடத்துனர் காசை கையில்
அழுத்த சிரித்தது தாய்மை

கன்றின் சாவு தேர்க்காலில்
ஆவின் கதறல்
மனுநீதி மன்றில்

மருமகளின குரல்
தேநீர் அருந்துங்கள்.
சற்றே அமருங்கள்
தாயின் இங்கிதங்கள்

**சசிகலா விஸ்வநாதன்**

# வெள்ளை ராஜாக்கள்

இலவசமாகத் தந்ததாக
கோடி கோடியாக
விளம்பரம் செய்கிறார்கள்

குடிசைகளைக் காண
சொகுசு கார்களில்
வருகிறார்கள்
ஏழைப் பங்காளன் என
தம்பட்டம் அடிக்கிறார்கள்

கல்வி தந்தான்
தன் தலைவனென
ஒலிபெருக்கியில்
ஓயாது ஓடுகிறது பாட்டு
தேர்வு காலத்தில்...

நம் தலைகளை
அடமானம் வைக்க...
கறைகளில்லா
வெள்ளாடைகள்
கால்களிலும் விழுவார்கள்
காசும் கொடுப்பார்கள்

யார்
வென்றாலும்
ஒன்று மட்டுமே உண்மை
நீங்கள் குதிப்பது
மண்ணில் கலந்த
வ உ சி யின்
பாரதியின்
பகத்சிங்கின்
நேதாஜியின்
காந்தியின்
மார்பினில்

எங்கள்
கறைபடிந்த கைகள்
தூய்மையானது
வெள்ளை ராஜாக்களே!
குளுகுளு அறையில்
உங்கள் கைகளைத்
தொட்டுப் பாருங்கள்

உங்கள் கைகளை
சுத்தப்படுத்த
நீங்கள் உபயோகித்தது
பலரது கண்ணீரை

பணத்தில்
புரண்டுப் படுத்தாலும்
பதவி நாற்காலியில்
சுகமாக அனுபவித்தாலும்
காலத்தின்
கேள்வி அம்புகள்
உங்களைக் குத்தி
வீழ்த்தும்

சா. கா. பாரதி ராஜா



## என்னவோ ஏதோ

அலையென அலைகிற கண்ணுக்கோ - நீ
ஆறு சுவையின் சாப்பாடு
உலையென கொதிவரும் நெஞ்சுக்கோ - உன்
ஒற்றை சொல்லே ஏற்பாடு

சிலையென நிலைபெறும் தேகத்தை - உன்
சின்னச் சிரிப்பால் பூப்போடு
மலையென உயர்வியர் நீருக்கு - புணர்
மஞ்சப் பொழுதால் தீப்போடு

பொழிகிற உனதெழில்  பூப்பூத்த - உயர்
போதி மரமாய் பார்க்கின்றேன்
மொழிகிற இதழினை முன்பார்த்து - அம்
மோகக் கடலால் தோற்கின்றேன்

வழிகிற சிரிப்பினில் வாழ்வைநான் - அவ்
வாசல் முன்னே சேர்க்கின்றேன்
பிழிகிற உயிரினை பேனாவால் - கவி
பின்னித் தமிழை கோக்கின்றேன்.

ஏடி வரததராசன்

## எந்தன் காதல் நீயடி

.

பூவே பூவே சொல்லடி - உன்
புன்னகை யாலே கொல்லடி
தீவே தீவே நில்லடி - என்
தித்திப் பிதழால் மெல்லடி


என்பின் வருமா உன்னடி - அதை
இதமாய் ரசிக்கும் கண்ணடி
அன்பின் உருவே மின்னடி - என்
அருகே வந்தால் என்னடி

பார்க்கும் பார்வைத் தீயடி - உன்
பசியால் கொண்டேன் நோயடி
ஈர்க்கும் விரலால் மேயடி - இனி
இரவில் விரிப்பாய்ப் பாயடி

உன்போல் பிறக்கும் சேயடி - அது
உளறும் பெயரும் நீயடி
என்போல் வேண்டும் ஒன்றடி - அதை
இதயம் வைப்பாய் இன்றடி

.

தமிழ்நெஞ்சம் அமின்



MUTUR JMI PUBLICATION
jmi MUTUR
Offset Printing & Photocopy , Print Services
MINIMUM QUANTITY
100
40% OFF
Island Wide Free Delivery Available
Book Binding | Teachers Guide | Past Papers | Certificate | Assignment | Syllabus Notes & Books | Tution Class Tutes | Offset Work | Photo Printing | Album Printing | Advertisement & Leaflet |
FREE DELIVERY
Book Publication & Printing Center
Off-Set Printing
BOOK BINDING
PRINTING
Offset Printing
• Four Color to One Color
• 70 - 250 GSM Papers
• A5, A4, A3, Offset Printing
• Photocopy & Duplo
• Typing & Layouts
• Cover Design
• Visiting Card
Book Binding
• Perfect & Hard Binding
• Book Publication
• Glossy & Mett Lamination
• 50 - 120 Gsm Papers
• Magazine, Book, Project
• Publications Sponsorship
• Instalment Payment Available
Color Printing
• Four Color (Inject & Laser)
• 70 - 300 GSM Board & Papers
• A5, A4, A3, B5, Color Printing
• Certificate & Photos
• Layouts & Designing
• Visiting Cards, Invitation and All Types of Wedding Cards
• Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc
Mutur JMI
Contact Now
077 1020030
0262238593
Our Office
Bazar Mosque Road
Mutur - 04, 31200
Trincomalee, Sri Lanka
More Information
www.mutur-jmi.com
muturjmi@gmail.com
https://g.co/kgs/wBo6ob